சொல்லப்படுகின்றன. அவை பூர்வ மீமாஞ்சை, நியாயம், வைசேடிகம், வேதாந்தம், சாங்கியம், யோகம் என்பன. இவை ஆறும் ''ஷட் தரிசனங்கள்'' எனப்படும். இவையே ''இந்திய நாட்டு மெய்ப்பொருள் நூல்கள்'' எனக் கூறும் அளவிற்கு இவை முற்காலத்தில் மிக்க சிறப்பைப் பெற்று விளங்கின. இவை ஒவ் வொன்றும் ''சூத்திரம், சாத்திரம்'' என்னும் பெயர்களையும் உடையன.

சைவம், வைணவம் என இக்காலத்தில் சிறப்புற்று விளங்கு கின்ற இந்த இரு சமயங்களின் தொடர்பாக இத்தரிசனங்கள், அல்லது சூத்திரங்களுள் யாதொன்றும் காணப்பட்டாமை உற்று நோக்கத்தக்கது.

ஆகமம்

சைவம், வைணவம் – இரண்டும் தங்கட்கு உரிய சிறப்பு நூல்கள் ''ஆகமம்'' எனக் குறிக்கின்றன. 'ஆகமம்' என்பதற்கு 'வந்தது' என்பது பொருள். எங்கிருந்து வந்தது? யாரிடமிருந்து வந்தது? என்னும் வினாவிற்கு, 'பரம ஆப்தரிடமிருந்து வந்தது' என விடை கூறப்படுகின்றது.

ஆப்தர்-நம்புதற்கு உரியவர். பரம ஆப்தர்-முற்றிலும் மிக நம்புதற்கு உரியவர். 'இறைவர்' என்பது இதன் கருத்து. எனவே சைவர் தங்கள் ஆகமம் சிவனால் செய்யப்பட்டது என்றும், வைணவர் தங்கள் ஆகமம் மாயோனால் செய்யப்பட்டது என்றும் கொள்வர் எனினும் இக்கால ஆராய்ச்சியாளர், வேதத் திற்குமுன் இந்திய நாட்டில் வாழ்ந்த பழங்குடி மக்களிடம் செயல் முறையில் இருந்து பின்பு நூலாக உருப்பெற்று வந்தது' என 'ஆகமம்' என்பதற்கு பெயர்க்காரணம் கூறுவர்.

அவை எவ்வாறாயினும் ஆகம வாதிகள் ஆகமங்களை ''வேதத்தின் வழிநூல்'' என்றே கொண்டு, வேதத்தைத் தழுவியே நிற்கின்றனர். ஆகவே இவற்றிலும் ''மாயை'' என்னும் வழக் காறு பெரும்பான்மையதே.

தரிசனச் சுருக்கம்

மேற்குறித்த சாத்திரங்கள் ஆறனுள் நியாயம், வைசேடிகம் என்பவற்றிடையுள்ள வேறுபாடு மிகச் சிறிதே. அதனால் அவை யிரண்டும் 'தருக்க சாத்திரம்' என ஒன்றாகவே கூறப்படுகின்றன. இவை போலவே சாங்கியம், யோகம் ஆகிய இரண்டனுள் யோகம் சாங்கியத்துள் அடக்கப்படுகின்றது. ஆகவே, மீமாஞ்சை, தருக்கம், வேதாந்தம், சாங்கியம் எனச் சாத்திரங்கள் நான்கே ஆகின்றன.

மாயையின் பொது இலக்கணம்

''மாயையாவது யாது என்பதற்கு அதனைப் பற்றிக் கூறுகின்ற மதங்கள் யாவும் ''மாயையாவது உலகிற்கு முதற் காரணமாய் நிற்கும் பொருள்'' என்றே விளக்கம் தருகின்றன. முதற் காரணம், வடமொழியில் 'உபாதான காரணம்' எனப்படும். இதனை, 'சமவாயி காரணம்' என்றல் திருக்க நூல் வழக்கு.

காரண காரியங்கள்

உலகிற்கு முதற் காரணம் மாயை – எனக் கூறும் பொழுது, ''உலகம் காரியப் பொருள்'' என்பது தானாகவே அமைந்து விடுகின்றது. காரியமாவது செயற்கைப் பொருள். செயற்கைப் பொருள்களுக்கெல்லாம் அவ்வவற்றிற்கு உரிய இயற்கைப் பொருள் மூலப்பொருளாகும். இந்த மூலப்பொருளே 'முதற் காரணம்' என்றும், 'உபாதான கார்ணம்' என்றும் சொல்லப்படுகின்றது.

எந்த இயற்கைப் பொருள் செயற்கையால் செயற்கைப் பொருளாக உருமாற்றம் எய்துகின்றதோ அந்த இயற்கைப் பொருளே முதற் காரணம், அல்லது உபாதான காரணம். மண், பொன், நூல், பால் என்பன செயற்கையால் குடம், அணிகலம், ஆடை, தயிர் என இவ்வாறு உருமாற்றம் எய்துவதால், குடம் முத்லிய காரியப் பொருள்கட்கு மண் முதலியன முதற் காரணம் ஆகின்றன. உருமாற்றம், 'பரிணாமம்' எனப்படும்.

மாயை பற்றிக் கூறாத மதங்கள்

இத்னால், ''செயற்கைப் பொருள்களாகிய காரியப் பொருள்கள் யாவும் தம் தம் முதற்காரணப் பொருளிலிருந்து ஒரு காலத்தில் தோன்றிச் சில காலம் நிலைபெற்றிருந்து, பின்பு, ஒருகாலத்தில் சிதைந்து, முன்போல முதற்காரணப் பொருளாகின்ற நிலையையே அடைந்துவிடும் என்பதும், ''அதனால் காரியப்பொருள்கள் யாவும் நிலையற்றனவேயாக, காரணப் பொருளே நிலைத்து நிற்கும்,'' என்பதும் விளங்கும். அவை விளங்கவே, ''உலகம் காரியப் பொருள்'' என்பது ஒப்புக் கொள்ளப்படுமானால், ''அது நிலையற்றது'' என்பதும் தானாகவே பெறப்படும். மேற்காட்டிய தரிசன மதங்களில் முதலாவதாகச் சொல்லப்பட்ட 'மீமாஞ்சை மதம்' 'உலகம் அழிபொருள்' என்பது ஒப்புக்கொள்ளாமல், 'உலகம் அழியாது' என்றும் ஒருநிலையாக உள்ள பொருள்' என்றே கொள்கின்றது. அதனால் அம்மதத்தில் ''மாயை'' என்னும் பேச்சுக்கு இடமில்லை.

இனித் தருக்க மதம் உலகத்தை ''காரியப் பொருள்'' எனக் கொண்டாலும் ' அதற்கு முதற் காரணம் மாயை'' எனக்

கூறாது, ''பரமாணுக்களே முதற்காரணம்'' எனக் கூறுகின்றது. இந்த அணு காரண வாதம் புறச் சமயங்களாகிய சமண பௌத்த மதங்களிலும் காணப்படுகின்றது. எனவே தருக்க மதத்திலும் மாயைக்கு இடமில்லை.

மாயை பற்றிக் கூறும் மதங்கள்

அவை போக, வேத மதங்களுள் எஞ்சிய ''வேதாந்தம், சாங்கியம்'' என்பவற்றில்தான் மாயை வலியுறுத்தப்படுகின்றது. அது வேதத்தைத் தழுவியே நிற்கும் சைவ வைணவங்கட்கும் ஒக்கும்.

'மாயை உண்டு' என்பதில் இந்நான்கு மதங்களும் கருத் தொற்றுமை உடையவாயினும், மாயைக்கு இலக்கணம் கூறு வதில் இவை பெரிதும் வேறுபடுகின்றன.

பிரம சூத்திர பாடியங்கள்

மேற்குறித்த சூத்திரங்களுள் 'பிரம சூத்திரம்' எனப்படும் வேதாந்த சூத்திரமே சிறந்ததாகக் கொள்ளப்பட்டு அதற்கு, வேறுபட்ட கருத்துக்களைக் கூறும் உரைகள் பலவாகத் தோன்றின. அவ்வுரைகள் 'பாடியங்கள்' எனப்படுகின்றன.

மாயா வாதம்

அப் பாடியங்களுள் ஆதி சங்கரர் செய்த பாடியமே வேதாந்த பாடியமாக, அதன் கருத்தைக் கொண்ட மதமே வேதாந்த மதம் எனப்படுகின்றது. 'அத்துவிதமதம்' எனப்படுவதும் இதுவே. சைவமும், வைணவமும் சங்கரர் மதத்தை 'வேதாந்த மதம்' என்றும், 'அத்துவித மதம்' என்றும் ஒப்புக்கொள்ளாவிடி னும் நாட்டில் அது மேற்கூறிய அப்பெயர்களை உடைய மத மாகவே விளங்குகின்றன.

சங்கரர் மதம், 'நம்மால் தெளிவாக அறியப்படுகின்ற எல்லாப் பொருள் கட்கும் மாயையே காரணம்' என்று மாயைக்கு இன்றியமையாத ஓர் இடத்தைத் கொடுத்துக் கூறினாலும், 'மாயையின் வரலாறு யாது' என்று வினாவும் பொழுது 'அது பற்றி அறிந்தவர் ஒருவரும் இல்லை; அறியவும் இயலாது' என்று கூறுகின்றது.

கண்கூடாகவும் அனுபவமாகவும், உண்மை நூல் வழியாக வும் நம்மால் அறியப்படுகின்ற பொருள்கள் அனைத்தையும் ''மாயை'' என்றே சொல்லிக் கழித்துவிடுவதால், சங்கரர் மதத் தைச் சைவம் ''மாயா வாத மதம்'' என்றே கூறுகின்றது. ''மாயை' என்பது என்ன''? என்று கேட்கின்றவர்களுக்கு இவர்

மதம் கூறும் விளக்கமாவது. ''உண்மையில் இல்லாத பொருள்கள் மெய்யாகவே இருப்பது போலத் தோன்றுகின்ற ஒரு பொய்த் தோற்றத்தை உண்டாக்குகின்ற சக்தியே மாயை'' என்பதாகும். ''நம்மால் அறியப்படுகின்ற பொருள்கள் யாவும் மாயையே'' என்றால், 'அவை வெறும் பொய்த் தோற்றங்களே' என்பதும், 'அவை பொய்த் தோற்றங்களேயாயின் அவற்றை உண்மையில் இருப்பனவும் இருந்து நல்லன தீயனவற்றைத் தருவனவுமாக நாம் நினைப்பனவெல்லாம் வெறும் மயக்கமே' என்பதுந்தான் கருத்தாகும்.

''உலகம் பொய்'' என்று உண்மை நூல்கள் கூறுவதில், 'பொய்' என்பதற்கு இதுதான் பொருள் என்றும், 'இது பற்றியே உலகத்தின் வேறாகிய பொருளையே மெய்ப்பொருள் எனவும், அஃது ஒன்றே யன்றி இரண்டாவதில்லை எனவும் வேதாந்தம் கூறுகின்றது'' என்றும் இம்மதம் கூறுகின்றது. 'இரண்டாவ தில்லை' எனக் கூறுதல் உபநிடதங்களில் வரும் அத்துவிதம் என்னும சொல் பற்றியேயாம்.

'பொய்' என்பதற்கு, 'இல்லாதது' என்பது பொருளாகு மாயின், 'மெய்' என்பதற்கு 'உள்ளது' என்பதே பொருள் என்பது சொல்லத் தேவையில்லை. இனி, 'மெய்ப்பொருள் ஒன்றேயன்றி, இரண்டாவது இல்லை, எனின் 'உண்மையில் உள்ளது ஒரு பொருளே, பொருள் என இரண்டாவது ஏதுவும் இல்லை என்பதே முடிவு.

எனவே இம் முடிவின்படி நாம் கண்கூடாகக் காண்கின்ற இந்த உலகம், இதில் மக்கள் முதல் தாவரம் ஈறாக உள்ள எண்ணற்ற உயிர்கள், காற்று, நெருப்பு, வானத்தில் நின்று ஒளியைத் தரும் பகலவன், இவற்றால் நிகழ்கின்ற பல நிகழ்ச்சிகள், மக்களின் செயற்பாடுகள், இன்னும் நூல்களில் கேட்கப்படுகின்ற சுவர்க்க லோகம், நரக லோகம், அவைகளில் உள்ள அமரர்கள், நரகர்கள் முதலாக எல்லாம் வெறும் பொய்த் தோற்றமேயாகின்றன. 'இவ்வளவு பொருள்களும் வெறும் பொய்' எனக் கூறினால், இவை அனைத்தையும் அழிவில்லாத உண்மைப் பொருள்கள் போலத் தோற்றுவித்து நம்மை மயக்குகின்ற 'மாயை' என்பது உள்ளதா? இல்லதா? என்னும் வினா இயல்பாக எழவே செய்கின்றது. இவ்வினாவிற்கு இம்மதம் என்ன விடை கூறுகின்றது?

'மெய்ப்பொருள்' என்பதற்குப் பொருள், 'உள்ளது' என்பதே எனவும், வேதாந்தம் மெய்ப்பொருள் ஒன்றே, இரண் டாவது இல்லை எனக் கூறுதலால், மெய்ப்பொருளாகிய பிரமம் ஒன்றே உள்ளது; அதைத் தவிர இரண்டாவதாக யாதொரு பொருளும் இல்லை எனவும் இம்மதத்தினர் கொண்டமையால்,

மாயையை 'உள்ளது' எனக் கூறினால், பிரமம் ஒன்றேயன்றி, இரண்டாவது பொருளும் உண்டு என்பதாகி, முன்னர்க் கூறிய ஒரு பொருட் கொள்கை நீங்கிவிடும். அதுபற்றி 'மாயை இல்லது'' எனின், முயற்கோடு முதலிய இல்பொருள்களால் யாதும் விளைவதில்லையாகையால் ''மாயையினாலே விவகாரங்களெல்லாம் உண்டாகின்றன'' என்பது விட்டுப்போகும். இனி, 'உள்ளதும் இல்லதும் ஆகும்' எனின், அது மாறுகோள் உரையாய்ப் பொருள் படாது', உள்ளதும் அன்று, இல்லதும் அன்று எவின் அதுவும் உணர்ச்சிக்கு எய்தாது. ஆதலால் பொருந்தாது. 'இங்ஙனம் எவ் வகையும் பொருந்தாவாயின் மாயையைப் பற்றி நீவிர் கூறுவது என்ன' எனின், இத்தன்மையதாகிய இதன் இயல்பு 'அநிர்வசன்யம்' அல்லது 'அவாச்சியமே' என்பது தான் இம்மதத்தினர் மாயையைப் பற்றிக் கூறும் விளக்கம், அல்லது இலக்கணம்.

அநிர்வசன்யம் அல்லது அவாச்சியம் என்பதற்குப் பொருள், 'இவ்வியல்பினது' என வரையறுக்கப்படாதது என்பதே. 'இஃது இவ்வியல்பினது' என்னும் வரையறையே 'இலக்கணம்' என்பதாகும். இலக்கணத்தையுடைய பொருளே 'இலக்கியம்' எனப்படும். இலக்கணம் கூறப்படாதாயின், இலக்கியம் உண்டு என்பதும் பெறப்படாது. ''பிரமாணம், இலக்கணம் என்னும் இரண்டினாலுமே பொருள் உண்மை பெறப்படும்'' என்பது தருக்க முறை. ஒரு பொருளைப் பற்றி 'அதன் இயல்பு இது என எம்மாற் கூறப்படாது' என ஒருவர் கூறுவாராயின், 'அதுபற்றி இன்னும் அவர் அறியவில்லை என்பதுதான் பொருளாகுமேயன்றி, 'அறிந்து சொல்லிவிட்டார்' என்பது பொருளாகாது. ஆகவே, 'அநிர்வசன்யம்'' அல்லது ''அவாச்சியம்'' என்பது பொருள் உண்மையையும், அதன் இயல்பையும் நிலைநாட்டுவதாகாது.

இம்மதம் இவ்வாறு மாயையை, 'அநிர்வசன்யம்' எனக் கூறுவதற்குக் காரணமாக மேல் விரித்துக் கூறப்பட்டவை முற்றிலும் பௌத்த மதத்தின் கொள்கையாய் உள்ளது. 'மெய்ப்பொருள் ஒன்று உள்ளது என்கின்ற அந்த ஒன்றுதான்' பௌத்த மதத்திற்கு வேறானது.

பரிணாம வாதம்

பிரம சூத்திரத்தின்வழி ஒரு பொருட் கொள்கையைக் கொண்டோருள் 'பாஸ்கரர்' என்பவர் ஒருவர். அவர், 'பிரமமே சீவர்களாயும், உலகங்களாயும் பரிணமித்துள்ளது' எனக் கொண்டார். அதனால் அவரது வாதம் 'பரிணாமவாதம்' எனப்படுகின்றது. ''பரிணாமம் சடத்துக்கன்றிச் சித்துக்குக் கூடாமையால், அவர் மதம் பொருந்தாது'' என எளிதில் மறுக்கப்படுதல் பற்றி, வேறுவகையில் பிறரால் இங்குக் காட்டிய மாயா வாதம்

கொள்ளப்பட்டது. மாயா வாத மதத்தை இங்கு இவ்வளவு தொலைவு எடுத்துச்சொல்ல நேர்ந்தது, இம்மதத்தின் படி அமைகின்ற மாயை பற்றிய கோட்பாடு இது என்பது விளங்குதற் பொருட்டேயாம்.

இம் மாயா வாத மதத்தைக் கூறும் நூல்கள் தமிழில் பல உள்ளன. அவற்றுள் எளிமையும், தெளிவும் உடையதாய் இருத்தல் பற்றிப் பலராலும் கற்கப்படுவது ''கைவல்லிய நவநீதம்'' என்னும் நூலாகும். பயிற்சி மிகுதி பற்றி இதற்குச் சில உரைகளும் செய்யப்பட்டுள்ளன. மாணாக்கன், ஆசிரியர்-வினா விடையாக அமைந்துள்ள இந்நூலின் இரண்டாம் படலத்தில்,

''மாயை என்பதே(து)? உடையர்ஆர்? எப்படி
வந்தது? வருவான் ஏன்?
மாயை என்பது பிரமத்தின் வேறெனின்
வத்துவும் இரண்டாமே!
மாயை என்பதும் பிரமமும் ஒன்றெனின்
வத்துவும் பொய்யாமே''

என எழும் ஐயம் எடுத்துக்கூறப்பட்டது.

'இதற்குத் தெளிவான விடை கூறல் வேண்டும்' என்பது மாணாக்கர் வினா. மாயா வாத மதத்தை உணர்கின்ற பொழுது இவ்வாறு ஐயம் தோன்றுதல் இயல்பாதலின் இதனை நூலாசிரியர் எடுத்துக் கூற வேண்டியவர் ஆயினர். ஆயினும் இதற்குரிய விடையாக அவர் கூறியது,

''அதனை இன்னதென் றுரைத்திடப் படாமையால்,
அவாச்சிய வடிவாகும்''

என்பதும் அவ்விடையை நியாயப்படுத்தற்கு அவர் கூறிய நெறி முறை,

''கதையி லாதபொய் வந்தறிப் படியென்று
கண்டவர் இலை மைந்தா''

என்பதுமேயாகும். ''அவாச்சிய வடிவாகும்'' என்பதற்கு, ''அநிர்வசன்ய சொரூபமாம்'' என்பதும், ''கதை இலாதது'' என்பதற்கு வாக்கால்-சத்து, அசத்து' என்று வசனித்தற்கு இல்லாதது என்பதும் பொருளாக உரை கூறப்பட்டுள்ளது.

சத்து-மெய், உள்ளது; அசத்து-பொய், இல்லது. இவ் விரண்டும் அல்லாமையால் அதனை இம்மதம் ''சதசத்விலட்சணம்'' என்கின்றது. விலட்சணம் – இலட்சணத்திற்கு மாறானது; வேற்றியல்பு 'சத்து, அசத்து' என்னும் இரண்டன் இயல்பிற்கும் வேறான இயல்பினை உடையது என்பதாம்.

ஒரு பொருளைப் பற்றிக் கூறுமிடத்து, அதன் பிற இயல்புகளை அறிதல் அரிதாய் இருக்கலாம். அப்பொருள் இருக்கின்றதா இல்லையா? என்பதையே ஐயமாக்கிவிட்டால், பின்பு அதன்

விளைவுக்ளாகச் சொல்லப்படுவன மட்டும் உண்மையாய் நிலை பெறுதல் எவ்வாறு?

இவ்விடர்ப்பாடு இதில் உண்டாவதால், இக்கொள்கையுடையோரில் சிலர், 'சத்து, அசத்து' என்பனவற்றிற்கு, 'பாவம்' (உண்மை) 'அபாவம்' (இன்மை) என்பன பொருள் அல்ல என்பர். 'அல்லவாயின் வேறு என்ன' என்பதை அவர்கள் விளக்குதல் இல்லை. 'சத்து, அசத்து' என்பன பாவ அபாவங்கட்கு வேறு எனின், அது சைவ சித்தாந்தமாக முடியுமல்லது, ஒரு பொருட் கொள்கையாக முடியாது.

மாயை பற்றிய கோட்பாடு இம்மதத்தில் இவ்வாறு உள்ளது.

சாங்கியம்

தரிசன மதங்களுள் மாயைக் கொள்வனவாகக் குறிக்கப் பட்ட இரு மதங்களுள் இரண்டாவது சாங்கிய மதம். இது மாயையை, 'பிரகிருதி' எனக் கூறும். உலகத்திற்கு மூலமாதல் பற்றி 'மூலப் பிரகிருதி' எனவும் வழங்கப்படும். பிரகிருதி இயற்கைப்பொருள். எனவே காரணப்பொருளாதல் விளங்கும்.

பிரகிருதியை அல்லது மாயையை இம்மதம், உண்மையில் உள்ள பொருள் என்றே தெளிவாகக் கூறுகின்றது. அங்ஙனம் கூறுமிடத்து பிரகிருதி சடப்பொருள் (அறிவில்லாத பொருள்) என்றும், 'சடப்பொருள் தானாகச் செயற்படமாட்டாது' என்றும் ஒப்புக்கொள்கின்றது. எனினும், 'பிரகிருதி உலகமாகக் காரியப் படுதல் கடவுளால் அன்று; உயிரின் முன்னிலையிலேயாம்' என் கின்றது. உயிரை இது 'புருடன்' எனவும், முன்னிலையை 'சந்நிதி' எனவும் கூறும். புருடனுடைய சந்நிதியில் பிரகிருதி செயற்பட் டாலும் அச்செயற்பாடு அவனால் ஆவதன்று; அவனது சந்நிதியில் பிரகிருதி தன்னியல்பால் செயற்படும்; இஃது அசைவற்ற இரும்பு, காந்தத்தின் சந்நிதியை அடையுமாயின் தன்னியல்பால் தான் அசைவு எய்துதல் போல்வது' எனவும் கூறும். எனவே, 'கடவுள் உண்மையை மறுப்பது இதன் குறிக்கோள்' என்பது விளங்கும்.

'கடவுள் இல்லை' என்பதைத் தவிர இதன் கொள்கையை முற்றிலும் யோக மதம் உடன்படுவதால், அதுவும் ஒருவகைச் சாங்கியமேயாதல் பற்றிச் சாங்கிய மதம் 'நிர்ச்சுர சாங்கியம்' எனப்படுகின்றது. 'மாயை உள்பொருள்' என்பதும், 'சடம்' என்பதும் சித்தாந்தத்திலும் உள்ள கொள்கைகளாகும்.

ஆயினும், 'அது கடவுளாலன்றித் தானாகச் செயற்பட மாட்டாது' என்பது சைவசித்தாந்தம்'.

விசிட்டாத்துவிதம்

'சைவம், வைணவம் – என்னும் இரண்டும் தரிசன மதங்கள் அல்ல' என்பதும், 'அவை ஆகம மதங்களே' என்பதும் மேலே

கூறப்பட்டன. அங்ஙனமாயினும், அவற்றையும் வேதாந்த தரிசனத் தோடு ஒன்றுபடுத்திப் பிரம சூத்திரத்திற்கு அம்மதங்களின் கோட் பாடு அமையப் பாடியங்கள் செய்யப்பட்டன. அவற்றுள் சைவச் சார்பாகப் பாடியம் செய்தவர் நீலகண்ட சிவாசாரியார். இவரை, 'ஸ்ரீகண்டர்' என்றும் கூறுவர். இவரைப் பலர் அறியார். வைணவச் சார்பாகப் பாடியம் செய்தவர் இராமாநுசாசாரியர். இவர் சிறப் பாகத் தமிழ் நாட்டில் பெயர் பெற்று விளங்குபவர்.

இவரும் 'அத்துவிதம்' என்பதற்கு 'ஒன்று' என்றுதான் பொருள் கொண்டார். அதனால், 'மாயை, உண்மையில் உள்ள பொருள் தான்; அஃது அநிர்வசன்யம் அன்று; ஆயினும் அது தனி ஒரு பொருளாய் இல்லை. இறைவனில் ஒரு கூறாய், அவனோடு ஒன்றாகவே அஃது எள்ளது எனக் கூறினார். இதனால், மாயைக் கும், இறைவனுக்கும் இடையே உள்ள சம்பந்தம் 'விசேடண விசேடிய சம்பந்தம்' என அவர் விளக்கினார்,. 'சரீர சரீரி பாவம் என்பர். எனினும் கருத்து மேற்கூறியதே.

இருபொருள்கட்கு இடையே உள்ள சம்பந்தத்தைத் தருக்க மதத்தவர் ஆறாகக் கூறுவர். அவற்றுள் ஒன்றே விசேடண விசேடிய சம்பந்தம். 'செந்தாமரை, கருங்குதிரை' எனக் கூறி னால், அவற்றில் உள்ள 'செம்மை, கருமை' என்பன விசேட ணங்கள்; 'தாமரை, குதிரை' என்பன விசேடியங்கள்.. எனவே செம்மை, கருமை என்பவற்றோடு தாமரை, குதிரை என்பவற்றி டையே உள்ள சம்பந்தமே விசேடா விசேடிய சம்பந்தமாகும்.

விசேடணம், விசேடியம் என்னும் இரண்டும் கூடியது 'விசிட்டம்' எனப்படும். எனவே செம்மை, தாமரை என்னும் இரண்டும் கூடிய 'செந்தாமரை' என்பதும், கருமை, குதிரை என்னும் இரண்டும் கூடிய 'கருங்குதிரை' என்பதும் விசிட்டங்க ளாம்.

இம்முறையைக் கொண்டு பார்க்கும் பொழுது, 'மாயை விசேடணமாயும், இறைவன் விசேடியமாயும் உள்ளனர் என் கின்றார் இராமாநுசர்' என்பது விளங்கும். இவ்வாறு கூறுவத னால் மாயை என்பது மாயாவாதிகள் கூறுவதுபோல அநிர்வசன மாகாது உள்ளதேயாதலும், அங்ஙனம் அஃது உள்ளதாயினும், இறைவனின் வேறாகாது அவனுக்கு விசேடணமாய் ஒன்றுபட்டி டிருப்பதால், 'பிரமம்' அத்துவிதம்' என்னும் சுருதிக்கு முர ணாகாது, பொருள் ஒன்றே உளதாதலும் ஆகிய இருபயனும் ஒருங்கே பெறப்படுகின்றன. எனவே, 'பிரமம் அத்துவிதம்' என்னும் சுருதிக்குப் பொருள், 'விசிட்டத்தினால் அத்துவிதம்: அஃதாவது, 'விசிட்டத்தினால் ஒன்று' என்பதே ஆகும் என இவர் கூறினார். அதனால் இவரது அத்துவிதம் 'விசிட்டாத்து விதம்' எனப் பெயர் பெற்றது.

'செந்தாமரை' என்பதில் செம்மை, தாமரை – என இரண்டு பொருள் சொல்லப்பட்டாலும், அவை இரண்டும் இரண்டு தனிப் பொருள்கள் ஆகாமல், விசேடணம் விசேடியத்தில் அடங்கிநிற்க, விசேடியமே தலைமைப் பொருளாய் விசேடண விசேடிய சம்பந்தத்தால் இரண்டும் கூடி விசிட்டமான ஒன்றாதல் இங்கே ஊன்றி உணரத்தக்கது.

மாயாவாதிகள் 'அத்துவிதம்' என்னும் சுருதிக்கு முழுமையான அத்துவிதத்தையே பொருளாகக் கொள்ள வேண்டுமல்லது, எவ்வகையிலும் அதில் துவிதத்தை (இருமையை) ஏற்றுதல் கூடாது என்பர். விசிட்டாத்துவிதத்தில் விசேடண விசேடிய வகையில் இருமை கூறப்படுதல் தெளிவு.

கேவலாத்துவிதம்

பிரமம் முழுமையான–சிறிதும் கலப்பில்லாத அத்துவிதம் என்பதை விளக்குதற்கு, 'பிரமம் கேவலம் அத்துவிதம்' என்பர் ஒரு பொருட்கொள்கையினருள் ஒரு சாரார். அதனால் அவர்களது அத்துவிதம், 'கேவலாத்துவிதம்' எனப்படுகின்றது. இதனை ''முற்றொருமை'' என்றும், ''விசிட்டாத்துவிதம் என்பதை, அடையடுத்த ஒருமை'' என்றும் இக்காலத்தில் மொழிபெயர்க்கின்றனர். செந்தாமரை, கருங்குதிரை என்பவற்றில் செம்மை, கருமை என்பன தாமரை, குதிரை என்பவற்றுக்கு அடைகளாதல் தெளிவு.

''சின்மயம், ஆனந்த மயம் முதலிய பல சிறந்த குணிப் பொருளாகப் பிரமம் வருணிக்கப்படுதல் வேதாந்தத்தில் பெருவழக்கேயாகையால், பிரமத்தை நிருவிசேடப் பொருள் என்றலே சுருதியோடு முரண்படுவதாய் இருக்க, அதனை விடுத்து பிரமம் விசிட்டத்தினால் ஒன்று என்னும் வேதப்பொருளைச் சுருதிக்கு முரணானது எனக் கூறுதல் மாறுகோள் உரையாம்'' என்பர் விசிட்டாத்துவிதிகள்.

விசிட்டாத்துவிதமும் நிரம்பாமை

மாயை இறைவனுக்கு விசேடணமாய் நிற்கும் எனக் கூறும் விசிட்டாத்துவிதத் கொள்கையைச் சிறிது ஆழ்ந்து நோக்கினால் உலகத் தோற்றம் பற்றிய அதன் முடிவை ஏற்பதில் இடர்ப்பாடிருத்தல் விளங்கும். அஃதாவது,

'மாயையே உலகிற்கு முதற்காரணம்' என்பதையும், 'அதனால் மாயையே உலகமாகப் பரிணமிக்கின்றது' என்பதையும் ஒப்புக்கொண்டு 'மாயை இறைவனின் வேறன்று; அஃது இறைவனுக்கு விசேடணமாய் நிற்பதே' எனக் கூறினால், விசேடியம் விசேடணத்தின் வேறன்று, ஆகையால், 'இறைவனே தனது ஒரு

கூற்றில் மாயையாய் நின்று உலகமாய்ப் பரிணமிக்கின்றான் என் பதுதானே கருத்தாகும்! அங்ஙனமாயின் அக்கருத்து, ஒருபொருட் கொள்கைகளில் மாயாவாதத்தை மறுத்து, பிரமப் பரிணாம வாதத்தை உடன்படுவதேயாகும். அஃது எவ்வாறெனில். பிரமப் பரிணும வாதிகளும் பிரமத்தின் ஒரு கூறு உலகமாய்ப் பரிண மிப்பதாகக் கூறுதலன்றி, 'பிரமம் உலகமாகவே பரிணமித்து விடும்' எனக் கூறுதல் இல்லை. அதனால் பிரமப் பரிணாம வாதத்தில் உளதாகின்ற குறைபாடு விசிட்டாத்துவிதத்திலும் நீங்காமை விளங்கும்.

பிரமப் பரிணாம வாதத்திற்குச் சொல்லப்படும் குறையாவது, பிரமம் சத்தும், சித்துமாய் (மெய்ம்மையும் அறிவுமாய்) உள்ளது. உலகம் அசத்தும், அசித்துமாய் (பொய்மையும் அறிவற்றதுமாய்) உள்ளது. அவ்வகையில் அவையிரண்டும் தம்முள் மறுதலைப் பொருள் ஆகையால், ஒரு பொருள் தனக்கு மறுதலைப் பொருளா தல் இயல்வதன்று என்பது. இக் குறை மாயையை இறைவனுக்கு விசேடணமாகக் கொள்வதாலும் நீங்க வழியில்லை.

சிவாத்துவிதம்

இனி நீலகண்ட சிவாச்சாரியர், ''சைவாகமங்களில் 'மெய்ப் பொருள் சிவம், சத்தி என இரண்டாய் நிற்கும்' என்பது கூறப் படுதலால் மாயை சிவத்துக்கு விசேடணம் ஆகாது, சத்திக்கே விசேடணமாய் நிற்கும்'' என்றார். அதனால், 'சிவம் உலகமாய்ப் பரிணமியாது, சிவசக்தி உலகமாய்ப் பரிணமிக்கும்' என்பது அவரது முடிபாயிற்று. அவரும் 'அத்துவிதம்' என்பதற்கு ஒன்று என்றே பொருள் கொண்டமையால், விசிட்டாத்துவிதத்தையே கூறினார். எனினும் அவரது கொள்கை 'சிவாத்துவிதம்' என்றே கூறப்படு கின்றது.

சிவாத்துவிதம் சித்தாந்தம் ஆகாமை

சிவமும் சத்தியும் வேறு வேறு பொருள்கள் அல்ல ஆகை யால், 'சத்தி பரிணாமத்தை அடையச் சிவம் பரிணாமம் இன்றியே இருக்கும்' என்றல் பொருள்படாத ஒன்றேயாம். அதனால் அவரது கொள்கை சைவத்தின் முடிவான கொள்கை ஆகாமை யால், அதனை, 'சைவ சித்தாந்தம்' எனக் கூறுதல் இல்லை. 'சிவாத்துவித சைவம்' என்று சைவத்தின் சில பிரிவுகளுள் ஒன்றாகவே அது சொல்லப்படுகின்றது.

பரிணாமம் உபநிடதக் கருத்தாகாமை

மெய்ப்பொருளைப் பற்றிய பேச்சுக்களில் ''பரிணாமம்'' என்கின்ற ஒன்று உபநிடதங்களில் வந்ததாகத் [தெரியவில்லை.

உபநிடத ஆராய்ச்சி நூலாகிய 'பிரமசூத்திரம்' எனப்படுகின்ற வேதாந்த சூத்திரத்திலேதான் அது காணப்படுகின்றது.

'பிரமம் தானே உலகமாயிற்று' என்னும் கருத்து உபநிடதங்களில் சில இடத்தில் சொல்லப்படுகின்றது. ஆயினும் 'பரிணாமத்தினால் உலகமாயிற்று என்று எங்கும் சொல்லப்படவில்லை. ஆகவே அது பிரமசூத்திரம் செய்த ஆசிரியரது விளக்கச் சொல்லே (வியாக்கியானமே) என்பது தெளிவாகும். அஃதாவது, 'பிரமம் தானே உலகமாயிற்று' என்றால், 'பரிணாமத்தால் தானே அஃது உலகமாக முடியும்' என அவர் கருதி, அங்ஙனம் கூறியதாம்.

சிலந்தி நூல் உவமை

'முண்டகம்' என்னும் உபநிடதத்தில், 'சிலந்திப் பூச்சி எவ்வாறு நூலை உண்டாக்கி மறுபடியும் இழுத்துக்கொள்ளுகிறதோ அவ்வாறே இந்த உலகம் அக்ஷரத்திலிருந்து உண்டாகின்றது' எனக் கூறப்பட்டுள்ளது. அக்ஷரம்-அழியாதது.

சிலந்தி, நூலை உண்டாக்குவதை நாம் அறிவோம். ஆயினும் அந்த நூலை மீண்டும் அது தன்னுள் இழுத்துக்கொள்ளுகிறதா என்பது தெரியவில்லை. இருப்பினும் உபநிடதத்தில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. இது பிரமப் பரிணாம வாதத்தைக் கூறுவதாக அக்கொள்கையுடையோர் கருதுகின்றனர். ஆயினும் அதனை ஊன்றி நோக்குதல் வேண்டும்.

சிலந்தியினின்றும் நூல் தோன்றுதலும், பின் ஒடுங்குதலும் சிலந்தியின் உடம்பில் நிகழ்வதன்றி, அதன் உயிரில் நிகழ்வதன்று. இனி உயிர் இல்லாத சிலந்தி உடம்பில் நூல் தோன்றுதலோ, ஒடுங்குதலோ இயலாது. உடம்பு சடம், உயிர் சித்து. சடமாகிய நூல் சடமாகிய உடம்பிலே தோன்றி, உடம்பிலே ஒடுங்குகின்றதன்றிச் சித்தாகிய உயிரிலே தோன்றி, உயிரிலே ஒடுங்குவில்லை. ஆகவே சடமாகிய நூலுக்குச் சடமாகிய உடம்பே முதற் காரணமாய் நிற்கின்றதன்றிச் சித்தாகிய உயிர் முதற்காரணம் ஆகவில்லை. ஆயினும் சித்தாகிய உயிர் இல்லாவிடில் அவ்வுடம்பினின்றும் நூல் தோன்றுதல், ஒடுங்குதல் இன்மையால், சித்தாகிய உயிரே நிமித்த காரணமாய் நின்று, அம்முதற் காரணத்தினின்றும் நூலாகிய காரியத்தைத் தோற்றுவிக்கின்றது; ஒடுக்குகின்றது. எனவே, சிலந்தி நூல் உவமையால் சைவ சித்தாந்தக் கொள்கைதான் பெறப்படுகின்றதன்றி, வேறு எந்தக் கொள்கையும் பெறப்படாமை அறிந்து கொள்ளத் தக்கது. இக்கருத்துச் சிவஞான மாபாடியத்துள் நூற்பா-2, அதிகரணம் - 2-ல் சுருக்கமாகக் குறிக்கப்பட்டது. பிரமப் பரிணாமம் வைணவ ஆகமத்திற்கு ஒத்ததுதானா என்பது தெரியவில்லை.

சைவ சித்தாந்தம்

ஆகம மதங்களுள் வைணவத்தின் வேறாகிய சைவ சமயம், ஐக்கிய வாத சைவம் முதலிய பல உட்பிரிவுகளை உடையதாயினும், தலைமை பற்றி, 'சைவம்' எனப்படுவது சித்தாந்த சைவமே. அதனது முடிபே 'சைவசித்தாந்தம்' எனப்படுகின்றது.

சைவாகமங்கட்கே 'சைவம்' என்னும் பெயர் உண்டு. அதனால், 'சைவ சித்தாந்தம்' என்பது, 'சைவாகமங்களின் முடிந்த முடிபு' – என்னும் பொருளும் பொருந்துவதே.

பொதுவாகச் சைவ சமயத்தின் கொள்கைகள் பலவும் சைவாகமங்களில் உள்ளன, என்றாலும் சித்தாந்த சைவம் அல்லது சைவ சித்தாந்தம் என்பது தமிழில் உள்ள சித்தாந்த சாத்திரங்களிலேதான் தெளிவுற விளங்குகின்றது. சித்தாந்தத்தைக் கூறும் நூல்களுள், 'ஆசிரிய மாணாக்கர் பரம்பரையில் வழிவழியாக வந்த நூல்கள் பதினான்கு' எனத் தொகுக்கப்பட்டன. அவற்றுள் மெய்கண்ட தேவர் அருளிய சிவஞான போதமே தலையாய, முற்ற முடிந்த நூலாகும். அதனால், 'சித்தாந்தத்தின் முதல் ஆசிரியர் மெய்கண்ட தேவரே' எனப் பலர் கருதும் அளவிற்கு அவரது சிறப்பு விளங்குகின்றது.

முப்பொருட் கொள்கை

மேற்காட்டிய பலவகை அத்துவித மதங்கள் யாவும் முழுமையாகவோ, அரைகுறையாகவோ ஒருபொருட் கொள்கையையே கொண்டன ஆகும். சைவ சித்தாந்தம் அடிப்படையிற்றானே அவற்றோடு மாறுபட்டு முப்பொருட் கொள்கையைக் கொண்டுள்ளது. அம்முப்பொருள்களாவன 'பதி, பசு, பாசம்' என்பன. இவை தமிழில் ''இறை, உயிர், தளை'' எனப்படுகின்றன.

இவை மூன்றும் தனித்தனிப் பொருள்கள் – முதல்கள். பதி என்று உண்டோ அன்றே பசு உண்டு; அன்றே பாசமும் உண்டு. ஆயினும் பாசம் பசுவைக் கட்டுப் படுத்துமே யன்றிப் பதியைக் கட்டுப்படுத்தாது.

இம்முப்பொருள்கட்கும் தோற்ற அழிவுகள் இல்லாமையால், இவை காலத்திற்கு உட்படாதனவாகும். அதனால் இவை 'அநாதி நித்தியப் பொருள்கள்' எனப்படுகின்றன.

இயல்பாகவே பாசத்தால் கட்டுப்பட்டுள்ள பசுக்கள் அப் பாசத்தினின்றும் நீங்கிப் பதியை அடைதலே முத்தியாகும். இதனை கீழ்க் காணும் திருமூலர் திருமந்திரம் மிகத் தெளிவாகக் கூறுகின்றது.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அநாதி;

பதியினைச் சென்றணு காபசு பாசம்;
பதியணு கில்பசு பாசம்நில் லாவே. (மந்திரம். 115)

அநாதி – ஆதியில்லாதது. ஆதியில்லாமையால் அந்தமும் இல்லை.

முப்பொருள்களுள் பதி பொருளால் ஒன்றே. பசுக்கள் எண்ணில. பாசம் 'ஆணவம், கன்மம், மாயை' என மூன்று. பிற மதங்கள், 'மாயையை ஒன்று' என்றே கொள்ள, சைவம் அதனை சுத்தம், அசுத்தம்' என இரண்டாகக் கூறுகின்றது. அம்முறையில் பார்க்கும் பொழுது பொருள்கள் வகையால் மூன்றாயினும், விரியால் ஆறாகும். இந்த ஆறும் அநாதி நித்தியப் பொருள்களாம்.

''ஏகன் அநேகன் இருள் கருமம் மாயை இரண்டு
ஆகஇவை ஆறு ஆதி இல்''

என்கின்றது சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றுகிய திருவருட் பயன். இதனால் மாயை என்பது பாசங்களுள் ஒன்றாதல் விளங்கும்.

ஏகன் - ஒப்பற்ற ஒருவன், இறைவன்; அநேகன் - அளவில்லன வாகிய உயிர்கள்; இருள் – ஆணவம். கருமம் - கன்மம்; மாயை இரண்டு-சுத்த மாயை, அசுத்த மாயை.

மாயைக்குச் சுத்தமும் அசுத்தமும் ஆவன ஆணவத்தோடும் கன்மத்தோடும் கலவாமையும் கலத்தலும் ஆகும். சுத்த மாயை வியாபகம்; அசுத்தமாயை அதற்குள் வியாப்பியம். ஆயினும் அசுத்தமாயை சுத்த மாயையின் காரியம் அன்று.

மும்மாயைகள்

இனிச் சாங்கியம் முதலிய பல மதங்களும், 'உலகத்திற்குப் பரம முதற்காரணம் – அஃதாவது தனக்கு ஒரு காரணம் இன்றாகத் தானே முடிநிலைக் காரணமாய் உள்ளது' எனக் கொண்ட பிரகிருதி அல்லது மூலப் பிரகிருதியைச் சைவம் 'அசுத்த மாயையினின்றும் தோன்றிய ஒரு காரியப் பொருள்' எனக் கூறுகின்றது. எனவே, 'மாயை' என்றால் சைவத்தில், 'அசுத்த மாயை' என்பதே பொருள். சுத்த மாயை பொதுவகையில் 'மாயை' எனப்பட்டாலும், அதனை, 'விந்து' என்றே கூறுதல் மரபு. சுத்த மாயை மயக்கத்தை உண்டாக்காது, தெளிவையே உண்டாக்க, அசுத்தமாயை மயக்கத்தை உண்டாக்குதலால், அது 'மோகினி' எனப்படுகின்றது. பிரகிருதியை மற்ற மதங்களோடு ஒப்ப 'மகத்து' என்னும் பொருளில் 'மான்' எனச் சைவமும் கூறும். எனவே, சைவத்தில் மாயையைப் பற்றி உணருமிடத்து விந்து, மோகினி, மான் – என மூன்றாக உணர்தல் வேண்டும்.

பாசம் 'மலம்' எனவும் படும். 'அழுக்கு' அல்லது 'மாசு' என்பது அதன் பொருள்.

பாசத்தில் கட்டுண்டிருக்கும் உயிர்கள் 'பெத்தான்மாக்கள்' என்றும், அக் கட்டினின்று நீங்கிய உயிர்கள் 'முத்தான்மாக்கள், சுத்தான்மாக்கள்' என்றும் சொல்லப்படும்.

மூவகை உயிர்கள்

பெத்தான்மாக்கள், 'ஆணவம் ஒன்றையே, உடையன, ஆணவம், கன்மம் என்னும் இரண்டை உடையன, ஆணவம் முதலிய மூன்றையும் உடையன' என மூன்று வகைப்படும். அவற்றுள் மும்மலம் உடைய உயிர்கட்கு இடமாவன 'மான்' எனப் படும் பிரகிருதி உலகம். இருமலம் உடைய உயிர்கட்கு இடமாவன மோகினி எனப்படும்அசுத்த மாயை உலகம். ஒருமலம் உடைய உயிர்கட்கு இடமாவன 'விந்து' எனப்படும் சுத்தமாயை உலகம்.

மலம் நீங்கிய சுத்தான்மாக்களும் மல வாசனை நீங்காமை யால் பர முத்தியை அடையாமல், பெத்தான்மாக்கட்கு மேலான பதவியில் இருக்கும். அப் பதவிகளும், இயற்கையில் உருவம், பெயர், தொழில் ஒன்றும் இல்லாதவனாகிய இறைவன் உயிர்களின் பொருட்டு அவற்றைக் கொள்கின்ற பொழுது அவன் பலவகையில் இருக்கும் இடங்களும் சுத்த மாயையின் உலகங்களேயாகும். 'சுத்த மாயா உலகம் பின்னர்க் கூறிய இவர்கட்கே இடமாதல் அல்லது பெத்தான்மாக்களைச் சேர்ந்த ஒருமலம் உடைய உயிர் கட்கு இடமாதல் இல்லை, அவற்றிற்கு அசுத்தமாயைக்கும், சுத்தமாயைக்கும் இடைப்பட்ட இடமே இடமாகும்' என்னும் கருத்தும் உண்டு.

'ஆன்மாக்கள் மூன்று வகையாய் இருத்தலால், அவற்றிற்கு உரிய உலகங்களும் மூன்றுவகையின, என்பதும், 'மூன்று வகை உலகங்கட்கும் முதற்காரணமாகிய மாயையும் மூன்றுவகைப்படும் என்பதும் சைவத்தில் உள்ள பொதுவான சில கருத்துக்கள்.

மூலப் பிருகிருதியையே முடிவான முதற் காரணமாகக் கொண்ட சாங்கியம் முதலிய மதங்கள் அதன் காரியமாகத் தோன்றும் தத்துவங்கள் இருபத்து மூன்று என்றும் அவற்றின் காரியமே உலகம் என்றும் கொண்டன.

சைவ சித்தாந்த தத்துவங்கள்

அந்த இருபத்து மூன்று தத்துவங்களுடன் பிரகிருதியையும் கூட்ட வரும் இருபத்து நான்கினையும் சைவம் சில வேறுபாடு களுடன் 'ஆன்ம தத்துவங்கள்' என்று ஏற்றுக்கொண்டு, 'அவற் றிற்குமேல் அசுத்தமாயையின் காரியங்களாய் ஏழுதத்துவங்கள் தோன்றும்; அவை 'வித்தியா தத்துவங்கள்' என்றும், அவற்றிற்கு

மேல் சுத்த மாயையின் காரியங்களாய் ஐந்து தத்துவங்கள் தோன்றும். அவை சிவ தத்துவம் என்றும் 'ஆகமத் தத்துவங்கள் முப்பத்தாறு' என்றும் கூறுகின்றது.

முப்பத்தாறு தத்துவங்களுள் 'சிவ தத்துவம்' எனப்பட்ட ஐந்தினாலேதான் ஏனைய முப்பத்தொரு தத்துவங்களும் செயற் படுத்தப்படும் என்பது ஒரு முதன்மையான கருத்து. மேலும், 'இருமலமும், மும்மலமும் உடைய பெத்தான்மாக்களுக்குச் சிவ தத்துவம் ஏனையவற்றைச் செலுத்தும் முகத்தாற் பயன்படுவன அன்றி, உலகமாகியோ, உடம்பாகியோ வந்து அவைகட்கு நேரே பயன்படுதல் இல்லை என்பதும் அறியத்தக்கது.

சொல்லுலகம்

இனி உலகில் உள்ள மொழிகள் யாவும் 'சொல்லுலகம்' என்பதும், சொற்களால் உணர்த்தப்படும் பொருள்கள் யாவும் 'பொருள் உலகம்' என்பதும் அனைத்து மதங்கட்கும் உடன்பாடு. ஆயினும், 'சொல்லுலகம் சுத்த மாயையில் தோன்றுவதன்றி, ஏனை அசுத்தமாயை பிரகிருதிமாயைகளில் தோன்றுவதன்று' என்பது சைவத்திற்கே உரிய ஒரு சிறப்புக் கொள்கை. மற்றைய மதங்கள் 'சுத்தமாயை' என ஒன்றைக் கொள்ளாமையால், 'சொல்லுலகமும் பிரகிருதியின் காரியங்களே' என்பது அவற்றின் கொள்கையாய் உள்ளது.

சுத்தமாயை என்பதைக் கொள்ளாவிடினும் ஏகான்ம வாத மும் (ஒரு பொருட் கொள்கையும்) வைணவமும் முக்குணங்கட்கு மேல் 'சுத்த சத்துவம்' என்னும் ஒரு குணத்தைக் குறிப்பிட்டு, 'அஃது ஏனை இராசத தாமத குணங்களோடு கூடாது வேறே நிற்கும்' எனக் கொண்டன. 'சத்துவம்' என்று கூறிய பின், 'அஃது ஏனை இரு குணங்களோடு கூடாதே நிற்கும்' என்றல் பொருந்துவதாகாது'. அதனால், 'முக்குண மயமே பிரகிருதி' என்பதை அங்ஙனமே கொண்ட அம்மதங்கட்கு அதனோடு நிறைவு உண்டாகாமல், அதற்கு மேற்பட்டதொன்றை அவாவு தல் இன்றியமையாததாய் இருத்தல் விளங்குகின்றது.

சொல்லுலகம் 'சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி,' என்னும் நால்வகை வாக்குகளாய் நிற்கும். சூக்குமை 'பரை' என்றும் சொல்லப்படும்.

சித்தாந்த முடிபு

'உலகத்திற்கு முதற் காரணமாய்த் தன்னைப்போலவே உள்பொருளாயும் அழிவில் பொருளாயும் உள்ள மாயையை இறைவன் நிமித்த காரணனாய் நின்று தனது தாதான்மிய சத்தியைத் துணைக்காரணமாகக் கொண்டு செயற்படுத்தி உல

கத்தை உயிர்களின் பொருட்டுத் தோற்றுவிப்பன்' என்பதே சைவ சித்தாந்தம்.

''காரிய காரண ங்கள் முதல்துணை நிமித்தம் கண்டாம்;
பாரில்மண் திரிகை பண்ணுவன்முதல் துணைநி மித்தம்;
தேரில்மண் மாயையாகத் திரிகைதன் சத்தியாக
ஆரியன் குலால னாய்நின் றாக்குவன் அகில மெல்லாம்.''

என்கின்றது சிவஞான சித்தியார்.[1]

இருவகைச் சித்திகள்

தாதான்மிய சத்தியாவது, தன்னின் வேறாகாத சத்தி. தன்னின் வேறாய் நிற்கும் சத்தி 'பரிக்கிரக சத்தி' எனப்படும். அதனை, வேண்டும் பொழுது பற்றலாம்; வேண்டாத பொழுது விட்டுவிடலாம். தாதான்மிய சத்தி எக்காலத்தும் தன்னைவிட்டு நீங்காது.

இறைவனுக்கு இயல்பாய் உள்ள சத்தி தாதான்மிய சத்தி. இறைவன் அறிவுடையவன் ஆதலின், அவனது தாதான்மிய சத்தியும் அழிவுமயமானதே. அதனால் அது 'சிற்சத்தி' எனப் படுகின்றது.

மாயையும் சத்தியேயாயினும் அது சடம் ஆதலின் இறை வனுக்குத் தாதான்மிய சத்தியாகாது, பரிக்கிரக சத்தியாய் நிற்கும்.

மாயா வாதிகள் 'சத்தி' என்றுலே மாயைதான் எனக் கூறுவர். அங்ஙனம் கூறி 'அதற்குப் பற்றுக்கோடு சின்மயமான பிரமமே' என்பர். இவையெல்லாம் அவர்கட்கே பொருந்தும்.

சைவ சித்தாந்தம் கூறும் மாயையின் இயல்புகள்

இங்ஙனம் கூறிவந்தவற்றால், சைவ சித்தாந்தத்தின்படி, ''மாயையும் இறைவன்போல் உண்மையில் உள்ள பொருளே. ஆயினும் இறைவன் அறிவுமயமானவன். மாயை சடம், அதனால் அறிவனாகிய இறைவன் அந்தச் சடப்பொருளைக் காரியப்படுத்தி அதினின்றும் பல வகையான பொருள்களைத் தோற்றுவிப்பன்'' என்பது மாயை பற்றிகோட்பாடாதல் விளங்குவதாம். 'உல கிற்கு முதற்காரணமாக 'மாயை, இறைவன்' என்னும் இரண்டில், ஏதேனும் ஒன்று போதாதோ? இரண்டையும் கொள்ளுதல் மிகை யன்றோ, என்பது ஒரு வாதம். அது, 'சித்து, சடம்' என்னும் வேறுபாட்டால் மறுக்கப்பட்டமை காணலாம். இது பற்றிக் கீழ்க் காணும் சிவப்பிரகாசச் செய்யுள் அறியத்தக்கது.

---

[1] சிவஞானசித்தியார், 3-ம் பதிப்பு (சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1967) சூ. 1:18.

'என்னை இது' எனின், உலகுக்கு உபாதானம்; 'இல்லை,
இறைவனலது' எனின், அசித்துச் சித்தினிடத்து உதியாது,
'மன்னி யுளதேல் முதல்வன் என்கொல்' என்னின்,
மாயைதான் அசித்து; உருவாய் மருவ மாட்டாது;
'அன்னவனும் அது ஒழிய ஆக்கமாட்டான்,
அசத்தனாம்' எனின், அதுவும் அவன்போல் நித்தம்;
முன்னவன் அவ்வசித்தை விரித்து எவையும் ஆக்கும்;
முதன்மை அதுகொடுத்தது என மொழிந்திடாரே.[1]

இனிக் கீழ்க் காணும் சிவஞானசித்திச் செய்யுளையும், அதற்கு மாதவச் சிவஞான யோகிகள் உரைத்துள்ள சிறப்புரையையும் நோக்கினால் மாயையைப் பற்றிய சைவ சித்தாந்தக் கொள்கைகள் முழுதும் இனிது விளங்குவதாகும்.

நித்தமாய், அருவாய், ஏக நிலையதாய், உலகத்திற்கோர்
வித்துமாய், அசித்தாய், எங்கும் வியாபியாய், விமலனுக்கோர்
சத்தியாய்ப் புவன போகம் தனுகரணமும் உயிர்க்காய்,
வைத்ததோர் மலமாய், மாயை மயக்கமும் செய்யு மன்றே,[2]

உரை

மாயையின் சொரூபம் கூறுவார் ''புவன போகம் தனு கரணமும் உயிர்க்காய்'' – என்றும்,

அதுவும் மாத்திமிகர் மதம் பற்றிச் சூனியத்திற் செல்லாமைப் பொருட்டு – ''உலகத்திற்கோர் வித்துமாய்'' – என்றும்,

அதுவும் கணிக வாதிகள் (பௌத்தருட் பெரும்பாலோர்) மதம் பற்றிச் சார்பினிற் செல்லாமைப்பொருட்டு – ''நித்தமாய்'' – என்றும்

அதுவும் உலகாயதர் மதம் பற்றிப் பூதங்களிற் செல்லாமைப் பொருட்டு ''அருவாய்'' – என்றும்,

அதுவும் வைசேடிகர் (தருக்க மதத்தவர்) மதம் பற்றிப் பரமாணுவிற் செல்லாமைப் பொருட்டு – ''எங்கும் வியாபியாய்'' என்றும்,

அதுவும் சாங்கியர் மதம் பற்றி முக்குணங்களிற் செல்லாமைப் பொருட்டு – ''ஏக நிலையதாய்'' – என்றும்,

அதுவும் பாற்கரியர் (பாஸ்கரர்) மதம் பற்றிப் பிரமத்திற் செல்லாமைப் பொருட்டு – ''விமலனுக்கோர் சத்தியாய்'' – என்றும்,

---

[1] கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார். சிவப் பிரகாசம், (சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1969) செய்யுள் 23.

[2] சூ. 2.53

அதுவும் சிவாத்துவிதர் மதம் பற்றிச் சிற்சத்தியிற் செல்லாமைப்பொருட்டு – ''அசித்தாய்'' – என்றும்,

அதுவும் மாயாவாதி மதம் பற்றி அநிருவசனத்திற் செல்லாமைப் பொருட்டு ''வைத்ததோர்'' மலமாய் – என்றும்,

'இத்தன்மைத்தாகிய மாயை ஆணவம்போல மயக்கமே செய்யும்' என்னும் சைவருள் ஒரு சாராரை மறுத்தற்பொருட்டு – ''மயக்கமும் செய்யும்'' – என்றும் கூறினார்.

''மயக்கமும்'' – என்னும் உம்மை, அது தன்னியல்பு அன்மை உணர நின்றது.''

இவ்வாறு அமைந்துள்ளது அதன் சிறப்புரை. இவற்றால் மாயையைப் பற்றிய சைவ சித்தாந்தக் கோட்பாடு ஒரு தனி முறையாய் நிற்றல் விளங்கும்.

செய்யுளில், ''விமலனுக்கு ஓர் சத்தியாய்'' என்றது, 'பரிக்கிரக சத்தியாய்' என்றபடி. அது பற்றியே சத்தியாய் என்னாது'', ஓர் சத்தியாய்'' என்றார்.

சமண பௌத்தர்களும், தார்க்கிகர்களும் உலகத்திற்கு முதற் காரணமாகப் பரமாணுக்களைக் கொள்வர். 'அணுக்களும் வடிவுடையனவேயாதலின் அவையும் காரியமாவன அன்றிக் காரணம் ஆகா' எனச் சைவசித்தாந்தம் கூறும்.

ஆணவ மலம்

இனி உயிர்கள் அறிவுடையன ஆயினும் அவை அறியாமையையும் உடையனவாய் இருத்தல் வெளிப்படை. ஆகவே 'அவற்றிற்கு அவ்வறியாமை எதனால் வந்தது' என்னும் ஐயத்திற்கு மதங்கள் கூறும் விளக்கம் பலவாறானது. அவற்றுள் 'மாயை தான் உயிர்கட்கு அறிவை மறைத்து, அறியாமையைத் தருகின்றது என்பதே பெரும்பான்மை. ஆயினும், சைவ சித்தாந்தத்தின் கொள்கை அதற்கு மறுதலைப் பட்டதாகும்.

அஃதாவது, 'மாயை உயிர்களின் அறிவை விளக்குவதேயன்றி, மறைப்பதன்று' என்பது. 'உடம்பும், அதில் அமைந்த கருவிகளும் மாயையின் காரியம் என்பது அனைவர்க்கும் உடன்பாடு. அக்கருவிகள் உயிரின் அறிவை விளக்குகின்றனவா? மறைக்கின்றனவா? என்றும் ஆராய்ந்தால் உண்மை விளங்கும்.

விழிப்பில் அறிவு விளங்குதலும், உறக்கத்தில் அறிவு விளங்காமையும் யாவரும் அனுபவமாக அறிவன. அவற்றிற்குக் காரணம் என்ன? விழிப்பில் கருவிகள் எழுச்சியுடன் செயற்படுகின்றன; உறக்கத்தில் அவை செயற்படாது ஒடுங்கிவிடுகின்றன. இவையே அவற்றிற்குக் காரணம்.

இப்பொழுது விளங்கும், 'மாயை அறிவை மறையாது

விளக்கியே நிற்கின்றது' என்று இதனால் மாயை விளக்கிற்கு ஒப்பிடப்படுகின்றது சைவ சித்தாந்தத்தில்.

''மாயா தனுவிளக்கா மற்றுள்ளம் காணாதேல்
ஆயாதாம் ஒன்றை''[1]

என்பது சிவஞான போதம்.

'மாயை விளக்குப்போல நின்று அறிவை விளக்குவதாயின், இருள்போல நின்று அறிவை மறைப்பது எது' என்னும் ஐயம் எழுகின்றது. 'அதுதான் பாசங்களுள் முதலாவதாகச் சொல்லப் படுகின்ற ஆணவம் என்பதே' அவ்வையத்திற்கு விளக்கம். இது பற்றி ஆணவம் 'இருள்மலம்' என்றே சொல்லப்படுகின்றது.

ஆணவம் இருள்போன்றதும், மாயை விளக்குப் போன்றதும் ஆம் என்பதை,

''புகலும் மலம் ஒழித்தற்குக் கலாதிமுதல் மாயை
பொருந்தியிடும் அரன் அருளால்; போதம் தீபம்
சகலமேலாம் உடனாயவாறு போலும்;
தரும் அருளை மலம் உயிர்கள் சாராமல் மறைக்கும்;
இகலிவரும் இவை உணரின் இருள்வெளியாம் தன்மை
எய்தும்வகை தம் செய்தி யிலங்கும்''[2]

எனச் சிவப்பிரகாச நூல் விளக்குகின்றது.

உயிர்கள் அடையும் துன்பங்கள் அனைத்திற்கும் ஆணவ மலமே மூலகாரணம் என்பது சைவ சமயத்தின் உறுதியான கொள்கை. ஆயினும், சைவாகமங்களில் தவிர வேறு எந்த மெய்ப்பொருள் நூலிலும் ஆணவ மலம் பேசப்படவில்லை. 'மாயை, கன்மம்' என்ற இரண்டே பேசப்படுகின்றன. மாயை யைப் பற்றி மேற்காட்டியவாறு தமிழ் நூல்களில் கூறப்படுதல் போல, மிருகேந்திரம், மதங்க பாரமேஸ்வரம், பௌஷ்கரம் முதலிய சைவாகமங்களில் விரிவாகவே கூறப்படுகின்றன. ஆண வத்தைப் பற்றியும் அவ்வாறே.

வித்து நில உவமை

இனி, ''மாயை இறைவனின் வேறாய ஒரு தனி முதல்' என்றும், 'அசித்தாகிய மாயையிலிருந்தே அசித்தாகிய உலகம் தோன்றும்' என்றும் கூறினால், 'எல்லாம் பிரமத்தினின்றே தோன்றின' என உபநிடதங்களிலும், வாதுளம் முதலிய சில சிவாகமங்களிலும், மற்றும் புராண இதிகாசங்களிலும் கூறப் படுதல் பற்றி என்ன சொல்வது'' என்பது ஒருதடை. இதற்கு மெய்கண்டார் தக்க வகையில் விடை கூறியுள்ளார்.

---

1 சூ. 4. அதி. 2.

2 செய்யுள் — 37

''வித்துண்டா மூலம் முளைத்தவா தாரகமாம்
அத்தன்தாள் நிற்றல்''[1]

என்பதே அவ்விடை. அஃதாவது, ''தாவரங்கட்கு முதற் காரணம் விதையே என்றாலும், அந்த விதை தனியே இருப்பின் அவற்றினின்றும் தாவரங்கள் தோன்ற மாட்டா. அவை நிலத்தை ஆதாரமாகக் கொண்டு அதிற் பதிந்து நிற்பின் அந்த நிலம் குளிர்ச்சியடைந்த பொழுது அவற்றினின்றும் தாவரங்கள் தோன்றும். தாவரங்கள் உண்மையில் விதைகளின்றே தோன்றியவாயினும், அவைகளை, 'இந்த நிலத்தில் இன்ன தாவரங்கள் தோன்றின, அந்த நிலத்தில் இன்ன தாவரங்கள் தோன்றின' எனக் கூறுதலே வழக்கமாய் உள்ளது. அதுபோலத்தான் உலகிற்கு முதற்காரணம் மாயையே யாயினும், அது தனியே நின்று தன் காரியங்களைத் தோற்றுவிக்க மாட்டாது. இறைவனது சத்தியை ஆதாரமாகக் கொண்டு அதன்கண் அது பதிந்திருத்தலால், அந்தச் சத்தி சங்கற்பித்த (நினைத்த) பொழுது அதனினின்றும் உலகம் தோன்றுகின்றது; அதுபற்றி உலகம் இறைவனிடத்தினின்றே தோன்றிற்று எனக் கூறும் வழக்கம் உளதாயிற்று''. என்பதாம். மேற்காட்டிய முண்டகோபநிடத வாக்கியத்திற்றானே 'சிலந்தியினின்றும் நூல் தோன்றுதல் போல' என்னும் உவமையோடு கூட, ''நிலத் தினின்றும் ஓடதிகள் (தாவரங்கள்) தோன்றுதல் போல'' என்னும் உவமையும் கூறப்பட்டிருத்தல் இங்கு நினைக்கத்தக்கது.[2]

சுத்தாத்துவிதம்

''இவையெல்லாம் இவ்வகையில் பொருத்தம் உடையன வாய்த் தோன்றினும் உபநிடதங்களில் 'பிரமம் ஏகம்' என்றும், 'அத்துவிதம்' என்றும் இங்ஙனம் ஒருபொருளே உள்ளதாகக் கூறப்பட்டிருக்க, அவற்றிற்கு மாறாக, 'பொருள்கள் மூன்று உள்ளன; ஆறு உள்ளன' எனக் கூறி மாயையை ஒரு தனிப்பொருளாக வைத்தல் எவ்வாறு பொருந்தும்'' என்பது பெரியதொரு தடையாக நிகழ்த்தப்படுகின்றது. அதற்கு மெய்கண்டார் எளிதாக விடைகண்டுள்ளார்.

'பிரமம் ஏகம்' (ஒன்று) என்று மட்டும் உபநிடதம் கூறவில்லை, 'ஒன்றே' எனத் தேற்றேகாரம் கொடுத்தும் கூறுகின்றது. அதனால், 'பிரமமாகிய பொருள் ஒன்றேயன்றிப் பிரமங்கள்

---

1 சிவஞானபோதம் — சூ. 1. அதி. 2.

2 ''யதோர்ணநாபி: ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச யதா ப்ருதிவ்யாம் ஓஷதய: ஸம்பவந்தி/ யதா ஸத: புருஷாத் கேசலோமானி ததாக்ஷராத் ஸம்பவதீஹ விஸ்வம்//

—முண்டக உபநிடதம். சூத்திரம் 7.

சிலவோ, அல்லது பலவோஇல்லை என்னும் பொருள் பெறப்படு கின்றதன்றி, 'பிரமத்திற்கு வேறாக வேறுவகைப் பொருளே யில்லை என்னும் பொருள் பெறப்படவில்லை. அதனால் அது பற்றி ஐயம் இல்லை ஆயினும் 'அத்துவிதம்' என்பதும் சொல்லப் படுதலால், அது பற்றியே மிகுந்த ஆராய்ச்சியை எழுப்பி, மேற் கண்டவாறெல்லாம் அவரவரும் கூறினர். ஆயினும் மெய்கண் டார் கூறியது வேறு.

'ஏகம்' என்றதனோடு 'அத்துவிதம்' என்பதையும், 'ஏகம்' என்பதை வலியுறுத்தக் கூறியதாகவே பலரும் கொண்டனர். மேலும், 'அத்துவிதம்' என்பதற்கு 'இரண்டில்லாதது' என அவர்கள் கொண்டமையால், 'பிரமத்திற்கு வேறாக எந்தப் பொருளும் இருக்கவில்லை என்னும் கருத்து நிலைபெறும் வகை யில் தம் தம் கொள்கையை வெளியிட்டனர்.

ஆயினும் மெய்க்கண்டார் 'அத்துவிதம்' என்பதற்கு 'இரண் டில்லாதது' எனப் பொருள் கொள்ளாமல், 'இரண்டல்லாதது' எனப் பொருள் கொண்டு, 'பிரமம் தான் ஒன்றேயாயினும், பிற பொருள்களில் வேறாய்த் தோன்றாது அது அதுவாக அவற்றிலே கலந்தும், அவற்றது செயற்பாட்டிலே தானும் உடன் இயைந்தும் நிற்றல் உடையது' என விளக்கம் தந்து, 'ஏகம்' என்பது 'பிரமம் ஒன்றேயன்றி இரண்டாவது பிரமம் இல்லை' என்னும் பொருளை யும், 'அத்துவிதம்' என்பது 'ஒன்றாகிய அந்தப் பிரமம் ஏனைய பொருள்களில் வேற்றுமையின்றி இயைந்துள்ளது' என்னும் பொருளையும் தருவன என இரண்டு சொற்களாலும் வேறு வேறு பயன் இருத்தலைக் காட்டினார்.

மேலும், 'பிரம்மத்தைத் தவிர இரண்டாவதாக எந்தப் பொருளும் இல்லை' எனக் கொள்வதால் வரும் முரண்பாடுகள் பலவாதல் மேலே சிறிது காட்டப்பட்டது. இன்னும் சித்தாந்த நூல்களில் காட்டப்படுவன பல.

ஆகவே 'அத்துவிதம்' என்பது பற்றியும் சைவ சித்தாந்தம் கூறும் பொருள் உண்மைகள் சுருதிகட்கு முரண் ஆகாமையால், மாயை பற்றி அது கூறும் கருத்தும் சுருதிக்கு மாறுபட்டது அன்றாம். இது சுத்தாத்துவிதம் ஆகும்.

மாயை சிவனாலே செயற்படும்

சாங்கியர் ஆன்மாவை, 'புருடன்' எனக் கூறி, 'அவனது சந்நிதியிலே மாயை (பிரகிருதி) தன் காரியத்தைத் தோற்று விக்கும்' என்றும், 'அது காந்தத்தின் சந்நிதியில் இரும்பு அசைதல் போல்வது' என்றும் கூறினர். ஆயினும், 'பிருகிருதியின் செயற்பாட்டில் புருடனுக்கு யாதும் பங்கில்லை என்றனர். காந்தத்தின் முன்னிலையில் இரும்பு அசைதல் காந்தம் தனது

சத்தியால் அதனை ஈர்த்தலாலேயாம். அதனால், 'சடமாகிய மாயை அறிவுடைய ஒருவனாலே செயற்படுமன்றித் தானே செயற்படாது; அவ்வறிவுடையவன் ஆன்மாவாகாது, இறைவனே ஆவன்' என்கின்றது சைவ சித்தாந்தம்.

''பிரகிருதியை — மாயை — என்று அறிக, மகேசுவரனை — மாயையை உடையவன் — என்று அறிக'' என்கின்றது சுவேதாச் சுவரம் என்னும் உபநிடதம்.[1] அதனால், மாயையே யன்றி மாயையை உடையவனும் உளன்' என்பது ஆகமப் பொருள் மட்டுமன்றி, உபநிடதப் பொருளும் ஆகும். அதனால் பிரகிருதியை ஒப்புக்கொண்டு, அதனை உடையவனை 'இல்லை என்னும் சாங்கியக் கொள்கை வேதத்திற்கும்' புறம்பானதேயாகும். சாங்கியக் கொள்கை பிரமசூத்திரத்தில் பல இடங்களில் மறுக்கப் பட்டுள்ளது.

---

1 ''மாயாந்துப்ரக்ருதிம் வித்யாந்
மாயிநந்து மஹேச்வரம்'' –சுவேதாசுவர உபநிடதம் IV. 10.

திருமூலர் கூறும் முப்பொருள்

பழ. முத்தப்பன்

பன்னிரண்டு திருமுறைகளிலும் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் காலத்தால் முற்பட்டதாகும். மற்றத் திருமுறைகள் தோடுடைய சிவனை – அவனுடைய அடியார்களைப் போற்றிப் பரவிட இத்திருமுறை மட்டுமே பிற்காலச் சாத்திர நூல்களுக்கு வித்தாக அமைந்து சைவ சித்தாந்தத் தத்துவங்களை உணர்த்துகிறது. சமயப் பிணக்கர்கள் பலர் வடமொழிக்கும் தென்மொழிக்கும் வேறுபாடு காட்டுவான் வேண்டி, வடமொழி வேதம் தந்திடும் செம்மொழி என்றும், தமிழ் மொழி அத்தகையது அல்ல என்றும் கட்டுரைப்பர். ஆனால் திருமூலர் திருமந்திரத்தைப் பொருள் உணர்ந்து காண்பார்க்குத் திருமந்திரம் சாத்திரம் தந்திடும் மந்திரநூல் என்பது எளிதில் புலனாகும். பன்னிரு திருமுறைகளில் திருமந்திரம் தமிழ்வேத ஆகமநூலாக விளங்கி வடமொழிப் பித்தர்களுக்குத் தோல்வியைத் தந்து நிற்கிறது.

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''

(தொல், பொருள், சூ. 490)

என்ற தொல்காப்பியச் சூத்திரப்படி நிறைமொழி மாந்தராகிய திருமூல நாயனாரால் இத்திருமுறை செய்யப் பெற்று மந்திரம் என்ற பெயரையும் பெற்றிருக்கிறது.

தத்துவத் தோற்றம்

மக்களாகப் பிறந்தவர்கள் மன உணர்வு உடையவர்கள். அவர் தம் உணர்வு நிகழ் காலத்து நிகழும் நிகழ்ச்சிகளை அறிவ தோடு இறந்தகால நிகழ்ச்சிகளையும், எதிர்கால விளைவு

களையும் ஒருவாறு கற்பனை செய்து துணியும் ஆற்றல் உடைய தாகும். இந்த உணர்வைக் கொள்கைகளாக வகைப்படுத்தி அக் கொள்கைகளால் அறிய முடியாத இன்ப துன்ப நிகழ்ச்சிகளுக்குக் காரணமாகச் சில மேலான ஆற்றல்கள் இருப்பதாக மனிதர்கள் கருதுகிறார்கள். அந்த ஆற்றல்களால் தாங்கள் நன்மையை அடையவும் தீமையை நுகராமலும் இருப்பதற்கு அந்த ஆற்றல் களை நோக்கி வேண்டுகிறார்கள். வேண்டுதல் செய்யும் தொழில் நிகழ்ச்சிக்கு வழிபாடு என்று பெயர் அமைந்து பின்னர் அந்த வழிபாடுகளே சமயக் கோட்பாடுகளாக மாறி அக்கோட்பாடுகள் தத்துவம் என்ற இலக்கண நெறியாக வடிவெடுத்தன. எனவே மக்களின் செயல் முறைகள் காலப் போக்கில் இலக்கணமாக அமைந்து விளங்கிற்று என்ற முடிவுக்கு நாம் வருவதில் தவறில்லை. சைவ சமயத்தில் தோத்திரங்கள் முன்னே தோன்றி சாத்திரங்கள் பின்னே தோன்றியமை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

தத்துவத்தில் முப்பொருள்

தோத்திரமும் சாத்திரமும் பகர்ந்திடும் சைவ தத்துவங் களை மூன்றுக்குள் அடக்கி விடுவர். அந்த மூன்று 'பதி, பசு, பாசம்' என முப்பொருளாக வழங்கப் பெறும். இவற்றைத் தமிழில் இறை, உயிர், தளை எனக் கூறுவர், பதி என்ற சொல் காப்பவன் என்ற பொருளைத் தரும். தன்கீழ் உள்ளாரை நல்ல வகையில் ஆவன செய்து காப்பவன் தலைவன்; ஆதலின் பதி என்பது தலைவன் என்ற கருத்தில் வழங்கப்படுகிறது. இதைத் தமிழில் ஆண்டவன் என்ற சொல்லால் வழங்குவர்.

'பசு' என்பது பாசத்தால் கட்டப்பட்டது என்ற பொருள் தருவது. சைவ சித்தாந்தத்துள் ஆணவத்தால் கட்டப்பட்டிருக் கின்ற உயிரைக் குறிக்க இச் சொல் பயன்படுகிறது.

'பாசம்' என்பதற்குக் கட்டுவது என்பது பொருள். தமிழில் உள்ள 'கயிறு' என்ற சொல்விற்கு நேரிடைச் சொல் — வட மொழியில் 'பாசம்' என்பதாகும். இவ் வடமொழி பாசச் சொல் லைக் கயிறு என்று குறிக்காது — தளை என்ற தத்துவக் கலைச் சொல்லாகத் தமிழில் சைவப்பெருமக்கள் குறிப்பர். ஞான சம்பந்தரும்,

'ஒண் தளையாயின தவிர வரு தலைவன்'

எனக் குறிப்பார்.

திருமூலர் முப்பொருளையும் முறையாகக் கூறவில்லை என்றாலும் முப்பொருள் பற்றிய ஆகமக் கருத்துக்களை ஆங் காங்கு சுட்டிக் காட்டியுள்ளார். திருமந்திர நூலின் அமைப்புப்படி பார்க்கும் போது முதலில் யாக்கை நிலையாமை இடம் பெற் றிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். அப்பகுதியை நோக்குகின்ற

பொழுது திருமூலர் எண்ணம் முப்பொருளில் முதலாகச் சுட்ட வேண்டுவது பாசந்தான் போலும். மனவாசகங் கடந்தார் முதலில் பாசத்தை வைத்துப் பேசுவது இவர்தம் அடிப்படையாக இருக்க லாம். பொருள்களின் இயல்பை விளக்குமிடத்து தெரிந்ததைக் கொண்டு தெரியாததை விளக்குவது சிறப்பாகும். முப்பொருள் களில் பாசம் (உலக, உடம்பு) என்பதே நமக்கு நன்றாய்த் தெரிந்த பொருளாகும். எனவே திருமூலர் அதன் இயல்பை விளக்கிப் பின் மற்றவற்றின் இயல்புகளைக் குறிப்பிடப் புகுந்தார் போலும்.

முப்பொருளில் பாசம்

நாமும் அந்த அடிப்படையிலேயே எடுத்துக் கொண்ட முப் பொருளில் முதலாவதாகப் பாசப் பொருளைத் திருமூலர் வழிக் காண்போம். பாசம் என்பது ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்றினையும் உள்ளடக்கிக் கொண்டதாகும். முதலாவதாக இருப்பது ஆணவமலம். அதனை மூலமலம், சகசமலம், அருண் மலம் எனவும் கூறுவர். செம்பிலே களிம்பும், நெல்லில் உமியும் போல உயிர் என்றுளதோ, அன்று முதல் அதனோடு ஆணவம் உள்ளது. ஆன்மாவின் அறிவை அணுவாயடக்கி மறையும்படி இருட்படலம் போல மறைத்து நிற்பதனால் இதனை ஆணவ இருள் என்று கூறுவர்.

அடுத்து பாசத்தில் இடம் பெறுவது கன்மம் ஆகும். மருத் துவன் நோயாளிக்குப் பரிகாரஞ் செய்து குணப்படுத்துவது உலக இயற்கை. அதுபோலவே ஆணவ நோயுள்ள ஆன்மாவைக் குணப் படுத்தும் பொருட்டு வைத்தியநாதனாகிய இறைவன் உலகைப் படைத்து அங்கு பிறவியைத் தருகிறான். பிறவி எடுத்த உயிர் ஆணவத்தின் முனைப்பினாலே யான் எனது என்ற செருக் கோடு நல்வினை தீவினைகளைப் புரிகிறது. இவ் இருவினைகளே கன்மம் எனப்படும்.

அடுத்து நிற்பது மாயை என்னும் தளையாகும். இறைவனு டைய அளவிறந்த சத்திகளில் மாயையும் ஒன்றாகும். இம் மாயையை இறைவனுடைய பரிக்கிரக சத்தி என்பர். இறைவனது அருட் சத்தியை தாதான்மிய சத்தி என்பர். தாதான்மிய சத்தி நெருப்பும் — சூடும் போலப் பிரிவிலாச் சத்தியாகும். பரிக்கிரகசத்தி முருகனும் — அவனுடைய ஊர்தியாகிய மயிலும் போல, வேண்டும் போது கையாளவும், வேண்டாத போது பிரித்து வைக்கவும் கூடிய சத்தி ஆகும். இம்மாயை சுத்தம், சுத்தாசுத்தம், அசுத்தம் என மூன்று வகைப்படும். சுத்த மாயை சிவதத்துவம் எனவும், சுத்தாசுத்த மாயை— வித்தியாதத்துவம் எனவும், அசுத்தமாயை ஆன்மதத்துவம் எனவும் கூறப்பெறும். அந்த மூவகை மாயா காரியமாக அமைந்ததே உயிர்நிலையாகிய

உடம்பு. இவ்வுடம்பைப் போலவே மாயாகாரியமாக உள்ளது உலகம். இந்த இரண்டையும் விளக்குவதே மாயாமலம்.

இத்தகைய மூன்று மலங்களில் – நாம் ஆணவம், கன்மம் என்ற இரண்டினையும் விடுத்து மாயையை மட்டும் முதற்கண் ஆய்ந்துரைப்போம். அம்மாயையின் உடம்பு-உலகம் என்ற இரு பிரிவுகளிலும் உடம்பினை மட்டும் எடுத்துக் கொள்வோம். ஏனெனின் பாசம் என்பது விரிந்துபட்ட ஒன்று. அதிலும் ஆய்வு என்ற நிலையில் ஆயப்புகுந்தால் முடிவே காணயியலா. எனவே மூலர் தந்திடும் முப்பொருளில் பதி, பசு, பாசத்தில் உடம்பு என்ற மூன்று நிலையைக் காணப்புகுவோம்.

முன்னே குறிப்பிட்டபடி மூலர் தந்திடும் முப்பொருளில் அவரின் வைப்பு முறைப்படியே முதலில் உடம்பைக் காண்போம். ஏனெனில் உள்ளதைக் கண்டு இல்லாததைக் விளக்குவது பொருத்தமுடையதாகும். உடம்பு நம்மால் காணக் கூடியது ஒன்று. அதனை முதலில் கண்டு தெளிந்து – பின் அது இயங்க உதவும் உயிர் கண்டு – பின் அதனை இயக்கும் இறையைக் காண்பது சாலப் பொருந்தும் என்பதற்கிணங்க முதலில் உடல் பற்றிய – மூலர் தந்திடும் கருத்துக்களைக் காண்போம்.

முப்பொருளில் உடல்

உடல் என்னும் சொல் தமிழின் இயற்சொல்லே ஆகும். உள் என்ற வேர்ச் சொல்லிலிருந்து பிறந்தது ஆகும். உடல் என்ற சொல்லுக்கு ஆறுவகையான பொருட்களை அகராதிகள் குறிப் பிடுகின்றன.[1] அவை: 1. உடம்பு, 2. மெய்யெழுத்து, 3. பிறவி, 4. சாதனம், 5. பொன். 6. ஆடையின் கரைநீங்கிய பகுதி. எனவே உடல் என்ற சொல்லை பலவித கோணங்களில் ஆராய் கின்றபோது பலப்பல பொருள்கள் தோன்றினாலும் அடிப்படை யான பொருள் உடம்பைக் குறிக்கும் என்பதையும் நாம் உணர லாம். திவாகரத்தில் பொன் என்ற பொருளில் 'உடல்' குறிக்கப் பெற்றுள்ளது என்பதும், அதுபோல சாதனம் என்ற பொருளில் 'உடல்' ஈடு உரைகளில் குறிக்கப் பெற்றிருப்பதும் குறிப்பிடத் தக்கனவாகும். அது போலப் புறப்பொருள் வெண்பா மாலையில் மாறுபாடு என்ற பொருளில்[2] இடம் பெற்றிருப்பது ஆய்வுக் குரியதே.

தொல்காப்பியத்தில் உடல்

உடல் என்ற சொல் தொல்காப்பியத்தில் மூன்று அதிகாரங்

---

[1] சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு

[2] புறப்பொருள் வெண்பாமாலை 8–1.

களிலும் இடம் பெற்றுள்ளது. உடம்படு மெய் என்றும்,[1] உடம்பே என்றும்,[2] உடல் என்றும்,[3] உடம்படுத்தற்கு என்றும்,[4] உடன்பட்டோன்[5] என்றும், போக்குடன் என்றும்,[6] உடம்பும் உயிரும் என்றும்,[7] உடம்புநனி சுருங்கல் என்றும்[8], சொற்கள் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில் இடம் பெற்ற சொற்களை ஆராய்ந்தால் உடல் என்ற சொல் உடம்பையும், உடம்படு மெய் என்ற எழுத்தையும், இசைவு என்ற பொருளையும் உணர்த்துவதை நாம் உணரமுடிகிறது. இசைவு என்ற பொருளுக்கு உடன்படல் என்ற சொல் ஏற்பட்டது உடல் என்ற அடிச் சொல்லின் வளர்ச்சியாகலாம் என்று கருத இடமிருக்கிறது. மதியுடம்படுதல், உடன்போக்கு, போக்குடம்படுதல் போன்ற சொற்கள் அதற்கு ஆதாரமாக இருப்பவை. ஏனெனில் உயிரோடு உடன்பட்டு இயங்கும் உடம்புக்கு உடல் என்று பெயர் ஏற்பட்டது போல் — ஒருவரோடு மற்றவர் உடன்படுதல் உடன்போக்கு ஆயிற்று.

திருக்குறளில் உடல்

திருக்குறளில் உடம்பு என்ற சொல் பதின்மூன்று இடங்களிலும்[9] 'உடல் என்ற சொல் இரண்டு இடங்களிலும்[10] காணப் பெறுகின்றன. உடல் என்ற அடிச் சொல்லில் இருந்து உடற்றுதல் என்ற சொல்லின் வளர்ச்சியை நாம் திருக்குறளில் காண முடிகிறது.

இவ்வாறு இலக்கிய இலக்கணங்களில் நாம் உடல் பற்றிய சொல்லையும் அதிலிருந்து தோன்றிய சொல் வளர்ச்சியையும் காணமுடிகிறது.

ஒருபொருள் குறித்த பலசொற்கள்

உடல் என்ற சொல்லுக்குப் பல பொருளை இலக்கிய இலக்கண நூல்கள் வாயிலாகக் கண்ட நாம் அந்த உடல் என்ற பொருளுக்கு வழங்கப்பெறும் பல சொற்களையும் காணுதல்

---

1 தொல்காப்பியம் (சொல்) எழுத்து. புணரி —38
2 தொல். சொல். கிளவி — 58
3 தொல். பொருள். புறம் — 5
4 தொல். பொருள். களவு — 5
5 தொல். பொருள். களவு — 24
6 மேற்படி ,, ,, — 25
7 மேற்படி ,, ,, - 26
8 தொல். பொருள், மெய் - 22
9 திருக்குறள் 80, 330, 338, 340, 345, 627, 886, 943
10 மேற்படி 65, 253

வேண்டும். அவ்வாறு காணப்புகும் நமக்கு திருமூலர் துணையாக அமைகின்றார். உடல் என்ற பொருளுக்குரிய சொற்கள் அனைத்தையும் பயன்படுத்தியே ஒரே இலக்கியம் திருமூலர் தந்த திருமந்திரமே ஆகும். எனவே தான் உடல் என்ற சொல்லுக்கு உரிய பொருள்களை இலக்கிய இலக்கணத்தில் கண்ட நாம் உடல் என்ற பொருளுக்குரிய சொற்களைத் திருமந்திரத்தில் காண விழைகின்றோம். ஏறக்குறைய – பதினொரு சொற்களைத் திருமூலர் கையாள்கிறார். உடல், கூடு, யாக்கை, ஊன், குரம்பை, ஆக்கை, காயம், பிண்டம், துன்பக் கலசம், பரகாயம், காயத்தேர் என்பன அவை. இவற்றில் ஊன் என்பதும், யாக்கை என்பதும் அவர் அதிக இடங்களில் கையாளும் சொற்களாகும். உடல்பற்றிய விரிவான எண்ணங்களை உடைய காரணத்தினால் தான் இத்தனை சொற்களை அவர் கையாள முடிந்தது. மேலும் செய்யுள் வாயிலாகத் தன் கருத்தைக் கூறப்புகுந்தமையாலும் சொற்கள் விரிவுபட்டன எனலாம். இனி, திருமூலரின் உடல் பற்றிய எண்ணங்களைப் பலவகையாகப் பகுத்துக் காண்போம்.

உடல் அமைப்பு

இன்றைய விஞ்ஞான உலகில் உடலியல் (Physiology) பற்றிய எண்ணங்கள் பல நிலையில் வளர்ந்து விரிந்துள்ளன. பிறமொழியாளரின் ஆய்வுகளாலும். இந்திய நாட்டு ஆய்வுகளாலும் உடற்கூறு பற்றிய விளக்கங்கள் பரந்துபட்டுக் காணப்படுகின்றன. இன்றைய நாகரிக உலகில் அத்தகைய ஆய்வுகள் வளர்ந்திருப்பது ஒன்றும் வியப்புக்குரியது அல்ல. ஆனால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னே நாகரிகம் வளராத காலத்து – ஆய்வியல் சாதனங்கள் தோன்றாத காலத்து உடற் கூறுபற்றித் திருமூலர் எழுதியிருப்பது தான் வியப்புக்குரியதாகும். அவர் தன்னுடைய நூலில் வெறும் சமயத் தத்துவங்களை மட்டும் கூறாது – மனித உடற் கூறுபற்றிய தத்துவங்களையும் கூறியிருப்பது பெருமைக்குரியதாகும். திருமூலர் கூடுவிட்டுக் கூடு பாயும் தந்திர வித்தையால் பெரியபுராணத்தில் இடம் பெற்றது உண்மையோ-இல்லையோ அறிந்திட இயலாது. ஆனால் திருமந்திர நூலால் – உடலமைப்பைத் தெரிந்த விஞ்ஞானியாக அவர் திகழ்வது முற்றிலும் உண்மை.

திருமூலர் மனித உடலை இருவகையாகப் பிரிக்கிறார். தூல உடம்பு என்றும் சூக்கும உடம்பு என்றும் அவ்விருவகைக்குப் பெயர் கொடுப்பார்.

''எய்தும் மதிக்கலை சூக்கத்தில் ஏறியே
எய்துவது தூலம்; இருவகைப் பக்கத்துள்

எய்துங் கலைபோல ஏறி இறங்குமாம்
துய்யது சூக்கத்துத் தூலத்த காயமே''[1]

என்பது பாடல். சூக்குமம் என்பது நுண்ணுடம்பாகிய உள் உடம்பைக் குறிக்கும். இதனை இக் காலத்தார் (Sublet body) என்பர். தூல உடம்பு என்பது பருவுடாலாகிய புற உடம்பைக் குறிக்கும். இதனை இக்காலத்தார் (Physical body) என்பர். இப் பிரிவை சைவசித்தாந்த நூல்கள் அனைத்தும் ஏற்கும். மூலர் இதற்கு மேலும் உடம்பை காயம், பெருங்காயம் என இருவகை யாகப் பிரிப்பார்.

''காயம் இரண்டினுங் கலந்து கொதிக்கினும்''[2] என்பது அவரின் தொடர். ஒன்று விரும்பத் தகுந்த தூயமாயையினின்றும் தரப்படும் சிவ உலக உடம்பு. இதனை வெங்காயம் என்பர். மற்றொன்று தூவாமாயையினின்றும் தரப்பெறும் உரு உடம்பு. இதுதான் இவ்வுலக உடம்பு. இதனைப் பெருங்காயம் என்பர். இத்தகைய பெயர்களை பிற்காலத்துப் பாடலாம் 'வெங்காயம் சுக்கானால்' என்ற பாடலும் வலியுறுத்தும்.[3] இவ்வாறு உடம்பை இருவகையாகக் காட்டும் திருமூலர் பருவுடம்பின் அமைப்பையும் மிகச் சிறப்பாகக் காட்டுகிறார்.

''காலும் இரண்டு முகட்டலக்கு ஒன்றுள
பாலுள் பருங்கழி முப்பத்திரண்டுள
மேலுள கூரை பிரியும் பிரிந்தால்முன்
போலுயிர் மீளப் புக அறியாதே''[4]

இப்பாட்டால் கால் இரண்டு – முதுகெலும்பு 1, விலா எலும்பு 32 தலைமயிர் ஆகியவற்றைக் குறிக்கிறார். இப்பாட்டால் முது கெலும்பில் 32, பக்க எலும்புகள் உள்ளன என்று மூலர் குறிப்பிட்டிருப்பது அவர் ஒரு சிறந்த உடலியல் வல்லுநர் என் பதைப் புலப்படுத்துகிறது. இக்கால வல்லுநர்களும் அவ் எண்ணிக் கையில் ஒன்றுபட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் உடம்பில் 9துவாரங்கள் உண்டு என்பதை மூலர்,

'ஒன்பதுவாசல் உடையதோர் பிண்டத்துள்'[5]

என்ற தொடரால் விளக்குவார். மேலும் பத்து இடங்களில் வாயுக்கள் இருந்து உடம்பினை இயக்குகின்றன என்பது அவர் தம் கூற்று.

---

1 திருமந்திரம் பாடல். 831
2 மேற்படி பாடல். 16
3 பலபட்டடைச் சொக்கநாதப் புலவர், தனிப்பாடல் திரட்டு– பூம்புகார் பிரசுரம், பக்கம் 262
4 திருமூலர், பாட்டு 190
5 மேற்படி பாட்டு, 638

''ஒத்த இவ் ஒன்பது வாயுவும் ஒத்தன
ஒத்த இவ் வொன்பதின் மிக்க தனஞ்செயல்
ஒத்த இவ் ஒன்பதில் ஒக்க இருந்திட
ஒத்த உடலும் உயிரும் இருந்ததுவே''[1]

என்பது அப்பாடல், சிறப்பால் தம்முள் ஒத்தனவாகிய தனஞ்சயன் ஒழிந்த ஒன்பது வாயுக்கள் ஒன்பதில் உள்ளன. அவை தனஞ்சயனுடன் ஒப்பக் கலந்து உயிரையும் உடம்பையும் இயங்க வைக்கிறது என்பது அப்பாடலின் விளக்கம். ஒன்பது இடங்களில் வாயுக்கள் இருப்பதை இடகலை, பிங்கலை, சுழுமுனை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கின், குகு என்பர். இவ்வாறு உடம்பின் அமைப்பை திருமூலப் பெருந்தகை பலவாறு விரித்துக் கூறுகிறார். இதனை மத நூல் என்ற கண்ணோட்டத் தோடு காணாது — உடலியல் நூல் எனக் கொண்டு ஆய்ந்தால் தமிழர் தம் அறிவியல் புலப்படும்.

உடம்பின் தோற்றம்

இவ்வாறு உடம்பின் அமைப்பை விரிவாக உணர்த்திய மூலர் உடலின் தோற்றம் பற்றியும் சிறப்பாகக் கூறுகிறார். இறைவ னால் தான் உடம்பு தோன்றுகிறது என்ற கருத்தும் - 10 திங்கள் தாயின் கருவறையில் இருந்து தோன்றுகிறது என்ற கருத்தும் அவருக்கு உடன்பாடே.

''நின்று யிராக்கும் நிமலன் என்ஆருயிர்
ஒன்று யிராக்கும் அளவை உடலுற
முன்று யராக்கும் உடற்குந் துணையதா
நன்றுயிர்ப் பானே நடுவு நின்றானே''[2]

என்ற இப்பாடல் மூலம் இறைவன் திருவருளால் உயிர் தோன்று கிறது என்றும் - அவ்வுயிர் வினையினை அனுபவிக்க உடல் உரு வாக்கப் பெறுகிறது என்றும் — குறிப்பிடுகிறார். இதனையே அப்பரும்[3] வலியுறுத்தலைக் காணலாம். அடுத்து உடம்பு தாயின் கருவில் முந்நூறு நாட்கள் இருந்து பிறத்தலை

'முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்'[4]

என்ற தொடர் வலியுறுத்தும். மேலும் இந்த உடம்பு வினைக்கு நிலைக்களனாகப் பிறந்தாலும் வினையின் பற்றுக்களை—அதாவது பாசப் பற்றுக்களை அழிப்பதற்கும் கருவியாகும் என்பதனை

---

1 மேற்படி, பாட்டு, 633

2 மேற்படி, பாட்டு, 381

3 அப்பர் 5-21-1

4 மேற்படி, பாட்டு, 207

''குரம்பை – பழப்பதியாவது பற்றறும் பாசம்
பழப்படி செய்வார்க் ககலும் மதியே''[3]

என்று பாடலில் குறிப்பிடுகிறார். மாயாகாரியமாகிய இவ்வுடம்பு தொன்றுதொட்டு வருவது. பாசப் பற்றறுக்கும் கருவியாகும் என்பது அப்பாடல் தரும் குறிப்பாகும்.

இவ்வாறு மூலர் தம் நுண்ணறிவால் உடலின் தோற்றத்தைத் தத்துவ நிலையிலும், விஞ்ஞான நிலையிலும் சுட்டிக்காட்டுவது போற்றுவதற்குரித்தாம்.

உடம்பின் நிலையாமை

உடம்பின் தோற்றம் பற்றிக் கூறிய மூலரின் கருத்துக்களை ஆய்ந்து நோக்கும்போது யாக்கை நிலையாமை பற்றி அவர் கூறும் பாடல்கள் நமக்குச் சிறந்ததொரு விருந்தாக அமைகின்றது.

யாக்கை நிலையாமை பற்றித் திருமூலர் 25 பாடல்களால் ஒரு தனித் தலைப்பாகவே அமைத்து விளக்குகின்றார். வள்ளுவப் பெருமானின் கருத்துக்களை அந்த 25 பாடல்களிலும் பரக்கக் காணமுடிகிறது என்றாலும் திருமூலரிடம் புதுமை இல்லாம லில்லை. நடைமுறை நிகழ்ச்சியை வைத்துக் கொண்டே யாக்கை நிலையாமையைச் சிறப்பாக வெளிப்படுத்துவது, திருமூலரின் தனித்திறமை ஆகும். உடம்பு நிலையாமை உடைத்து என்பதை ஒரு பாடலில் அருமையான இல்லற நிகழ்ச்சியாக வைத்துப் பாடுவார்; இதோ அப்பாடல்:

''அடப்பண்ணி வைத்தார்; அடிசிலை உண்டார்;
மடக்கொடி யாரோடு மந்தணங் கொண்டார்;
இடப்பக்கமேஇறை நொந்ததிங் கென்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே''[2]

இப்பாடலின் பொருள்

'உணவு சமைத்தற்கு வேண்டுவன வற்றை சுட்டிக் கொணர்ந்து வைத்த தலைவர், சமைத்தாயின பின்பு அவ்வுணவை உண்டார்; பின் தம் இல்லக் கிழத்தியாரொடு தனிமையில் இருந்து சிலவற்றை உசாவுதல் செய்தார்; அச் செயலுக்கிடையே, 'உடம் பில் இடப்பக்கம் சிறிது நோகின்றது' என்று சொல்லி, அது நீங்குதற்பொருட்டு ஓய்வு கொள்ளுதற்குப் படுத்தார். படுத்தவர் படுத்துவிட்டவரே ஆயினார்; மீள எழுந்திருக்க வில்லை'' என்ப தாகும்.

ஒரு சமயநூலில் இத்தகைய நிலையில் யாக்கை நிலையாமை

---

1 மேற்படி., பாட்டு, 769

2 மேற்படி., பாட்டு, 147

விளக்கப்படுவதை நாம் எண்ணுகிறபோது அச் சமய நூல் தத்துவ நூலாக மட்டும் விளங்கவில்லை; சிறந்த அறநூலாகவும், சிறந்த இலக்கிய நூலாகவும் விளங்குகிறது என்பதை உணர முடிகிறது. இத்தகைய நிலையாமையை உடைய உடம்பை உயிர் பிரிந்தபின் என்ன செய்கிறார்கள் என்பதைக் கூட திருமூலர் விளக்குகிறார். இதோ அப் பாடல்:

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே''

இப்பாடல் மூலம் திருமூலர் காலத்தில் உயிரற்ற உடம்பை எரியூட்டி உள்ளனர் என்பது தெரிகிறது. பிணம் என்ற பெயர் அந்த உயிரற்ற உடலுக்குச் சூட்டப்படுவதையும் நாம் உணர முடிகிறது. பிணத்தை எரித்துவிட்டு நீரில் மூழ்கி இறந்தவரை மறந்துவிடுகின்ற மனிதப் பண்பையும் பாடலில் குறிப்பிட்டிருப்பது போற்றுதற்குரித்தாகும். இதையே ஐயடிகள் காடவர்கோனும் தன்னுடைய நூலில் காட்டியிருப்பதை ஒப்பு நோக்கி உணரலாம்.[1]

உயிர் பிரிவதை அறிந்து கொள்ளுவதற்குக் கூடத் திருமூலர் உபாயங்களைக் கூறுகிறார் 'ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தன'[2] என்றும் 'சீக்கை விளைந்தது; செய்வினை மூட்டிற்று; அலகு பழுத்தது'[3] என்றும் அவர் குறிப்பிட்டிருப்பது சிறப்புடைத்தாகும். உயிர் பிரிகின்ற உடம்பு இரத்தம் உறைந்து வெளுக்க ஆரம்பிக்கும் என்பதைத் தான் 'அலகு பழுத்தது'' என்கிறார். இத்தகைய விஞ்ஞானக் குறிப்பு அவருக்குக் கைவந்த கலை போலும்! யாக்கை நிலையாமையின் கடைசிப் பாடல்:

''காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டுப் போன இக் கூட்டையே''.[4]

இப்பாடலின் கருத்தை அப்படியே நாலடியாரில் காணமுடிகிறது.[5] உயிர் உடம்பிலிருந்து புறப்பட்டுச் செல்லுவதும் சிறப்புடைத்தாம். உடம்பினுள் உயிர் இருப்பது 'பறந்து திரியும் பறவையைப் பிடித்து அடைத்து வைத்த பிறகு அப்பறவை எவ்வாறு அக் கூட்டினுள் அடைபட்டுக் கிடக்கிறதோ அது போன்றதாகும்'

---

1 திருவெண்பா, 8, 9
2 திருமந்திரம், 191
3 மேற்படி, 146
4 மேற்படி, 166
5 நாலடியார், யாக்கை, 10

என்றும்; உடம்பை விட்டு உயிர் பிரிவது 'அடைபட்ட பறவை அக் கூட்டிலிருந்து பறந்து ஓடுவது போன்றதாகும்' என்றும் மூலர் கூறியிருக்கும் உவமை சிறப்புடைத்தாகும். இதனையே திரு வள்ளுவனாரும் தம் நூலில் கூறியிருப்பது[1] ஒப்புநோக்கத்தக்க தாகும்.

இவ்வாறு உடம்பின் நிலையாமையை மட்டும் திருமூலர் கூறினாரில்லை. உடம்பின் இளமையும் நிலையாமை உடையதே என்பதை 'இளமை நிலையாமை' என்ற தனித் தலைப்பிலேயே பத்துப் பாடல்களில் விளக்குகிறார். 'நாள்தோறும் கிழக்கில் அழகாய்த் தோன்றி — பின் நேரம் செல்லச் செல்ல பேரொளியும் வெப்பமும் உடையதாகி — இறுதியில் மேற்கில் மறையும் போது வெப்பமும் ஒளியும் குறைந்து மறைகின்ற ஞாயிறைப் போன்றதே உடம்பில் இருக்கும் இளமை[2] என்று கூறுவது ஆய்ந்து இன்புறத் தக்கது ஆகும். அதுபோல 'பெண்மை இளமையில் கரும்பை ஒத்தும், இளமை கழிந்த போது காஞ்சிரங்காயை ஒத்தும் விளங் கும்[3] என்றும் கூறுவது சிறப்புடைத்தாகும்.

இவ்வாறு நிலையாமையைப் படம் பிடித்த திருமூலர் அவற்றை நிலையாமையிலிருந்து காப்பாற்றும் வழியையும் குறிப் பிடுகிறார். அவற்றை இனிக்காண்போம்.

திருமூலர் சித்தர் பாரம்பரியத்தைத் சார்ந்தவர் என்பதைச் சில பாடல்கள் மூலம் நாம் அறியமுடிகிறது. அப்பாடல்களே உடம்பு அழியாமையையும் இளமை அழியாமையையும் கூறு கின்றன. தியானம் என்ற தலைப்பில் உள்ள பாடல்கள் அனைத் துமே உடம்பு அழியாமையைக் கூறுவனவாகும். அப்பகுதிக்கு அருணை வடிவேல் முதலியார் அவர்கள் உரை எழுதும் போது 'பூதம் ஐந்து; தன் மாத்திரை ஐந்து; அந்தக் கரணம் நான்கு; பிரகிருதி ஒன்று என்னும் பதினைந்துடன் புருடன் என்ற ஒன்று கூட பதினாறையும் தியான முறைப்படி அவ்வவ் வாதாரங்களில் வைத்து தியானித்தல்'[4] என்று குறிப்பிடுவார். எனவே மேற் கூறப்பெற்றபடி தியானத்தைச் செய்கின்றபொழுது இறை வனுடைய திருவருளால் உடம்பு அழியாது நிலைத்திருக்கும் என்பது புலனாகிறது. இத்தகைய தியான முறையில்தான் திருமூலரும் பல ஆயிரம் ஆண்டுகள் உயிருடன் வாழ்ந்து திருமந்திர நூலைத் தந்தார் போலும்.

''நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை

---

1 திருக்குறள், 338
2 திருமந்திரம், 221
3 மேற்படி, 224
4 மேற்படி, (தருமைப் பதிப்பு 1974) பக்கம் 587

ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமும் இல்லை சிவனவன் ஆமே''[1]

என்ற பாடல் உடம்பு நிலை பெறுதற்குரிய வழிகளைக் கூறும் பாடல்களில் ஒன்றாகும். நாட்டம் இரண்டினையும் புருவ நடுவிற்கு நேராக. மூக்கு நுனியில் வைத்தல் வேண்டும். அங்ஙனம் வைத்து உயிர்ப்பு அடக்கி – அசைவற நிற்க திருவருள் ஒளி அகத்தே காணப்படும். ஒளி காணப்படவே உடம்புக்கு எவ்வகை வாட்டமும் இல்லை. அழிவும் ஏற்படாது. உயிர்ப்புப் புறஞ் செல்வதாகிய ஓட்டமும் இல்லை. புறப்புறங்கள் மாட்டுச் செல்லும் உணர்வும் இல்லை. தன்முனைப்பும் இல்லை. எவ்வகை வேட்கையும் இல்லை என்று அப்பாடல் பொருள் தருகிறது. இது போல இப்பாடலின் அடுத்த பாடலும் உடம்புக்கு அழிவு இல்லாத தியான முறையைக் கூறுகிறது. இத்தகைய கருத்துக்களைப் பார்க்கின்ற பொழுது உடம்பு என்பது தியான முறையால் அழியாமல் பாதுகாக்கக் கூடிய நிலையிலும் இறையருளால் படைக்கப்பட்டது என்பது பெறப்படுகிறது.

இதேபோல இளமை நிலையாமையைப் பற்றிச் சொல்லும் பொழுது – நரை தோன்றாமைக்கு ஓர் பாடலைத் திருமந்திரத்தில் காண முடிகிறது.

''ஏழா னதிற்சண்ட வாயுவின் வேகியாம்
தாழா நடைபல யோசனை சார்ந்திடும்
சூழான ஓரெட்டில் தோன்றா நரைதிரை
தாழான ஒன்பதிற் றான்பர காயமே''[2]

என்பது அப்பாடல். இப்பாடல் மூலம் யோகப் பயிற்சியை எட்டாண்டுகள் செய்தால் நரை திரை தோன்றா என்று தெரிகிறது.

இவ்வாறு திருமூலரின் பாடல்கள் உடம்பு நிலை பெறுவதற்கும், இளமை மறையாமல் இருப்பதற்கும் வழிமுறைகளைக் கூறுவதைப் பார்க்கும்போது திருமூலர் காலத்தில் யோகமும் தவமும் சிறந்தோங்கி யிருந்தது என்பது புலனாகிறது.

உடம்பின் பெருமைகள்

திருமூலரின் கருத்துக்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தது அவர் உடம்பின் பெருமைகளை எடுத்துக் கூறும் பாடல்களாகும். உடம்பு இறைவனிருக்கும் திருக்கோயில் என்பது அவரின் அசைக்க முடியா எண்ணமாகும்.

---

1 திருமந்திரம், பாடல், 584
2 பேற்படி, பாடல், 627

''உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான் என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே''[1]

என்ற பாடலில் 'உடம்புக்குள்ளே உத்தமன் இருக்கின்றான்' என்ற தொடர் இறைவனின் இருப்பிடம் உடம்பே என்பதை வலியுறுத்துகிறது. பிறிதோரிடத்தில்

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே''[2]

என்று அவர் குறிப்பிடுவதும் மேற்கூறிய கருத்தை வலியுறுத்துவதாகும். இத்தகைய உடம்பை இறைவனின் திருவடியை வணங்குவதற்குப் பயன்படுத்தினால் உயிருக்குப் பயனுண்டாகும் என்பதும் அவர் கருத்தாகும். இல்லையென்றால் அவ்வுடம்பு வீணே கழிதலோடு உயிரும் பயனற்றதாகிவிடும். இதையே கீழ்க்கண்ட பாடல் வலியுறுத்துகிறது.

''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே''[3]

இப்பாடலில் உடம்பைப் பொருளாகக் கொண்ட தன்னை அறிவுடையோர் இகழமாட்டார்கள் என்ற குறிப்பை ஆசிரியர் பெறவைப்பதும் அதன் மூலமாக நம்மை உடம்பை நிலைநிறுத்த முயலுங்கள் என்று கூறியிருப்பதும் சிறப்புடைக் கருத்துக்களாகும்.

உவமை என்னும் தவலருங் கூத்தி

உடம்பு பற்றி திருமூலர் குறிப்பிடும் பொழுது, உவமை நலம் தோன்றக் கருத்துக்களை விளக்கியிருக்கிறார். உடம்பிற்கு சிலந்தியின் கூட்டை ஆசிரியர் ஒப்புமை காட்டி அதன்மூலம் தத்துவக் கருத்துக்களை விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ''சிலந்தியானது தன் வாயினால் தன் உடம்பினின்றும் நூல் இழைக்கின்றது. அந்நூலால் தனக்கு வேண்டிய உணவுகளை அகப்படுத்தும் வலைகளை அமைத்துக் கொள்ளும். மேலும் தான் தங்குவதற்குரிய கூட்டையும் அமைத்துக் கொள்ளும். அத்துடன் அக் கூட்டின் மத்தியில் தான் தங்குவதற்குரிய வாய்ப்பான இடமும் அமைத்துக் கொள்ளும். அதுபோல சிவபெருமானும் ஆருயிர்கள் இருவினைக்கு ஈடாக ஆடுதல் புரியும் இடமாக உடம்

---

1 மேற்படி, 705
2 மேற்படி, 152
3 மேற்படி, 704

பினை அமைத்து அருளியுள்ளான். அவ்வுடலினின்று உயிர் ஆட்டம் புரியும். சிவபெருமானும் உடம்பகத்து அவ்வுயிர் ஐம்புலன்களை நுகர்தற் பொருட்டுத் தானும் உடன் இயைந்து ஆடல் புரிவான்'' என்று சிலந்திக் கூட்டை உடம்பிற்கு ஒப்புமை காட்டி விளக்கியுள்ளார். இத்தகைய தத்துவம் நிறைந்த உவமை இடம் பெற்ற பாடல்:

''மத்திமம் ஒத்த சிலந்தி வலயத்துள்
ஒத்தங் கிருந்து உயிருண்ணு மாறுபோல்
அத்தனும் ஐம்பொறி ஆடகத் துள்நின்று
சத்த முதல்ஐந்தும் தானுண்ணு மாறே''[1]

மற்றோரிடத்தில் பாடிவீடு ஒத்த உடம்பு என உடம்புக்குப் பாடிவீட்டை உவமை காட்டுகிறார்.[2] பகையரசன் தங்கும் இடத்தைப் பாடிவீடு என்று கூறுவதுண்டு. அதுபோல பிறவிக்கு நண்பனாம் முத்திக்குப் பகையாம் பாசம் தங்குகின்ற உடம்பைப் பாடிவீடு என்றல் பொருத்தம் தானே! அத்தகைய பாடிவீடாம் உடம்பு தோன்றுவதை மற்றோர் இடத்தில் உப்புத் திரண்டு உருவாவதை உவமையாக்கி விளக்கியுள்ளார். உலகம் ஒடுங்கும் காலத்து உடம்பும் பல தத்துவங்களாய் ஒடுங்கி முடிவில் எல்லா வற்றுடனும் மாயையில் ஒடுங்கும். ஒடுங்கி உடல் மீளவும் சிவ னருளால் தோன்றுவதுண்டு. எதுபோல என்றால் கடல் நீரில் தோன்றாது நின்ற உவர்ப்புச் சுவை – பின் தோன்றி நிற்கும் உப்பாக உருவெடுத்தது போன்றது ஆகும்.[3] இங்கு ஆசிரியர் உடம்புக்கு உப்பைக் காட்டியிருப்பது மிகவும் பொருத்தமாகும். அதுபோலக் கடலை சிவபெருமானுக்கு உவமைப்படுத்தியிருப் பதும் மிகச் சிறப்பாகும். மற்றவரெல்லாம் பிறவியைக் கடலாகக் கண்டிருக்க[4] திருமூலர் கடலை இறைவனுக்கு உவமைகாட்டி யிருப்பது சிறப்புடையதாகும்.[5]

இவ்வாறு உடம்பிற்குப் பலவிதமான உவமையைக் காட்டிய திருமூலர் உடம்புக்குள்ளே இறைவன் இருக்கின்றான் என்ற கருத்தைக் கூற வரும்போது,

''வேயின் எழுங்கனல் போலேஇம் மெய்யெனும்
கோயில் இருந்து குடிகொண்ட கோன்நந்தி''[6]

---

1 மேற்படி, *2131*
2 மேற்படி, *1263*
3 மேற்படி, *476*
4 திருக்குறள், *10*
5 திருமந்திரம், *474*
6 திருமந்திரம், *160*

என்று உவமை காட்டி விளக்குகிறார். இங்கு உடம்புக்கு மூங்கி லும் இறைவனுக்குத் தீயும் உவமை காட்டப் பட்டுள்ளது.

இத்தகைய உவமை நலத்தால் உடம்பினைப் பாராட்டி மகிழும் திருமூலர் பாங்கினை மற்றவர்களிடத்தில் காண இய லாது. இன்னும் ஆய்ந்து பார்க்கின்ற போது பல உவமை நலன் களைக் காணமுடியும்.

திருமூலர் காட்டும் உயிர்

முப்பொருள் இயல்பை சித்தாந்தம் குறிப்பிடும் பொழுது ஒன்றோடு ஒன்றை தொடர்பு படுத்தித்தான் குறிப்பிடும். சிவ ஞானபோத சூத்திரம் கூட முப்பொருளையும் வகைப்படுத்திக் கூறாது மூன்றையும் பிணைத்துக் கூறுவதை சான்றாகக் காட்ட லாம். எனவே திருமூலர் காட்டும் உயிரை நாம் காணுகிறபோது அதோடு இணைந்து வருகின்ற உடம்பையும் இறைவனையும் ஆங்காங்கு குறித்துச் செல்லுதல் வேண்டும். உயிர் என்பதைச் சித்தாந்தம் பசு என்று குறிப்பிடும். பசு என்பதற்கு பாசத்தால் கட்டப்பட்டது என்பது பொருள்[1]. இயற்கையிலேயே ஆணவத் தால் கட்டுப்பட்டதால் உயிரை அது குறிக்கிறது.

காணப்படுகின்ற உலகம் அறிவுடையது என்றும் அறிவு இல்லாதது என்றும் இருநிறப்பட்டு நிற்கும். அதில் அறிவுடை உலகத்தையே உயிர் என்று கூறுவார்கள். இதை வடசொல்லால் சேதனப் பிரபஞ்சம் என்பர். திருமூலர் இதனை குறிப்பிடும் பொழுது இதுதான் உயிர் என்று குறிப்பிடாது பொதுவாக உயிரினுடைய இலக்கணத்தைக் குறித்துச் செல்லுகின்றார்.

உயிர் என்பதை அடைமொழி அடுத்த சொல்லாகவும், சீவன் என்றும், பாசம் என்றும், ஆவி என்றும் பிறசொல்லாலும் குறிக் கின்றார். உயிரைப்பற்றிய கருத்துக்களைச் சொல்லும் பொழுது உயிர் நிலையாமையை முதற்கண் கூறி பிறகு அவ்வுயிர் இறை வனின் திருவடியை அடைவதற்கு பயன்படும் ஒரு கருவி என்றும், உயிரின் வகைகள் இத்துணை என்றும், உயிரைப் பிறவித்துன்பத் திலிருந்து விடுவிக்க மேற்கொள்ளும் தவமுறைகளையும் திருமூலர் காட்டிச் செல்லுகிறார். அவற்றை முறையாகக் காண்போம்.

உயிரானது மெய், வாய், கண், மூக்கு செவி என்னும் ஐம்புலத்தார்க்கு உரிமையாக விளைந்து கிடக்கும் விளைநில மாகும். அந்த ஐம்புலத்தாரும் அவ் விளைநிலத்தினைத் தம்வழி இழுத்துக் காத்து நின்றனர். இந்த ஐவரும் சிவபெருமானின்

---

[1] முப்பொருள் இயல்பு. ஆசிரியர் சி. அருணைவடிவேலு முதலியார், சைவ சித்தாந்த மகா சமாஜம் (1976) பக்கம், 50

திரு ஆணை வழி நடப்பவர் ஆவர். இக்கருத்தைக் கீழ்வரும் பாடல் உணர்த்துகிறது.

''ஐவர்க்கொருசெய் விளைந்து கிட்ந்தது
ஐவரும் அச்செய்யை காத்து வருவர்கள்''[1]

உயிர் நிலையாமையை ஆசிரியர் உவமையின் மூலமாக வெளிப் படுத்துகிறார். பலவாகிய பயன் மரங்களும் செந்தளிர்கள்உடைய தாய் இருந்து நன்றாக தழைத்து செழித்து காட்சி தந்தாலும் என்றாவது ஒருநாள் அவை பழுப்புற்று உதிர்ந்து மரத்தை விட்டு கழிந்துதான் ஆகவேண்டும். அதுபோலத்தான் நம்முடைய உயிரும் என்றாவது ஒருநாள் உடம்பை விட்டு கழிந்துதான் ஆகும், என்று எடுத்த உடனேயே உடம்பின் தன்மையையும் கூறி அது நிலை யாமை உடையது என்ற விதியையும் வகுத்து விடுகிறார். உயிர் நிலையாமையைப் பற்றி 10 பாடல்களில் ஆசிரியர் கூறும் பொழுது அக்கருத்துக்கள் இறைவன் ஒருவன் தான் நிலைத்த பொருள் என்பதைச் சுட்டி விடுகிறது. இவ்வாறு உயிரின் நிலை யாமையைக் கூறிய ஆசிரியர் அடுத்து உயிரைப் பற்றிய தத்துவக் கருத்துக்களை கூறுவதைக் காண்போம்.

உயிர் - தத்துவக் கருத்துக்கள்

உயிர்களானவை இறைவனின் ஆணையால் தான் உலகில் தோன்றுகின்றன என்பது சித்தாந்தத்தின் தலையாய கொள்கை ஆகும். இதனைத் திருமூலர்,

' போக்கும் வரவும் புனிதன் அருள்புரிந்
தாக்கமுஞ் சிந்தைய தாகின்ற காலத்து''[2]

என்ற வரிகளால் வெளிப்படுத்துகிறார். இவ்வரி தந்திடும்பொருள் அனைத்தையும் ஒடுக்கும் அறனே முழுமுதல் ஆகலின் போக்காகிய பேரொடுக்கத்தையும், புதுப் படைப்பினையும் செய்பவன் சிவ பெருமானே ஆவான் என்பதாகும். இதனையே பின்னால் வந்த சிவஞானபோதமும் தன் இரண்டாம் சூத்திரத்தில்,

' போக்குவரவு புரிய ஆணையின்''[3] என்று குறிப்பிடும்.

அவ்வுயிர்கள் எண்ணிக்கை அற்றவை என்பது திருமூலரின் துணிந்தமுடிபாகும்.

' மேவிய சிவன் வடிவது சொல்விடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிர மாயினால்
ஆவியின் கூறுநூ றாயிரத் தொன்றாமே''[4]

---

1 திருமந்திரம், 230
2 மேற்படி, 380
3 சிவஞானபோதம், சூத்திரம்-2
4 திருமந்திரம், 1974

இப்பாட்டின் பொருள் உடல், கலன், உலகம், ஊண் முதலிய வற்றுடன் பொருந்திய ஆறு உயிரின் வடிவினைக் கூறுவோமே யானால் (அதாவது அதனின் எண்ணிக்கையைக் கூறுவோமே யானால்) எண்ணிலடங்காது என்பதாகும். இதனையே பின்னால் வந்த திருவருட்பயன் ஆசிரியரும்,[1] பின்கண்டவாறு திருவள்ளு வரும்,

''துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று''[2]

என்று குறிப்பிடுகின்றனர்.

உயிரின் வகைகள்

உலகில் தோன்றிய உயிர்களை சைவ சித்தாந்தம் பாசத்தின் அடிப்படையில் மூன்று வகையாகப் பிரிக்கும். சைவசித்தாந்தங் களுக்கு அடிப்படையாக விளங்கிய திருமூலரும் அம்மூவரையும் 11 வகையாக குறிப்பிடுவர். முதலில் மூன்று பிரிவினருக்கும் விளக்கம் கூறும் திருப்பாடல் பின் வந்த தத்துவநூல்களுக்கு அடிப்படையாக விளங்குவதை நாம் ஆய்ந்தறியும் பொழுது பெறலாம்.

''விஞ்ஞானர் ஆன கேவல மேவுவோர்
விஞ்ஞானர் மாயையில் தங்கும் இருமலர்
அஞ்ஞானர் அச்சகலத்தர் சகலராம்
விஞ்ஞான ராதிகள் ஒன்பான் வேலுயிர்களே''[3]

ஆணவ மலம் மட்டும் இருப்போர் விஞ்ஞானகலர். ஆணவம், கன்மம் இருமலங்களும் உடையோர் பிரளயாகலர் ஆவர். ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களும் உடையோர் சகலர் ஆவர். இவ்வாறு இப்பாடலில் உயிர்கள் பிரித்துக் காட்டப் பெறுகின்றன. ஆனால் மூவகை சீவவர்க்கத்தைக் கூறும் திரு மூலரின் கருத்துக்களில் பிரளயாகலர் என்ற பெயரைக் காண முடியவில்லை. இருமலர் என்றே ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ஆயின் பின்னர் வந்த சித்தாந்த நூல்கள் அச்சொல்லைக் குறிப்பிடு கின்றன. சிவஞானசித்தியாரும்,

''உரைதரும் இப் பசுவர்க்கம் உணரின் மூன்றாம்
உயரும்விஞ்ஞானகலர்பிரளயாகலர் சகலர்''[4]

என்று குறிப்பிடுகின்றது. இது திருமூலருக்குப் பின் ஏற்பட்ட தத்துவ வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாகும்.

---

1 திருவருட்பயன், சூத்திரம் - 11
2 திருக்குறள், 22
3 திருமந்திரம், 481
4 சிவஞான சித்தியார், 8-1

விஞ்ஞானகலரை ஆசிரியர் சிவபெருமானாகவே காட்டி மகிழ்கின்றார். ஒரு மலம் உடையோர் முழுமுதற் சிவனே ஆவர் என்பது அவர் கூறும் வாக்காகும்.[1] அதற்குக் காரணம் ஆணவ மலம் அழியாது ஆதலால் முக்தி உலகிலும் பாடாணம் போன்று இருப்பதால் சிவன் தன்மை அடைகிறது போலும்.

பிராணாயாமம்

உடம்பில் இடம்பெறுகின்ற உயிரானது ஐம்பொறிகளைத் தனக்கு இடனாகக் கொள்ளும். ஐம்புலன்களில் காணப்பெறும் வளிநிலையை பிராணாயாமம் என்று குறிப்பிடுவர். அதனை ஆசிரியர் தனித் தலைப்பாகவே குறிப்பிடுகிறார். அந்த பிராணா யாமத்தில் தான் உடம்புக்கும் உயிருக்கும் உள்ள நட்பை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். ஆரூயிர் நிலத்தில் பிறந்தால், எவ்விதமான துணையும் இன்றி காற்றை சுவாசிக்க ஆரம்பிக்கின்றது. எனவே உயிர் வாழ்வதற்கு வளிநிலை மிகவும் இன்றியமையாதது என்று குறிப்பிடுகின்றது. அதனை குறிப்பிடும் வரி,

''புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டாற்''[2]

என்பதாகும். புள் என்பது பறவையைக் குறிப்பதல்ல. பறவை யின் ஒரு இனத்தைக் குறிப்பதாகும். அவ்வினம் முட்டையிலிருந்து வெளிவந்த உடனேயே பறப்பதாகும். உடம்பு நிலத்திற்கு வந்த தும் உயிர் இயங்குவதை வெளிப்படுத்தும் பிராணவாயு இயற்கை யாகவே அமைந்து விடுவதற்கு அவ்வுவமை பயன்படுத்தப் பெறு கிறது. வள்ளுவரும் பின்வருமாறு கூறுகிறார்.

''குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு''[3]

உயிர்களை ஐந்துவகையாக பிரித்துக் கண்ட நாம் உயிர் இயங்கு வதை வெளிப்படுத்தும் வளிநிலையையும் கண்டோம்.

உயிர் வெளிப்படுதல்

திருமூலர் கரு உற்பத்தி என்ற தலைப்பில் உயிர் தோன்று வதைப் பற்றி குறிப்பிடுகிறார். அப்பகுதி உடல்நூல் கருத்துக் களைத் திருமூலர் அறிந்திருக்கின்றார் என்பதற்குச் சான்றாகவும் விளங்குகிறது. அத்துடன் அல்லாது சமய அடிப்படையில் பார்க் கும் பொழுது உயிர் என்பது இறைவன் தருகின்ற அருளது சிறப்பு என்பதும் புலனாகின்றது. பூவினகத்துத் தங்கி இருக்கும் நறுமணத்தை ஓவாது சுழலும் காற்று வெளிப்படுத்தி உலகத்தில்

---

1 திருமந்திரம், 479
2 மேற்படி, 548
3 திருக்குறள், 338

கொண்டு வந்து பரப்புவதுபோல அருவுடம்புடன் கருவில் கூடிய ஆருயிரை அங்கு பொருந்திய காற்றுக்கள் சிறிதுசிறிதாக வளர்ந்து உயிர்க்காற்று என்று வந்தஉடன் உடம்பிலிருந்து கரு வெளிப் படுகிறது என்று ஆசிரியர் ஒரு பாடலில்[1] குறிப்பிடுகிறார். 5-ஆம் நூற்றாண்டில் எழுந்த ஒரு சமய இலக்கியத்தில் இந்த அளவிற்கு உடற் கூறுகள் கூறப்பெற்றிருக்குமானால் தமிழர் தம் நாகரிகத்தை என்னவென்று போற்றுவது.

உடம்பில் உயிர் தங்குவது இன்பம் எய்துதற்கே ஆகும். அதைப்பொருந்தச் செய்பவனும் இறைவனே ஆவான். இதை,

''இன்பால் உயிர்நிலை செய்த இறையோங்கும்
நின்பால் ஒருவனை நாடுகின்றேனே''[2]

என்று கூறுகிறார். இங்கு நாமொன்றும் காணுதல் வேண்டும். இன்பம் எய்துவதற்கு உயிரும் உடலும் இருக்கிறது என்ற நிலை யில் அவ்வின்பம் சிற்றின்பம் அல்ல பேரின்பம் என்பதை மறந்து விடுதல் கூடாது.

உயிர் என்பது சிவனே

கருவிலிருந்து வெளிப்படும் உயிர் என்பது பஞ்சேந்திரியங்கள் அல்ல. மனம் முதலிய அந்தக் கரணங்களும் அல்ல. பிராண வாயுவும் அல்ல. பின் எதுதான் என்ற வினா எழும். அதற்கு திருமூலர் கூறும் பதில் – ''புகுந்துநின்றான் உடலாய் உயிராய்''[3] என்பதாகும். அதாவது இறைவன் தான் ஜீவனிடத்தில் சிவனாக நிற்கின்றான் என்று விளக்கப்பெறுகிறது. மேலும் உயிர் என்ப தற்கு சிவனாக மட்டும் கூறாது சித்தாந்த நெறிப்படி உயிர் என்பது மேற்கூறப்பட்ட பொருளல்ல. அறிவு தான் உயிர் என்பதையும் திருமூலர் கூறாமல் விடுத்தாரில்லை.

''அறிவறி வென்ற அறிவு மனாதி
அறிவுக் கறிவாம் பதியும் அனாதி
அறிவினைக் கட்டிய பாசம் அனாதி
அறிவு பதியிற் பிறப்பறுந் தானே''[4]

இப்பாடல் சித்தாந்தத்திற்கே வித்தாகும். ஆருயிரை அறி வென்றும், பேருயிரை பரமான்மா என்றும் குறிப்பிடுவார். இத்தகைய ஆன்மாக்கள் பிறவிக்கு தொடக்கமாகவும் இறுதியாக வும் இருக்கின்றன என்பது திருமூலரின் எண்ணமாகும்.

உடம்பைச் சாருகிற காலத்தில் உடம்பாகவும், பதியைச்

---

1 திருமந்திரம், 441
2 திருமந்திரம், 445
3 திருமந்திரம், 398
4 திருமந்திரம், 2366

சாருகிற காலத்தில் பதியாகவும் விளங்குகிற காரணத்தால் ஆன்மாவை சதசத்து என்று கூறுவார்கள். இதனைத் திருமூலரும் அடியெடுத்துக் கூறியுள்ளார்.

''பாசம் பயிலுயிர் தானே பரமுதல்
பாசம் பயிலுயிர் தானே பசுவென்ப
பாசம் பயிலப் பதிபர மாதலாற்
பாசம் பயிலப் பதிபசு வாகுமே''[1]

இப்பாடல் பாசத்துடன் இருக்கும் உயிர் பாசமாகவும் பாசத்தைப் பதியின் அருளால் நீக்கிய பிறகு பதியைச் சாருகின்ற பொழுது பதியாகவும் இருக்கின்றது என்பதைக் குறிப்பிடுவதாகும். இதனையே பின்னர் வந்த சிவஞானபோத மாமுனிவரும்.

''யாவையும் சூனியம் சத்தெதிரா தலின்
சத்தே அறியாது அசத்திலது அறியாது
இருதிறம் அறிவுளது இரண்டல ஆன்மா''[2]

என்று குறிப்பிடுகின்றார்.

எனவே திருமூலரின் கருத்தின்படி உயிர் என்பது உலகைச் சார்ந்திருக்கின்ற பொழுது பதியாகவும் விளங்குகின்றது என்பது தெள்ளத் தெளிவாகிறது.

உயிர் முக்தி அடைதல்

உயிரின் தோற்றத்தையும் அதன் வகைகளையும், உயிரின் தத்துவங்களையும், உயிர்சிவமாக வீற்றிருப்பதையும் விளக்கிக் காட்டிய திருமூலர் இறுதியாக முக்தி அடைதலை குறிப்பிடும் பொழுது நால்வகை நெறிகளை விளக்கிக் காட்டுகிறார். அந்நெறிகளால் நாம் பெறுவது ஞானம் ஆகும். ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில் இல்லை என்றும், ஞானத்தின் மிக்க சமயம் நல்லதல்ல என்றும், ஞானத்தின் மிக்கவை நல் முக்தி நல்காவாம் என்றும், திருமூலர் குறிப்பிடுகிறார்[3]. இதனையே ஞானசம்பந்தப் பெருமானும் தேவாரப் பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளார்.[4]

எனவே அந்த ஞானநெறியால் இறைவனைக் காண்பதுதான் முக்தி பெறுவதற்கு வழி ஆகும். தனக்கு வேறாய் தன்னை அடிமைப்படுத்தி தன்னுள் அடக்கும் ஆணவப் பாசத்தையும் அப்பாச ஆற்றலைத் தேய்த்து அடக்கும் வினையையும், அவ்வினை காரணமாக விளையும் பிறப்பு இறப்பு நிலைகளையும், அந்நிலை

---

1 திருமந்திரம், 2384
2 சிவஞானபோதம், சூத்திரம் 7
3 திருமந்திரம், 1440
4 சம்பந்தர் தேவாரம், 1448

களுக்குக் கருவியாக அமையும் மூலப் பிரகிருதியையும், உயிரானது ஞானத்தால் உணர்ந்து கொள்ளுமே. ஆனால் அப்பொழுது உயிரானது முக்தியைப் பெறும் என்பது திருமூலரின் எண்ணமாகும்.[1] அந்த முக்தியை அடையும் பொழுது சிவலோகத்தை அடைகின்ற சாலோகத்தையும், சிவன் அண்மையை அடைகின்ற சாமீபத்தையும், சிவனுருவாக மாறுகின்ற சாரூபத்தையும், சிவனாகவே மாறுகின்ற சாயுச்சியத்தையும் திருமூலர் நான்கு அதிகாரங்களாகவே குறிப்பிடுகின்றார்.

உயிரானது முத்தியைப் பெறுவதற்கு இறைவன் தருகின்ற அருளை மலபரிபாகம் என்றும், சத்திநிபாதம் என்றும் குறிப்பிடுவார்கள். அவ்விரண்டு நிகழ்ச்சியையும் திருமூலர் இரண்டு அதிகாரங்களாகக் குறிப்பிடுகின்றார். இருட்டறையில் இருக்கின்ற குருட்டுக்கிழவனை மூலையில் இருந்த குமரி ஆனவள் கூடினால் எப்படி இருக்குமோ அதுபோல அறியாமையாகிய உயிரின் தன்மையை திருவருள் சக்தியானது போக்கி அவ்வுயிரினிடத்தில் சிவமணம் கமழும்படி செய்கிறது என்பதை ஆசிரியர் சத்திநிபாத அதிகாரத்தில் குறிப்பிடுகிறார்.[2] அதுபோல இருவினை ஒப்பினால் உயிருக்கு முக்தி கிடைத்தலும் உண்டு என்பதை,

''இருவினை நேரொப்பில் இன்னருட்சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருமெனு ஞானத்தால் தன்செயலற்றால்
திரிமலந் தீர்ந்து சிவனவனாமே''[3]

என்ற பாடல் மூலம் விளக்குகிறார். இதனையே பின்னால் வந்த சிவஞானபோத ஆசிரியரும்,[4] சிவப்பிரகாச நூலாசிரியரும்.[5] விரிவாக்கிச் சென்றுள்ளனர். முக்தி அடைவதற்கு ஆசிரியர் அட்டமாசித்தி, அட்டாங்கயோகம், காயசித்தி உபாயம், அவா அறுத்தல், பஞ்சாக்கிரம் கூறல் ஆகியவற்றையும் குறிப்பிடுகிறார்.

அணைந்தோர் தன்மை

புற உலக வாழ்வில் முக்தி அடைந்தோரை வடமொழியில் சீவன் முத்தர் என்பர். உலகப்பொருளிள்களில் பற்றற்று முதல்வனது திருவருளால் முதல்வனைச் சார்ந்து – ஒன்றி – நின்று இன்புற்றோர் சீவன் முத்தர் ஆவர். இத்தகையோருக்குத்தான் பொருள்களுடைய உண்மை இயல்பு குற்றமின்றித் தெரியும்.

---

1 திருமந்திரம், *1458*
2 மேற்படி, *1488*
3 மேற்படி, *1501*
4 சிவஞானபோதம், *8-2-1*
5 சிவப்பிரகாசம், பொது-*30*

இவர்களே இறைவனின் உண்மை இயல்பைக் கூறுவோர் ஆவர். இதனால்தான் வள்ளுவரும் நீத்தார் பெருமையை பாயிர இயலில் வைத்துள்ளார். இத்தகைய அணைந்தோர் தன்மையை திருமூலர் 23 பாடல்களில் குறிப்பிடுகிறார். அதிலொரு பாடல்,

''சித்தஞ் சிவமாய் மலமூன்றுஞ் செற்றவர்
அத்தச் சிவமாவர் தோயார் மலபந்தங்
கத்துஞ் சிலுகுங் கலகமுங் கைகாணார்
சத்தம் பரவிந்து தானாமென் றெண்ணியே''[1]

என்பதாகும். இடையறாது திருவைந்தெழுத்தையே கணிக்கும் நற்றவப்பேற்றால் தியானிப்போர் நெஞ்சகம், சிவனிருக்கையாய் சிவவடிவாய்த்திகழும். அச்சிவ புண்ணியப் பேற்றினர், மும்மலப் பிணிப்பும், அற்றவராவர். எனவே அவர்கள் பால் பிதற்றுரையும் சிறு சண்டையும், பெரும் பெரும் பூசலும் உண்டாகா. சொல்லும் பொருளும் பரவிந்துவாகிய மாயாகாரியம் என்று விட்டொழிவர் என்ற ஆழ்ந்தபொருளை அப்பாடல் தருகிறது. இத்தத்துவம் தன் வாழ்வில் நடந்ததாக மணிவாசகர் குறிப்பிடுவதை[2] இங்கு நாம் குறிப்பிடலாம். இவ்வாறு அணைந்தோரது சிறப்பை உணர்ந்து தான் சிவஞானபோத ஆசிரியரும் தன் பன்னிரண்டு சூத்திரங்களில் 12-ஆம் சூத்திரமாக வைத்துச் சிறப்பித்துள்ளார்.

அணைந்தோர் தன்மை அடைய திருவைந்தெழுத்துமந்திரம் மிகச் சிறப்பு என்பதைப் பல இடங்களில் ஆசிரியர் குறிப்பர். திருவைந்தெழுத்தைத் தூலபஞ்சாக்கரம்[3] என்றும், சூக்கும பஞ் சாக்கரம்[4] என்றும் குறிப்பர். மேலும் திருமூலர் தந்திடும் மற்று மொரு ஒலிப்பு அதிசூக்கும பஞ்சாக்கரம்[5] ஆகும்.

''நமவென்னும் நாமத்தை நாவில் ஒடுக்கிச்
சிவமென்னும் நாமத்தைச் சிந்தையுள் ஏற்றப்
பவமது தீரும்[6] என்றும்,
''சிவாயசிவசிவ என்றென்றே சிந்தை
அவாயங்கெட ஆனந்த மாமே''[7]

என்றும் அவர் கூறும் தொடர்கள் சிந்தனைக்கு விருந்தாகும்.

இவ்வாறு இவ்வுலக முக்தியைக் காட்டி நல்லடியார் பலரை நானிலத்தில் உருவாக்க முனைகின்றார் திருமூலர்.

---

1 திருமந்திரம், 2928
2 அச்சோப்பத்து, 1
3 நமசிவாய
4 சிவாயநம
5 சிவயசிவ
6 திருமந்திரம், 2670
7 திருமந்திரம், 2669

இவ்வாறு உயிர் பற்றி நிலையாமை முதலாகச் சொல்லத் தொடங்கிய தம் கருத்தை பலவாறாக விளக்கி உயிர் என்பது கூட முத்தி பெறுவதற்குத் துணையாக இருக்கிறது என்று கூறி முடிக்கிறார். அந்த உயிர் உடலை விட்டுப் பிரிந்தால் மீண்டும் உடலில் வந்து புகுதல் இயலாது என்பது அவரின் திட்டவட்ட மான முடிவாகும்.

''மேலுள கூரை பிரியும் பிரிந்தால்முன்
போலுயிர் மீளப் புகஅறி யாதே''[1]

என்ற பாடல் மூலம் நாம் அந்தக் கருத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது. இதையேதான் அப்பரடிகளும் 'கால் கொடுத்து இருக்க இயற்றி' என்ற திருவிருத்தம்[2] மூலம் தெளிவு படுத்தியுள்ளார். உடலை விட்டு உயிர் பிரிகின்றபோது, உயிர்ப் பானது இடம், வலமாறிச் செல்லும் என்பது திருமூலர் தந்த உயிர்க்கூறு ஆகும். இன்றைய மருத்துவர்கள் இக்குறிப்பைக் கொண்டுதான் உயிர் பிரிவதற்குரிய நாளில் மணிக்கணக்கை முடிவு செய்கிறார்கள்.

உயிர் பிரிந்தபின் ஓர் உடலை விட்டுச் சென்றது மற்றோர் உடலில் புகுவதைத் திருமூலர் அச்சுமாறுதல் என்பார். அச்சு மாறுதல் என்பதாவது பருவ உடம்பு மாறுதலாகும். பருவ உடம்பு மாறுதலாவது ஆண்பெண்ணாக மாறலாம். பெண் ஆணாக மாறலாம். உயர்திணை, அஃறிணையாக மாறலாம். அஃறிணை உயர்திணையாக மாறலாம். இத்தகைய மாற்றத் தால் உயிர் முத்தி அடையும் வரை ஏதேனும் ஒருடம்பில் வாழ்ந்து கொண்டே இருக்கிறது.

உயிரால் இறைவனைக் கண்டு அவ்விறைவனையே உயிரில் கொள்ளுதல் உயிர்க்குரிய சிறப்பாகும். இதனை ஆசிரியர்,

''சத்தி நல்ஆன்மா சதாசிவம் தானே''[3]

எனக் குறிப்பிடுவார்.

இத்தகைய குறிப்புகள் மூலம் திருமூலரின் உயிர் பற்றிய கருத்துக்களை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் இக்கால விஞ்ஞான ஆய்வுக்கு அவை அடிப்படையாக அமையும் பொழுது தமிழர்தம் அறிவாற்றலும் புலப்பட்டுச் செம்மாந்த நிலை தருகிறது. திருமூலரின் இத்தத்துவக் கருத்துக்களைக் கொண்டே பின்னே வந்த பதினான்கு சாத்திரங்களும் 'பசுநிலை' என்னும் ஆன்மநிலையைச் சூத்திரங்களாகப் படைத்துத் தந்தன.

---

1 திருமந்திரம், 190
2 அப்பர்—திருமுறை, 4 - திருமறைக் காட்டுப் பதிகம்
3 திருமந்திரம், 1728

திருமூலர் திருவடி போற்றிச் சாத்திரக் கருத்துக்களையும் காண் போமாக.

இறைவன்

சைவசமயக் கடவுளை சிவம் என்னும் பெயரால் குறிப்பினும் தத்துவமுறையில் கூறும் பொழுது பதி என்றே குறிப்பிடு வார்கள். சிவம் என்பது மங்கலம் என்ற பொருளைத் தரும். மங்கலமாவது நன்மை ஆகும். நன்மையே வடிவானது இறை யருள் ஆதலால் அதனைச் சிவம் என்பர் என்று அருணை வடிவேலு முதலியார் அவர்கள் குறிப்பிடுவார்கள்.[1]

இறைவனைச் சிவன் என்ற சொல்லால் திருமூலர்தான் முதன்முதலில் குறிக்கின்றார்.

'சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை'[2]

என்பது அவர் வாக்கு. நாவுக்கரசு பெருமானும் சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி அம்மான் என்பார். அது போல மாதவச் சிவஞானயோகிகள் சிவன் என்னும் சொல்லுக்கு பெயர்க்காரணத்தைக் குறிப்பிடும் பொழுது,

''குறைவிலா மங்கலக் குணத்தன் ஆதலின்
நிறைமலம் அநாதியின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவன்என அறிவின் மேலவர்
இறைஅவன் பெருமையை யாவர்கூறுவார்'[3]

என்று குறிப்பிடுவார். எனவே சிவன் என்ற சொல்லுக்கு மங்கலம் என்பதும், நன்மையைத் தருபவன் என்ற பொருளும் அமைந் துள்ளது என்பது உறுதி. சிவன் என்ற சொல்லால் மட்டுமன்றி நந்தி, ஆதி, ஈசன், இறைவன், தேவன், அரன், அமரர்பிரான், செல்வன், வேங்கடநாதன், வானவர்கோன் என்றபெயர்களாலும் குறிப்பிடுகிறார், முப்பொருளாகக் கூறும் பொழுது பதி என்ற சொல்லால் குறிப்பிடுவார். பதி என்பதற்கு காப்பவன் என்பது பொருள். இதனைத் தமிழ்ச் சொல்லாகக் கூறும்பொழுது ஆண்டான் என்றும், ஆண்டவன் என்றும் கூறலாம். இவ்வாறு இறைவன் என்ற பொருளைக் குறிக்க திருமூலரின் மந்திரத்தில் பலதிறப்பட்ட சொற்களை நாம் காணமுடிகிறது.

இறை ஒன்றே

திருமந்திரத்தின் முக்கிய குறிக்கோள் இறைவனின் பெருமை களைப் புராணக் கருத்துக்களைப் போலக் கூறாமல் தத்துவக்

---

1 முப்பொருளியல்பு, சைவ சித்தாந்த மகா சமாசம், (1976) பக்கம் 64

2 திருமந்திரம், 41

3 காஞ்சிப்புராணம், திருநெறி காரைக்காட்டுப் படலம், பாடல், 23

கருத்துக்களாகக் கூறுவதே ஆகும். திருமூலர் கூறிய தத்துவத்தின் அடிப்படையில்தான் பின்னே வந்த 14 சாத்திரங்களும் இறைவனுக்கு இலக்கணங்களை வகுத்தன. இன்றைய சமய எதிர்ப்பு வாதிகள் கூறுகின்ற எதிர்ப்பு வாதங்களுக்குக்கூட திருமூலர் பதில் கூறி இருப்பது அவர்தம் இறைப்பற்றையும், தத்துவ வித்தகத்தையும் புலனாக்குவதாகும்.

ஆயிரமாயிரம் தெய்வங்களைக் காட்டி தெய்வக் கருத்துக் களைப் பாழடிப்பதை திருமூலர் சாடி 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'[1] என்ற தாரக மந்திரத்தைத் தந்தவர். இதனைத்தான் பின்னர் வந்த சிவஞானபோத ஆசிரியப் பெருந்தகையும், 'ஒன் றென்றது ஒன்றே காண் ஒன்றேபதி'[2] என வழி மொழிந்தார். இத்தாரக மந்திரமே சமய உலகத்தில் அவரை அடையாளம் காட்டுகிறது.

கடவுள் ஒருவன்தான்; ஆனால் பல கடவுளர்கள் இந்து மதத்தில் பேசப் பெறுவது ஏன்? என்ற கேள்வி எழலாம். அதற்கு திருமூலரின் பதில் கடவுளின் அருளால் கடவுளின் நிலையை அடைந்தவர்கள் பலர். எனவே அவர்கள் பல கடவுளர்களாகப் போற்றப் பெற்றனரே அன்றி அவர்கள் கடவுளர்கள் அல்லர் என்பதாம். வள்ளுவப் பெருமானும் 'தனக்குவமை இல்லாதான்' என்று குறிப்பிட்டமை எடுத்துக் காட்டத்தக்கதாகும். 'தன்னே ரில்லாதானே காண்க'[3] என்று மணிவாசகர் கூறியதும், இவற்றையெல்லாம் உள்ளடக்கி திருமூலர் 'தன்னை ஒப்பாய் ஒன்றுமில்லாத் தலைமகன்'[4] என்று குறிப்பிட்டமையும் கடவுள் ஒருவரே என்பதற்குச் சான்றாகும்.

இறைவனின் வடிவம்

இறைவனை ஒருருவாய்க் கண்ட திருமூலர் இறைவனின் பெருமைகளையும் இறைவனைப் பற்றிய தத்துவங்களையும் தன்னுடைய மூவாயிரம் பாடல்களிலும் விளக்கியிருக்கிறார் என்றே கூறவேண்டும். திருமூலர் கூறியாங்கு பரந்துபட்ட நிலை யில் வேறெவரும் தமிழில் கூறவில்லை என்றே கூறலாம்.

இறைவனின் உருவத்தைக் குறிப்பிடும் போது,

> ''போது புனைகழல் பூமிய தாவது
> மாது புனைமுடி வானக மாவது

---

1 திருமந்திரம், 2066
2 சிவஞானபோதம், 2.1.2
3 திருவாசகம்; திருவண்டப்பகுதி, 30-வது வரி
4 திருமந்திரம், 6

நீதியுள் ஈசன் உடல்விசும் பாய்நிற்கும்
ஆதியுற நின்ற தப்பரி சாமோ''[1]

என்ற பாடலில் இறைவனுடைய திருவடி பாதாளமாகவும் அவனுடைய முடி ஆகாயமாகவும் இருப்பதால் இறைவன் உலகத்தையே தன்னுடைய வடிவாகக் கொண்டிருக்கிறான் என்பதைப் புலப்படுத்துகிறார். இதனை நன்கு ஆய்ந்துதான் பின்னே வந்த சித்தியாரும் இறைவனின் வடிவத்தைப் புலப்படுத்தும் பாடலில், 'உலகமே உருவமாக'[2] எனத் தொடங்குகிறார். இவற்றுக் கெல்லாம் மூலகாரணம் சங்க இலக்கியமே என்று கூறலாம். நற்றிணையில்,

''மாநிலம் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கை யாக
விசும்புமெய் யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக
இயன்ற எல்லாம் பயின்றகத் தடக்கிய
வேதமுதல்வன் என்ப
நீதற விளங்கிய திகிரி யோனே''[3]

என்று பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்தை அமைத்துள்ளார். இப்பாடல் வைணவத்திற்குரிய திருமாலைப் பற்றியதாக இருந்தாலும் கடவுளின் உருவத்தைச் சுட்டுவதாவே நாம் கொள்ள வேண்டும். இவ்வாறு சங்கம் தொட்டு சித்தியார் வரை கடவுளின் வடிவத்தை உலகமாகவே கண்டுள்ளனர். திருமூலர் பிறன்கோட் கூறல் என்ற தந்திர உத்தியின்படி முற்கால இலக்கியங்களை ஏற்றும் பிற்கால இலக்கியங்களுக்குச் சார்பு படுத்தியும் பாடியிருப்பது மிகச் சிறப்புடையதாகும்.

இவ்வாறு உலகமே வடிவாக இருக்கும் இறைவன் அவ்வடிவாக மட்டும் இல்லாது மந்திர வடிவாகவும் இருக்கின்றான் என்ற கொள்கையும் திருமூலர்க்கு உண்டு.

''இணையார் திருவடி எட்டெழுத் தாகும்
இணையார் கழலிணை ஈரைந் தாகும்[4]

என்ற பாடலில் அவனுடைய திருவடி ஓம், அம், உம், ந, ம, சி, வ; ய என்ற எட்டெழுத்தாகும் என்று குறிப்பிடுகிறார். அடுத்தடுத்த பாடலில்,

''இருக்கின்ற மந்திரம் சிவன் திருமேனி''[5]

---

1 திருமந்திரம், *1694*
2 சித்தியார், *5,7*
3 நற்றிணை, *1*
4 திருமந்திரம், *878*
5 மேற்படி, *880*

என்று குறிப்பிடுகிறார். எனவே திருமூலர் இறைவனை மந்திர வடிவாகக் காணுகிறார் என்பது புலனாகும். இதனையே சித்தியாரும் இரண்டாம் சூத்திரத்தில் இறைவனின் திருமேனியைப் பற்றிக் கூறும் கருத்துக்களில் கையாண்டுள்ளார். பிரணவ மந்திரத்தைப் பற்றிக் கந்தபுராணம் குறிப்பிடும் பொழுது 'ஓம்' என்ற பிரணவ மந்திரம் இறைவனின் உருவமாகும்[1] என்று கூறுவதையும் இங்குக் காட்டாகக் கொள்ளலாம். இவ்வாறு உலகமாகவும் மந்திரச் சொல்லாகவும் இறைவனின் வடிவத்தைக் கண்டு தொழும் பாங்கு நம்மிடமும் வளர வேண்டும்.

கடவுள் வாழ்த்து

திருமூலர் கடவுளின் பெருமையை நூல் முழுவதும் கூறுகின்றபோது முதற்பகுதியில் கடவுள் வாழ்த்து என்ற தலைப்பில் 50 பாடல்களை அமைத்துள்ளார். அவ் வைம்பது பாடல்களும் பின்னே வரக்கூடிய பாடல்களின் கருத்துக்கள் அனைத்தையும் சுருங்கக் கூறுவதாகவே அமைந்துள்ளன. அப் பாடல் கருத்துக்களை நாம் கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம்.

நம் அறிவிற்கு எட்டாத நிலையில் உள்ள சிவபிரான் வேதங்களால் ஒன்று என்று குறிக்கப்படும் பரம்பொருளே. அவன் தன் அருளோடு கூடிநின்று சிவம், சத்தி என இரண்டும் ஆவான்; இலயம், போகம், அதிகாரம் என்னும் நிலைகளில் (அயன், அரி, அரன் என்னும் மூர்த்திகளில்) மூன்றாய் நின்றனன். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களை உணர்ந்தான்; (உணர்ந்து உணர்த்தினான்) அந்நிலையில் ஐம் பொறிகளை வென்ற அருந்தவத்தோனாய் விளங்கினன்; வன்னம், பதம், மந்திரம், தத்துவம், புவனம், கலை என்னும் ஆறுவகையாக விரிந்தவனும் அவனே; அண்டத்தில் ஏழுலகையும் பிண்டத்தில் மூலம் முதல் முடிவரை உள்ள ஏழு நிலங்களையும் கடந்து மேற்சென்றவனும் அவனே. ஐம்பெரும் பூதம், ஞாயிறு, திங்கள், உயிர் என்னும் எட்டனையும் தன் வடிவாக உணர்ந்து இருந்தவனும் அவனே.

இத்தகைய பெரும் சிறப்புக்களை உடைய கடவுள் வாழ்த்தில்,

> ''சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
> அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
> புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்
> தவனச் சடைமுடித் தாமரை யானே''[2]

---

1 கந்தபுராணம், அயனைச் சிறைபுரி படலம் 11

2 திருமந்திரம், 4

என்ற பாடல் அமைந்திருப்பது தலைமைச் சிறப்புடையதாகும். தந்திரம் என்பது கயிறு என்று பொருள்படும். அது ஆகமத்திற்கு ஆகும்போது நூல் என்ற பொருளைத் தரும். ஒன்பது தந்திரங்களை உடைய இந்நூலில் சிவனோடு ஒத்த தெய்வம் இல்லை என்பது முதலாக அமைந்திருப்பதால் சிவபெருமானின் பெருமையைத் திருமூலரைப் போல யாரும் கூறமுடியாது என்பது உறுதிப்படும். எனவே கடவுள் வாழ்த்தில் எளிமையாகவே இறைவனின் பெருமையைப் பேசி – பின்னே தத்துவங்களின் வாயிலாகக் கூறும்போது பொருள் பொதிந்த நிலையில் திருமூலர் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மூவருக்கு முன்னவன்

சைவ சித்தாந்தத்தில் முத்தொழிலை நடத்துகின்றார்கள் மூன்று கடவுளர் என்ற கொள்கை உண்டு. அதாவது, படைத்தல், காத்தல், அழித்தல் என்பனவற்றுக்கு அயன், அரி, அரன் என்ற மூவரைக் குறிப்பிடுவர். இந்த மூவருக்கும் மேலானவன் சிவன் என்பது திருமூலரின் எண்ணமாகும். அந்த எண்ணத்தில்தான் சைவசித்தாந்த தத்துவ வித்தகர்கள் 'பிரகிருதி' என்று சிவனைக் குறிப்பிடுகின்றனர். திருமூலர் 'அவனன்றி மூவரால் ஆவதொன்றில்லை'[1] என்றும் 'முன்னை ஒப்பாய் உள்ள மூவருக்கும் மூத்தவன்'[2] என்றும் குறிக்கின்றார். இதனையே மணிவாசகப் பெருமானும் ''படைப்போர் படைக்கும் பழையோன்''[3] என்றும் ''முன்னோன் காண்க''[4] என்றும் குறிப்பிடுவார். 'அவனன்றி மூவரால் ஆவதொன்றில்லை' என்ற வரி மூவருக்கும் மேற்பட்டவன் என்றும், மூவரையும் இயக்குபவன் என்றும் சொல்லாமல் சொல்கிறது. அவன் மிகப் பழமையானவன் என்பதை 'முன்னை ஒப்பாய்' என்ற தொடர் விளக்குகிறது. அதே நேரத்தில் மூவருக்கும் மேற்பட்டவனாயினும் – மூவருடைய தொழிலையும் அவனேதான் செய்கின்றான் என்பதையும் திருமூலர் கூறாமல் விடுத்தாரில்லை.

''ஒருவனு மேஉலகேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கேழும் அளித்தான்
ஒருவனு மேஉல கேழும் துடைத்தான்
ஒருவனு மேஉல கோடுயிர் தானே''[5]

---

1 திருமந்திரம், 5
2 திருமந்திரம், 6
3 திருவா. திருவண்டப்பகுதி, 13
4 திருவா. திருவண்டப்பகுதி, 29
5 திருமந்திரம், 391

என்ற பாடலில் படைத்தலையும், அளித்தலையும், துடைத்தலை யும் சிவபெருமானே செய்கின்றான் என்பதைக் காட்டி அதற்கு மேலும் மறைத்தல், அருளல் என்ற இரண்டையும் சேர்த்து ஐந்து தொழிலாகச் செய்கின்றான் என்பதை அடுத்த பாடலில் குறிப்பிடு கிறார்.[1]

இவ்வாறு மூவருக்கு முதல்வனாய், மூவருமாய் முனைந்து நிற்பவன் முழுமுதல் தெய்வம் சிவபெருமான் என்பதை நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது.

அருவுருவ இறைவன்

மூவருக்கும் மேலானவனாக இருக்கும் இறைவன் உருவத் தோடு இருக்கும் பொழுதும் உருவமற்று இருக்கும்பொழுதும் சைவ சித்தாந்திகள் அவ்வந்நிலைக்கேற்ப பெயர்களை வழங்குவர். அதனை திருமூலர் தொடங்கி வைக்கிறார்.

''சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த
அவைமுதல் ஆறிரண் டொன்றொடொன் றாகும்
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதல் சங்கரன் தன்பெயர் தானே''[2]

என்ற பாடலில், அருவத்தில் இருக்கும் இறைவனைச் சிவனென்றும் சக்தியென்றும், நாதமென்றும், விந்து என்றும், உருவத்தோடு இருக்கும் இறைவனை மகேசுரன், உருத்திரன், மால், அயன் என்றும்; அருவுருவ இறைவனைச் சதாசிவன் என்றும் குறிப்பிடு வதை 'சிவன் முதல் மூவரோடு ஐவர் சிறந்த அவைமுதல்' என்று குறிப்பிடுவார். இதனையே சிவஞான சித்தியாரும்,

''சிவஞ் சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன்
உவந்தருள் உருத்திரன்தான் மால்அயன் ஒன்றினொன்றாய்
பவந்தரும் அருவநாலிங் குருவநா லுபய மொன்றாய்
நவந்தரு பேதம்ஏக நாதனே நடிப்ப னென்பர்''[3]

என்ற பாடலாகக் குறிப்பிடும். சிவஞான சித்தியார் திருமூலரின் கருத்துக்கு ஒருபடி மேலே சென்று 'நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன்' என்று குறிப்பிட்டு இறைவன் ஒருவனே தான் பல நிலையில் நடிக்கின்றவன் ஆகின்றான் என்று இறைவனின் பூரண தத்துவத்தைக் குறிப்பிடுகின்றார். பிறிதோரிடத்தில் இறை வனின் தொழிலைப் பற்றிக் குறிப்பிடும் போது' தோற்றிய எல்லாம் துடைப்பன்'[4] என்று குறிப்பிட்டு சிவஞானபோத முதற்சூத்திரத்திற்குப் பொருளமைத்துக் கொடுத்துள்ளார்.

---

1 திருமந்திரம், 392
2 திருமந்திரம், 54
3 சித்தியார் சுபக்கம் 2, 164
4 திருமந்திரம், 310

இறைவனின் தன்மைகள்

அம்மையப்பனாக இறைவனைக் காணுகிற வழக்கம் சைவப் பெரியோரிடத்தே உண்டு. அத்தகு நிலையிலும் திருமூலர் காட்சி தருகிறார். அதோடு நின்று விடாது;

''சேயனு மல்லன் அணியன்நல் லன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே''[1]

என்று தாயைக் காட்டிலும் மேலானவனாக இறைவனைக் காணுகிறார். தாயினும் நல்லன் என்று அவர் கூறியதை ஆய்ந்து பார்க்கும்போது உயர்ந்த பொருள் நமக்குப் புலனாகிறது. தாயானவள் தனது பாலைக் கைம்மாறு கருதாது உயிர்க்கு வழங்கும் இறைவனுக்கு உவமையாகிறாள். ஆனால், அதே நேரத்தில் தாயானவள் குழவி பசித்த காலத்திலெல்லாம் பால் கொடுக்க முடியாதும், நிரம்பக் கொடுக்க முடியாதும் சில நேரங்களில் வெறுப்புணர்ச்சிக்கு ஆளாவாள். ஆனால் இறைவனோ அவ்வாறு இல்லை என்பதால்தான் தாயினும் நல்லன் என்று திருமூலர் பாராட்டுகிறார். மணிவாசகர் 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து'[2] என்று குறிப்பிட்டிருப்பதை இங்கு நினைவு கூரலாம்.

இறைவன் எல்லார் மனத்தும் வீற்றிருப்பான் என்பதை 'வாழ்த்த வல்லார் மனத்துள் உறு சோதியே'[3] என்பார் திருமூலர். மேலும் பிறிதோரிடத்தில் 'தானொரு வண்ணம் என் அன்பில் நின்றானே'[4] என்று அன்பின் வயப்பட்டவன் இறைவன் என்று குறிப்பிடுகிறார். இதனையே திருவருட்பயன் ஆசிரியரும்,

''நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்''[5]

என்ற குறட்பாவில் குறிப்பிடுவார். இக் குறட்பாவுக்கு 'திருவருட்பயனில் மூப்பொருள் இயல்பு என்னும் நூலில்[6] விளக்கம் தந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அவ்விளக்கத்தில் 'சலமிலன்' என்ற சொல்லைப் பிற இலக்கியங்களோடும் பிற சாத்திரங்களோடும் தொடர்பு படுத்திக் காட்டப் பெற்றுள்ளது.

இறைவன் பற்றற்றவன் என்பதைத் திருமூலர் சிறப்பாக

---

1 திருமந்திரம், 7
2 திருவாசகம், பிடித்தபத்து, 9
3 திருமந்திரம், 39
4 திருமந்திரம், 262
5 திருவருட்பயன், 9
6 திருவருட்பயனில் மூப்பொருள் இயல்பு, குருகுலம் வெளியீடு, 1978

விளக்கியுள்ளார். 'பற்றற்றவர் பற்றி நின்ற பரம்பொருள்'[1] என்ற வரி அவர் கூறும் பாடலில் வருவதாகும். பற்றற்றவர் என்பது பற்றற்றவனைப் பற்றி நின்றவர்க்குத் தரப்படும் சொல்லாகும். அவர்களைப் பற்றி நின்றவன் இறைவன் என்பது இந்தத் தொடரில் நேரிடைப் பொருளாகும். அப்படிக் கூறும்பொழுது பற்றுதலை உடையவன் பரம்பொருள் என்று வந்துவிடும். ஆனால் பற்றி நின்ற பரம்பொருள் என்பதற்கு அவ்வாறு பொருள்கூறுதல் கூடாது. அதனுடைய உட்பொருள் பற்றற்றவராக விளங்கும் அடியவரைத் தன் அருளால் பற்றித் தடுத்து — மீண்டும் பிறவாமையைத் தருவான் என்பதாகும். இத்தகைய நிலையையே திருவள்ளுவரும்,

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''[2]

என்று குறிப்பிடுவார். அப்பரடிகளும் 'பற்றற்றார் |சேர்'[3] என்று தன் திருவாக்கில் குறிப்பார்.

மற்றவரைப் பிறப்பிக்கின்ற இறைவன், தான் பிறப்பிலாதவன் என்பதை

''பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின்''[4]

என்ற தன் பாடற் பகுதியில் விளக்குகிறார். திருக்குறளில் 'எண்குணத்தான்' என்ற தொடருக்கு பரிமேலழகர் உரை எழுதும் போது பிறப்பில்லாத் தன்மையை ஓர் குணமாகச் சுட்டுவதை இங்கு நினைவு கூரலாம்.[5]

இறைவன் எல்லாமாய் இருக்கின்றான் என்பதை,

''தானே திசையொடு தேவரு மாய்நிற்கும்
தானே உடலுயிர் தத்துவ மாய்நிற்கும்
தானே கடல்மலை ஆதியுமாய்நிற்கும்
தானே உலகில் தலைவனு மாமே''[6]

என்ற பாடல் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. சிவபெருமான் திசையாய், உடலுயிராய்த் தத்துவமாய், கடலாய் மலையாய் இருக்கின்றான் என்கிறார். இதனைத்தான் 'தன்வயத்தனாதல்' என்று

---

1 திருமந்திரம், 2872
2 திருக்குறள், 350
3 திருமுறை, 4, 15, 4
4 திருமந்திரம் 25
5 திருக்குறள், பரிமேலழகர் உரை. பக்கம். 14. (பூம்புகார் பிரசுரப்பதிப்பு, 1978)
6 திருமந்திரம், 399

குறிப்பர். 'தன்வயம்' என்பது 'சுதந்திரம்' என்ற பொருளைத் தரும். இறைவன் சுதந்திரமாக இருக்கிறதால்தான் அவனால் அனைத்தையும் படைக்க முடிகிறது.

இவ்வாறு இறைவனின் தன்மைகளைப் பாடல்கள் அனைத்திலும் கண்டு விரித்து விவரித்துக் கொண்டே சொல்லலாம். இருப்பினும் விரிவஞ்சி விடுப்போம்.

தனக்குவமை இல்லானுக்கு உவமைகள்

தனக்குவமை இல்லாத இறைவனுக்கு உவமை கூறுவது சிறப்பானதல்ல என்றாலும் தெரியாத ஒன்றைத் தெரிந்தது கொண்டு உணர்த்த வேண்டுமாதலின் இறைவனைப் பற்றித் தெரியாத உயிர்களுக்கு அவனை அறிவுறுத்துதற்கு உவமை கூறப் படுதல் இயற்கை. இறைவனுக்குக் கூறப்பெறும் உவமைகள் இறைவனைவிடப் பெருமை உடைத்து என்பதோ அல்லது ஒப்புமை உடைத்து என்பதோ பொருளல்ல. அந்த உவமையின் மூலமாகவும் இறைவனின் பெருமைதான் வெளிப்படுகிறதே தவிர வேறொன்றுமில்லை.[1] அத்தகு நிலையில் பெரும்பாலும் ஐந்துக்கு ஒரு பாடல் வீதம் திருமூலர் இறைவனுக்குப் பல உவமைகளைக் கூறியுள்ளார். திருமூலரின் திருவாக்கில் உவமை என்னும் தவலருங்கூத்தி ஆனந்த நடனமாடுகிறார். இதோ ஒருசில சான்றுகள்.

''வானின் றழைக்கும் மழைபோல''[2]

என்று ஒரு புதிய உவமை ஆசிரியரால் கையாளப்படுகிறது. இதற்கு உரை எழுதும் போது அருணைவடிவேல் முதலியார் 'வானத்தினின்று முழங்குகின்ற மேகம்போல இறைவன் மேலுலகத்திலிருந்து அடியவரை வருக என்று அழைப்பான்[3] என்று எழுதுகிறார். கழகப் புலவர் இராமநாத பிள்ளையோ 'உலகை உய்விக்கும் மழை வானத்திலிருந்து ஒலிக்கின்றது. அதுபோல இறைவனும் இந்நாள் நம்மை அருளால் அழைப்பனோ'[4] என்று உரை எழுதுகிறார். இருவர் உரையும் வேறு வேறு உரைபோல இருந்தாலும் பொதுவான அடிப்படையில் ஒன்றுபட்டே காணப்படுகிறது. உலகம் வேண்டாது தானே பெய்து அருள் வழங்கும் மழையைப் போல இறைவனும் உயிர்கள் வேண்டாது தானே அருள் வழங்கும் தன்மையன் என்பதை இவ்வுவமை பெறவைக்கிறது.

---

1 தொல். பொருள். பேராசிரியர் உரை, உவமையியல், 9

2 திருமந்திரம், 30

3 திருமந்திரம் தருமைப்பதிப்பு. 1974. பக், 48.

4 திருமந்திரம், கழகப் பதிப்பு, (1957) பக். 14

'இனம் செய்த மான்போல'[1] என்ற உவமை இறைவன் உயிர்களுக்கு அருள் வழங்கும் தன்மையைக் கூறுவதாகும். உயிர்களுக்கு அருள் வழங்கும் சத்திநிபாதம் ஏற்பட்ட பொழுது இறைவன் எவ்வாறு மானானது தன் இனத்தை நாடி நிற்குமோ அதுபோலத் தன் படைப்பான உயிர்களை அருள்கொண்டு நோக்குவான் என்பது இவ்வுவமை மூலம் தெளிவாக விளக்கப்படுகிறது.

'நீரினிற் பால்போல நிற்கின்ற நேர்மை'[2] என்ற உவமை இறைவன் மானுட உடம்பிலே நிற்கின்ற உயிரின் கண் நீரிற் கலந்த பால் போல இணைந்திடுவான் என்று கூறுகிறது. பால் தன் வண்ணத்தையும் சுவையையும் நீருக்கு நல்கி, நீரென்னும் பெயரினை மாற்றி, பாலென்னும் தோற்றமும் பெயரும் பெறச் செய்கிறது. அது போலவே சிவபெருமான் ஆருயிர்களைத் தூய்மையாக்கித் தன் எண்குணங்களையும் பதிவித்து சிவமாம் பேரின்ப வாழ்வை அருள்கின்றான். இத்தகு நிலையில் இறைவனின் தன்மையை ஆசிரியர் பலப்பல உவமைகள் காட்டி விளக்குகிறார்.

---

1 திருமந்திரம், 41

2 திருமந்திரம், 435

கடைச்சங்க காலத்துக்கும் தேவார காலத்துக்கும் இடைப்பட்ட காலத் தமிழ் நாட்டின் சைவத்துவ நிலை

சிறப்பு நோக்கு; காரைக்காலம்மையார் நூல்கள்

பா. வரதராசன்

முன்னுரை:—தென் தமிழ் நூல்களின் கடைச்சங்க காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு என்பது ஆராய்ச்சி அறிஞர்களின் துணிபாம்.[1] தேவாரப் பதிகங்களின் தொடக்ககாலமும் ஞான சம்பந்தர் காலமாகிய கி.பி. 7-ம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்பர்.[2]

இக் கட்டுரைப் பொருளுக்கு எடுத்துக் கொண்ட இக்காலப் பகுதி தென்னிந்திய வரலாற்றில் ஓர் இருண்ட காலமென்பது அனைத்து ஆராய்ச்சியாளர்களின் ஒருங்கிணைந்த முடிபாம். வர லாற்று நோக்கில் ஒரு தெளிவு இன்மையே அம்முடிவுக்குக் காரணம்.

இப்பகுதியில் கி.பி. 280க்கும் கி.பி. 575க்கும் இடைப்பட்ட காலத்தில் வடுகக்கருநாடகர் (களப்பிரர்) தமிழ் நாட்டின் பெரும் பகுதியை ஆண்டனர்.[3]

அவர்கள் மொழியால் தமிழர் அல்லர்; சமயத்தால் சமணர். எனவே, இக்காலப் பகுதியில் தென்னாட்டில் சைனம், ஆள்

---

[1] கா. சுப்பிரமணியபிள்ளை: இலக்கிய வரலாறு, முதற் பாகம் 7ம் பதிப்பு, சென்னை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம் 1973, பக்கம் 32.

[2] கே. எஸ். சிநிவாச பிள்ளை: தமிழ் வரலாறு பிற்பாகம், முற்பகுதி, தஞ்சை வெற்றிவேல் பிரஸ், 1957, பக்கம் 69.

[3] மா. இராசமாணிக்கம், பல்லவர் வரலாறு, சென்னை, சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம், 9-ம் பதிப்பு, 1977 பக்கம் 38.

வோரின் செல்வாக்குற்றிருந்தது. அதன் ஆதிக்கமே நாட்டில் பரவி இருந்தது. ஏற்கனவே பரவி இருந்த பௌத்த சமயமும் சமணத்தின் ஆட்சியால் வலிகுன்றத் தொடங்கியது. களப்பிரரின் ஆட்சி, தமிழ்க்கலை, தமிழர் நாகரிகம், முதலியவற்றைச் சிதைத்தது. மதுரை மாநகரில் இயங்கி வந்த தமிழ்ச் சங்கம் சிதைவுற்றது.[1]

சங்க நூல்களில் சைவத்தைப் பற்றிய குறிப்புகள்

இங்கு கட்டுரையில் எடுத்துக்கொண்ட காலப்பகுதிக்கு முற்பட்டு நிற்கும் சங்க இலக்கிய காலத்திய சைவ சமய நிலையை சங்க இலக்கிய நூல்களின் துணை கொண்டு ஒருவாறு தெளியலாம்.

அகம், புறம், அற இலக்கியங்களாக இன்று நமக்குக் கிடைத்துள்ள நூல்கள் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒரு சிலவுமாம்.

(பதினெண்கீழ்க்கணக்கில் பெரும்பாலன பிற்காலத்தன.)

இவை மட்டுமே சங்க காலத் தமிழ் நூல்கள் என்று நாம் கருதிவிடக் கூடாது. இன்று நமக்குக் கிடைக்காது அழிக்கப்பட்டும் அழிந்தும் போன நூல் பரப்பை உண்மையாக நாம் அறியக் கூடவில்லை. அந்நூல் பரப்பில் பல சமய நூல்கள் இருந்திருக்கலாம். உண்மை அறியக் கூடவில்லை.

இனி சங்க இலக்கிய குறிப்புகளினின்றும், அக்காலச் சைவ நிலையை ஒருவாறு தெளியலாம். அக்காலத்தில் சிவபிரான், முருகன், கொற்றவை என்னும் கடவுளர்க்குக் கோயில்கள் இருந்தமை தெரியவருகின்றது. சிவபெருமான் வழிபாடு சிறப்புற் றோங்கியதாவும் தெரியவருகின்றது.

சிவபிரானின் முழு முதல் தன்மை மதுரைக் காஞ்சி என்னும் நூலில் விதந்தோதப் படுகின்றது.

"நீரும் நிலனும் தீயும் வளியும்
மாகவிசும்பொடு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனாக"[2]

அக்காலத்தில் சைவம் பெரும்பான்மையதாகவும் அதை அடுத்த நிலையில் வைணவம் பின்பற்றப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

---

[1] டி. வி. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, சென்னை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 7-ம் பதிப்பு, பக்கம் 35.

[2] சங்க இலக்கியம், தொகுப்பும் பதிப்பும்: எஸ். வையாபுரிப் பிள்ளை, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1967, பாரி நிலையம், பக்கம். 1212

அகநானூறு, 360-ம் பாடல் சிவனையும் திருமாலையும் குறிக்கும்:-

''வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம் போல
அந்திவானமொடு கடலணி கொளாஅ
வந்தமாலை''[1]

சிவபிரான்: ''பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னியன்
நீலமணி மிடற்றொருவன்'' — புறம்-91[2]

கல்லால் நிழல் சிவன் வேதம் உரைத்தனன்:

''ஞாலம் நாறு நலங்கெழு நல்லிசை
நான்மறை முதுநூல், முக்கட் செல்வன்
ஆலமுற்றம்'' அகநானூறு 181[3]

''ஆலமர் கடவுள் அன்ன'' — புறம், 198[4]

இங்ஙனம் சிவனைப் பற்றிய செய்திகள் சங்கத்தொகை நூல்களிலும், சங்கம் சார்ந்த நூல்களிலும் பலவிடத்தும் கூறப் பெற்றுள்ளன. மேலும் அவனைப் பற்றிய செய்திகள்;—

''கொன்றை அணிதல், கங்கையும் பிறையும் தரித்தல்; ஏற்றை ஊர்தியாகக் கொண்டது; மேருவை வில்லாக வளைத்தது; முக்கண்ணும் கறை மிடறும் கொண்டு விளங்கியது; முப்புரம் அழித்தது, மலை மகளை உடலில் பாதியாகக் கொண்டது எருதுக் கொடி ஏற்றது'' முதலியனவாம்.

சிவபிரான் கோயில், முனிவர் முக்கண் செல்வன் நகர் என்று கூறப்பெற்றுள்ளது. சிலப்பதிகாரம் ''பிறவா'' யாக்கைப் பெரியோன்'' என்று சிவபிரானைச் சுட்டிச் செல்லும்.[5]

உமா தேவியைப் பற்றிய குறிப்பும் சங்க நூல்களில் காணலாம். அவை தனித்தும் சிவனொடு சார்த்தியும் கூறப் பெற்றுள்ளன.

''இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்.[6]

உமையமர்ந்து உயர்மலை இருந்தனனாக''-கலித்தொகை, 38

அவளே, கொற்றவை என்றும், மலைமகள் என்றும் குறிக்கப் பெற்றுள்ளாள்.

---

1 மேற்படி. பக்கம் 1107.

2 மேற்படி பக்கம். 284.

3 மேற்படி. பக்கம் 880.

4 மேற்படி பக்கம் 1071.

5 இளங்கோவடிகள். சிலப்பதிகாரம், பதிப்பாசிரியர் உ.வே சாமிநாத ஐயர், 7-ம் பதிப்பு (சென்னை, கபீர் அச்சுக்கூடம் 1960) இந்திரவிழா ஊர் எடுத்தகாதை, அடி - 169.

6 சங்க இலக்கியம் பக்கம், 389.

''ஓங்கு புகழ் கான் அமர் செல்வி அருளவின்'' – அகநானூறு 345[1]
காடுகிழாள் என்றும் அழைக்கப் பெறுகின்றாள்.

கீழ்க்கண்ட நான்கு கடவுளர் வழிபாடுகள் சங்க காலத் தமிழகத்தில் நிலவிவந்தமையைப் புறநானூறு 56ஆம் செய்யுள் குறித்துச் செல்லும்[2]

சிவன்: எருதுக்கொடியோன், செஞ்சடையன், மழுப்படை யன், நீலமணி போன்ற கழுத்துடையவன்.

பலராமன்: சங்கொத்த வெண்ணிறத்தன், கலப்பைப் படையன், பனைக்கொடியோன்

திருமால்: நீலமணிபோன்ற நிறத்தோன், கருடக்கொடி யோன்.

முருகன்: மயில்கொடியோன்; பிணிமுக ஊர்தியன்; செந்நிறத்தோன்.

சிலப்பதிகாரத்திலும்[3] ஊர்காண்காதை அடிகள் ஏழுமுதல் பத்துவரை இந்த நால்வர்க்கும், கோயில்கள் மதுரையில் இருந்தமை யைக் காட்டுகிறது.

எடுத்துக் கொண்ட காலப் பகுதியின் தொடக்கத்தில் சைவ சமய நிலை

இனி, சங்ககாலத்தையடுத்து நிற்கும், இந்த இருண்ட கால கட்டத்தில்தான் சைவ சமயதத்துவத்தின் எழுச்சியைக் காண் கிறோம். சிலப்பதிகாரமும், மணிமேகலையும் கடைச் சங்க இறுதிக்கால காவியங்கள் என்பர். இக்காவியங்களின் துணை கொண்டு சைவத்தின் வளர்ச்சியை அறியக்கூடும். சங்கத்தொகை நூல்களைக்காட்டிலும் சற்று விரிவாகவே இங்கு, சைவத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

சிலப்பதிகாரத்தில் சமயக்குறிப்புகளோடு சற்று அதிகமாகவே புராணக்குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. இஃது புராண வழக்குகள் பரவலாக நிலவி வந்தமையைச்சுட்டும். இதுதொடங்கி புராணக் கருத்துக்களின் செல்வாக்கு இக்காலம் முழுமையும் நிலவி இருந்தமையை ஏனைய நூல்களின் துணை கொண்டு அறியலாம்.

சிலப்பதிகாரத்தில் சிவபிரானின் வெள்ளியம்பலக்கூத்து குறிக்கப்பட்டுள்ளது.[4] அந் நூலமைப்பு மூவேந்தரின் தலைநகர் களைச் சார்ந்த காண்டங்களாக வகுக்கப்பட்டுள்ளமைக்கொப்ப

---

1 மேற்படி பக்கம், 564.

2 மேற்படி, பக்கம், 731.

3 சிலப்பதிகாரம் - ஊர்காண் காதை, அடிகள் 7-10.

4 சிலப்பதிகாரம், பக்கம்-3.

நகர் சார்ந்த புராண வழக்குகளும் இடம் பெற்றுள்ளன. கூடல் மாநகரைச் சார்த்தி வந்த பிற்காலத் திருவிளையாடல்களுக்குக் கரு இங்கு உள்ளது.

கடல் சுவற வேல் விட்டது;
இந்திரன் முடி மேல் வளை எறிந்தது.

இவிங்கமும், வன்னியும் கிணறும் சான்று கூறியது; வெள்ளி யம்பலத்தாடியது. இந்திரன் பூட்டிய ஆரத்தைப் பூண்டது; மேகத்தைத் தளைவிட்டது[1] முதலியன பிற்காலத்திருவிளை யாடற் புராணங்களிலும் தலபுராணங்களிலும் இடம் பெற்றுள் ளன.

இக்காலத்தில் சமயவரலாற்றில் ஒரு புதிய திருப்பம் காணப் படுகின்றது. வைதிக நெறியின் படிப்படியான ஆட்சி ஓங்கி, சைன பௌத்தங்களின் ஆட்சிகுறையத் தொடங்கியதெனலாம். பொதுவாகக் கடவுளர்களின் படிமங்களை வைத்து விரிவாக வழிபடும் ஒழுக்கம் மிகுந்து பொதுமக்களை ஈர்த்து வந்தது. எனவே விழா முதலிய ஆரவாரங்கள் பொது மக்களின் கவனத் தைக் கவர்ந்து இத்தகைய விழாக்களற்ற பௌத்த சமண சமயங் களில் நாட்டம் குறையச் செய்தன எனலாம்.

சிலப்பதிகாரம் செப்பும் இந்திரவிழா நிகழ்ச்சியும், அதன் தொடர்பான வழிபாடுகளும் கருத்தில் கொண்டு இவ்வுண் மையை உணரலாம்.

நாட்டில் பரவலாகப் பெருங்கோயில்கள் சமைக்கப் பெற்ற மையும் சிலம்பு கொண்டு தெளியலாம்.

பூம்புகார் நகரத்தில் ''பிறவாயாக்கைப் பெரியோன் கோயி லும் அறுமுகச் செவ்வேள் அணி திகழ் கோயிலும் வால்வளை மேனி வாலியோன் கோயிலும், நீல மேனி நெடியோன் கோயி லும், மாலைவெண் குடை மன்னவன் கோயிலும் திகழ்ந்தன.''[2]

அதனால் ''வேறு வேறு கடவுளர் சாறு சிறந்திருந்தன''[3] சிலப்பதிகாரம் சைவ மந்திரமாகிய 'பஞ்சாட்சரத்தைச் சுட்டும்[4]

மணிமேகலையில் வரும் சைவவாதி, சிவபிரானின் அட்ட மூர்த்தி முழுமுதற் தன்மையையும் அவனது படைப்பு அழிப்பு ஆகிய ஆற்றலையும் எடுத்தியம்புகின்றான்[5]

---

1 மேற்படி, பக்கம் 289; அடிகள் 18-24, 26, 23-25, 29 பக்கம் 483.
2 சிலப்பதிகாரம், பக்கம் 147.
3 மேற்படி, பக்கம் 147.
4 மேற்படி, பக்கம், 294.
5 கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் - மணிமேகலை பதிப்பாசிரியர், உ. வே. சாமிநாதையர் 4-ம் பதிப்பு, சென்னை, வீனஸ் அச்சுக்கூடம் 1949. பக்கம் 309-310 அடி 87-95.

சிவனடியார் அறுபத்து மூவரில் ஒருவரான இக்காலப் பகுதியைச் சார்ந்த கோச்செங்கட் சோழன் எண்தோளீசர்க்கு எழுபது மாடக் கோயில்களை அமைத்தான் என்பர், பின்வந்த வைணவ அடியார் திருமங்கை ஆழ்வார்.

''இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோளீசர்க்கு
எழில் மாடம் எழுபது செய்து உலகாண்ட
திருக்குலத்து வளச் சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே''[1]

பெரிய திருமொழி 6:6:8

இந்நிலையிலிருந்தே விரிவாகக் கோயில்களை அமைக்கும் பணி நாளுக்கு நாள் வளர்ச்சியுற்றுப் பல்கிப் பெருகிற்று எனலாம் ஊர்தோறும் கோயில்கள் இருந்தமைக்குப் பின்வந்த ஞான சம்பந்தரும், அப்பரும், தலந்தோறும் சென்று பதிகம் பாடியுள்ளமையால் உய்த்துணரலாம். சைவர்களின் 'கோயில்' நகரான தில்லையின் அமைப்பும் இக்காலத்தியதாக ஆராய்ச்சி உணர்த்திச் செல்லும்.

சக்தி வழிபாட்டைக் குறிக்கும் தாந்திரிக நெறியிலும் நம்பிக்கை அதிகரித்து அதன் வழிபாட்டு முறைகளும் பல்கின. சான்றாக சிலம்பின் வேட்டுவவரியைச்'' சுட்டலாம்.[2]

இளங்கோவடிகளின் ''பத்தினித் தெய்வ'' வழிபாட்டின் கருவும் இங்கேயே காணலாம். திருமந்திர தாந்திரிகப் பகுதிகளை இங்கு எண்ணிக் கொண்டும் உண்மையைத் தெளியலாம். இது பற்றிய விளக்கம் இக்கட்டுரையில் பின்வரும் ''திருமூலர்'' என்ற தலைப்பின் கீழ் காண்க.

இந்திய நாட்டின் ஏனைய பகுதிகளின் சைவசமய நிலை

இக்காலத்தில், வட இந்தியப் பகுதிகளில் நிலவி வந்த சைவம் காஷ்மீர் சைவம் என்ற பெயர் பெறும். அஃது சைவத்தின் ஒரு பிரிவே. காஷ்மீர்பகுதியில் பரவலாக வழங்கி வந்தமையே இப்பெயர்க் காரணம். மேலும் இச்சமயத்தில் முதன்மையான நூல் இயற்றியவர் இந்நாட்டு அந்தணராவர்.

இச்சைவத்தில் முதல்வன் மகேசன் எனப்படுவான்''. உலகுக்குப் பரம்பொருளும், பேதா பேதமே. பிரகிருதி போன்ற தொரு உலகு முதற்காரணம் பரம் பொருளுக்கு வேறாக இல்லை என்பன இதன் முக்கியக் கோட்பாடுகள். ''உயிர்களும் பரம்

---

[1] நாலாயிர திவ்வியப் பிரபந்தம் - பதிப்பு மயிலை மாதவதாசன், திருந்தியபதிப்பு 1962, கபீர் பிரிண்டர்ஸ், சென்னை, பக்கம் 342.

[2] சிலப்பதிகாரம் - பக்கம் 316-317.

பொருளுக்கு வேறு அல்ல''. இங்ஙனம் காஷ்மீர் சைவம் ஒரு பொருள் கொள்கையைச் சார்கின்றது.

சைவசித்தாந்தம் பிரிப்பின்மை, சாமீயம் என்றவற்றை அடிப்படையாகக் கொள்கின்றது. பிறப்பு நிலையும் வீட்டு நிலையும் இணைந்து உணர்வதே தத்துவ ஆராய்ச்சி; அதனை விளக்கும் வகையில் தென் இந்திய சைவமும், காஷ்மீர சைவமும் வேறு வேறு முறைகளைப் பின்பற்றுகின்றன. இது இந்தியநாட்டு சைவத்தின் பிரிவாகக் கொள்ளலாம். இரண்டுக்கும் வரலாற்று உறவு இல்லை எனலாம்.

வகுளீசபாசுபதம்: கிருத்து சகாப்தத்தின் ஆரம்ப ஆண்டுகளில் இந்திய நாட்டின் மேற்குப் பகுதியில் வகுளீசர் என்பவர் இம் மதத்தைப் பரப்பி வந்தார். அவர் மகேசனின் ''கடைசி அவதாரமாகக் கருதப்பட்டார். சைவத்தில் ''பாசுபதம் என்ற பிரிவு இவர் வழி வந்ததே.

இதில் இலிங்கவழிபாடு மேன்மையுற்றிருந்தது. இஃது அகப்புறச்சமயமாக சித்தாந்திகளால் கொள்ளப்படும்.

மேற்கண்ட காலப்பகுதியின் சிறப்பு நிலை: சங்க காலத்தை அடுத்தும், தேவாரகாலத்துக்கும் முந்திய இடைக்காலத்தைச் சிறப்பாக நோக்கும்போது, இக்காலத்தில் வைதிகநெறி, சைவ, வைணவ, சாக்த நெறிகளைத் தழுவிக் கொண்டு இணைந்து செல்கிறது. (அதன் எதிரிகள், பௌத்தமும் சமணமும்). எனினும் இக்கூட்டில் அந்தச் சமயங்களின் தனித்தன்மைகள் தெளிவாகவே இருந்து வந்துள்ளன.

''அந்தணர்க்கருங்கலம் அருமறை ஆறங்கம்
நங்களுக்கருங்கலம் நமச்சிவாயவே''.[1] என்பர் அப்பர் சுவாமிகள்.

சிலப்பதிகாரத்தில் புராணக்கருத்துகளை எண்ணினோம். புராணங்களில் ஸ்மிருதிகளின் கொள்கைகளும் நம்பிக்கைகளும் இணையப் பெற்றிருந்தன. பழைய தத்துவங்களும் அண்டங்களின் தோற்றம் சார்ந்த நம்பிக்கைகளையும் பின்புலமாகக் கொண்டு புரர்ணங்களின் புதியபிரிவுகள் சமயக்கருத்துக்களை விளக்குவனவாக அமைந்திருந்தன. சுமார் கி.பி. 4-ம் நூற்றாண்டு முதல் புராணங்களில் சைவ வைணவ சாக்த நம்பிக்கைகளும் கோட்

---

[1] திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள். 3ம் பதிப்பு, சென்னை, சைவ சித்தாந்த மகாசமாஜம், இராயப்பேட்டை, சாது அச்சுக்கூடம் 1941, பக்கம் 19.

பாடுகளும் ஒழுங்கு படுத்தப்பட்டன.[1] இக்காலத்தே சைவத்தின் பாசுபத பிரிவு செழித்தோங்கியது.

சைவக் கோட்பாடுடைய புராணங்களோடு ஆகமங்களும் நிலவிவந்தன. ஆகமங்களின் தோற்றகாலம் தெளியக்கூடவில்லை. சிவாகமங்கள் இருபத்தெட்டு என்பர் திருமூலர். இவற்றோடு பல உபாகமங்களும் இருந்ததாகத் தெரியவருகின்றது. எப்படி யாயினும் இவ்வாகமங்கள் தோன்றி செல்வாக்குற்றிருந்த காலம் கி.பி. 7-ம் நூற்றாண்டுக்கும் முந்தியதென்பர். அவற்றின் கோட் பாடுகள் ஆகம சைவம் என்றழைக்கப்பெற்றது. திருமூலர் தம் திருமந்திரநூலை ஆகமங்களின் வழித்தது என்பர்:

''ஆகமம் ஒருபான் அதிலான நாலேழு
மோகமில் நாலேழு முப்பேதமுற்றுடன்
வேகமில் வேதாந்த மெய்மையொன்றும்
ஆகமுடிந்த அருஞ்சுத்த சைவமே''[2]

திருமந்திரம் ஆகமச்சிறப்பு.

திருமூலர் காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கும் 7-ம் நூற்றாண் டுக்கும் இடைப்பட்ட தென்பர்[3]

ஆகமங்களின் கோட்பாடுகள், ஆகமசைவம் அல்லது சித் தாந்தம் என்ற புதிய கோட்பாட்டில் அமைந்தது:

''கற்பன கற்று கலை மன்னு மெய்யோகம்
முற்பத ஞான முறைமுறை எண்ணியே
சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பதங் கண்டுளோர் சைவசித்தாந்தரே[4]

கி. பி. 7-ம் நூற்றாண்டு தொடங்கி சைவநாயன்மார் களின் பக்திப் பாடல்கள் சைவத்தின் எழுச்சி நிலையின் முழு மையைக் காட்டும். எனவே கி.பி. 3-ம் நூற்றாண்டு முதல் கி.பி. 7-ம் நூற்றாண்டு வரை சைவத்தின் எழுச்சி இயக்கமாகும். சுந்தரமூர்த்தி நாயனாரால் திருத்தொண்டத் தொகையில் போற்றப் பெற்று, பெரிய புராணத்தில் விரிவான வரலாற்றைப் பெற்ற சைவநாயன்மார்களில் சிலர் இக்காலப் பகுதியில் வாழ்ந்த வர். அவர்கள் அடிச்சுவட்டில் காணப்படும் சைவ சித்தாந்த

---

[1] R. C. Mujumdar, The Cultural Heritage of India, vol. IV. Calcutta, The Ramakrishna Mission institute, reprint 1962, Page 78

[2] திருமூலநாயனார் திருமந்திரம்; சென்னை, சைவசித் தாந்த நூற்பதிப்புக்கழகம், 1942, பக்கம் – 9 பாடல் 74.

[3] கா. சுப்பிரமணியபிள்ளை, இலக்கிய வரலாறு, இரண் டாம் பாகம், சென்னை, ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், 1956 பக்கம் 298.

[4] திருமந்திரம்: பக்கம், 169 பாடல், 1396.

சமயநெறி தென்னாட்டில் இணையற்ற மறுமலர்ச்சியைக் கண்டது. பின்வரும் நாயன்மார்கள் இக்காலப் பகுதியைச் சார்ந்தவராவர்:

1. கோச்செங்கட்சோழன். 2. மூர்த்திநாயனார். 3. அமர்நீதியார். 4. எறிபத்த நாயனார். 5. காரைக்காலம்மையார். 6. கணம்புல்லர். 7. கண்ணப்பநாயனார். 8. சண்டேசநாயனார். 9. சாக்கியநாயனார். 10. தண்டியடிகள். 11. திருமூலர். 12. நமிநந்தியடிகள், முதலியோர்.

இவர்களில், திருமூலரது திருமந்திரமும், 11ம் திருமுறையில் காணும் காரைக்காலம்மையார் நான்கு பிரபந்தங்களும் நமக்கு நூல்களாகக் கிடைத்துள்ளன. கால ஐயப்பாட்டுக்குரிய நூல்கள் சில இருப்பினும்[1] இவ்விருவருடைய நூல்களைக் கொண்டே இக்கால சைவத்தின் சீரிய நிலையை எண்ணிப் பார்க்கலாம்.

மேற்குறித்த நாயன்மார்களில் எல்லோருடைய வரலாறுகளும், சேக்கிழார் பெருமானால் பக்திச் சுவையும், கவிநயமும் தோன்ற விரித்துரைக்கப்பட்டுள்ளன. இவர்கள் யாவரும் பக்தி நெறியில் சைவ சமய ஒழுகலாற்றில் கடைப்பிடியாக நின்று வழிகாட்டியவர்கள். சைவத்திறனான சரியை, யோகம், ஞானம் என்ற படி முறைகளில் வேறு வேறு நிலைகளில் நின்று ஒழுகியவர்கள்.

கோச்செங்கட் சோழன்: இவர் சோழ அரச மரபைச் சேர்ந்தவர். இவர் திருக்கோயில் கட்டும் பணியில் சிறப்பாக ஈடுபட்டவர் என்பதை மேலே திருமங்கை யாழ்வார் வாக்கில் குறித்தாம். அக்கால சிவநெறித் தொண்டில் திருக்கோயில் கட்டும் பணி புதிய திருப்பமாக அமைந்துள்ளது. சங்ககாலக் கோயில்கள் சிறிய அளவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக அருகி இருந்தன. கோயில் அமைக்கும் பணி ஓர் இயக்கமாக ஆரம்பமானது இக்காலத்திலிருந்தேயாம்.

மூர்த்திநாயனாரின் திருக்கோயில் சரியைத் தொண்டு குறிக்கத்தக்கதே. இவர் தொண்டினுக்கு இடையூறு விளைத்த அவர்

---

[1] கா. சுப்பிரமணியபிள்ளை — பக்கம் 272, 298 திரு. பிள்ளையவர்கள் இங்கு திருவாசகம் கி.பி. 3-ம் நூற்றாண்டு என்றும் கல்லாடம் கி.பி. 6-ம் நூற்றாண்டு என்றும் விளக்குவதோடு மறைமலை அடிகளின் கருத்தையும் அதற்கு அரணாகச் சுட்டுவர்.

நாளைய களப்பிர அரசன் அழிந்துபட்டான் என்பது வரலாறு.[1] மூர்த்தியார் மும்மையால் உலகாண்டார் என்பர் சுந்தரர்[2]

கணம்புல்லர்; தொண்டும் சரியை நெறித்ததே. இடையீடற்று திருக்கோயிலில் திருவிளக்கெரிக்கும் பணியில் தோய்ந்தவர்.

கண்ணப்பர்: ஒரு மலமே பொருந்திய விஞ்ஞானகல உயிர் வர்க்கத்தைச் சார்ந்தவர். பிறவிக்குக் காரணமான, அவிச்சை இறைவனை இவர் தரிசித்த அளவிலேயே, ஆற்றல் கெட்டொழிந்தது. பல பிற்கால சைவ நூல்கள் இவரைப் போற்றத் தவறவில்லை.

சண்டீசரும் சாக்கியரும்: இவர் இருவரும் ஞானம் சார்ந்த கிரியையும் யோகமுமாகிய நெறிநின்றொழுகியவர்கள். முன்னவர் வைதிக குலத்தவர். எனவே அந்நெறியோடு இணைந்து நிற்பவர். பின்னவர் சாக்கிய மதத்தை நீத்து சைவ நெறிப் பட்டார் என்பது வரலாறு.

திருமூலர்: திருமந்திரம் இவர் இயற்றிய அரும்பெரும் நூல். 3000 பாக்களைக் கொண்டது. இவர் நெறி ஞானம் சார்ந்த யோகம், ஆயினும் இவர் நூல் சைவ சித்தாந்தத்தின் நால்வகை நெறிகளையும் விரித்துச் செப்பும்.

இவர், வேதத்துக்கும் ஆகமத்திற்கும் பொருள் ஒருமை கண்ட முக்கியமானவர்களில் ஒருவர். வேதம், சிவாகமம், ஆகிய இரண்டுமே சிவபிரானால் அளிக்கப்பட்டன என்பர். இரண்டுமே உண்மை உணர்த்தும் நூல்கள். அவற்றில் வேதம் பொது உண்மை கூறும், சிவாகமம் உண்மையைச் சிறப்பு நோக்கில் கூறும்.

> ''வேத மோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்
> ஒதும் பொதுவும் சிறப்பு மென்று
> நாதன் உரையவை நாடில் இரண்டைந்தும்
> பேதமதென்பர் பெரியோர்க்க பேதமே''[3]
>
> —திருமந்திரம்

திருமந்திரம் ஒன்பது தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. திருமூலர் சித்தர் இனத்தவர்.

''சிவனே முழுமுதல் இறைவன். அவனொடொத்த தெய்வம் வேறில்லை. அவன் மாதொரு பாகத்தன்; மும்மூர்த்திகளுக்குத்

---

[1] சேக்கிழார் பெருமான், பெரிய புராணம், இரண்டாம் பதிப்பு, சென்னை சைவசித்தாந்த மகாசமாஜம், சாது அச்சுக் கூடம், 1937, பக்கம்-147 பாக்கள், 24-325.

[2] சுந்தரமூர்த்தி சுவாமிகள், தேவாரம், திருப்பனந்தாள் மடம் வெளியீடு, சென்னை நேஷனல் பிரஸ், 1949, பக்கம் 97.

[3] திருமந்திரம், பக்கம், 285, பாடல், 2358.

தலைவன். முத்தொழிலோடு மறைத்தல் அருளல் ஆகிய தொழில்களும் அவன் ஆணையால் நிகழ்கின்றன.[1] சிவபுராணங்களின் உள்ளுரைப் பொருள் விளக்கங்கள் இந்நூலில் பயின்று வருகின்றன. இவ்விளக்கங்கள் வேறெந்த நூலிலும் காணாததொன்று. அவர் காலத்திலேயே, புராணங்கள் கற்பனை வரலாறுகள்; தத்துவக் கருத்து விளக்கங்களாக வழங்கி வந்தமையையும் இப்போக்குத் தெரியப்படுத்தும். (உ-ம்) இறைவன் முப்புரம் எரித்த வரலாறு அவன் ஆன்மாவின் மும்மலத்தைக் கெடுப்பதைக் குறிக்கும் என்பர்[2]

இந்நூல் சித்தாந்த சைவம், வைதிகக் கொள்கைகள், சாக்த நெறிப்பயிற்சி ஆகியவற்றின் தொகுப்பாக உள்ளது.

யோகம், மந்திரம், தந்திரம் முதலியன விரிவாகப் பேசப்படும். மனித உடலில் நரம்புத் தொகுதிகளாலாய ஆதார நிலைகளை விரித்துச் சொல்லி அவற்றில் மூச்சுக்காற்றை நிறுத்தி மந்திரத்தோடு கூடிய தியானத்தால் அட்டமாசித்தி போன்ற பேறுகளை அடையும் வழிகளை இந்நூல் வகுத்துச் சொல்லும்.

சாக்த நூல்கள் தந்திரம் எனப்படும். அவை சாக்கிய தரிசனத்தின் அடிப்படையில் எழுந்தவை. உடல், அதில் நாதம், நாடிகள், ஆதாரங்கள், யோக நிலை, மந்திரங்கள் அவற்றின் சக்திகள், முத்திரைகள் சக்கர வழிபாடுகள் முதலியன இவற்றின் பகுதிகளாம்.

எனினும் அன்பு நெறியாகிய சிவநெறியே சிறந்தது; சிவனே முடிந்த முழு முதற்கடவுள் என்ற கருத்துக்களைத் திருமூலர் உறுதியாகச் சொல்லுவர்.

இவர் நூலை நுணுகி நோக்குவோர்க்கு ஒருசார் புறச் சமயங்கள் ஆறு என்றும், மற்றொருசார் புறப் புறச்சமயங்கள் ஆறு என்றும் தொகைநிலையில் கூறுவது தெரியவரும். இவற்றையே பிற்கால சித்தாந்த நெறி புறப்புறச்சமயம், புறச்சமயம் என்று பாகுபடுத்திச் சொல்லும். இப்பகுப்பில் புறப்புறக்கூட்டில் அடங்கும் பௌத்த சமண மதங்களை (இவர்காலத்தவை) பெயர் சுட்டாது ''புறச் சமய தூஷணம்'' என்னும் பகுதியில் மறுத்துச் செல்வர்.

ஒரு பாடலால் திருமூலர் அருளிய உபதேசம் 30; மந்திரம் 300; தமிழ் 3000 என்பது தெரிய வருகின்றது.

உபதேசம் 30 பாடல்களும் அந்தாதித் தொடையில் நூலின் முதல் தந்திரப் பகுதியில் அமைந்துள்ளன:

''இறைவன் ஆன்மாவின் உள்ளே இருப்பவன். மலநீக்க

---

1 மேற்படி, திருமந்திரம், பக்கம் 1 பாடல் - 4.

2 மேற்படி, பக்கம் 41, பாடல் 329

மடைந்து பக்குவப்பட்ட ஆன்மாவுக்கு இறைவன் உள்ளிருந்து குருவாய் வெளிப்பட்டு உபதேசிப்பான். மல பரிபாகம் வருவிப்பதும் அவனருளே. நித்தியப் பொருள்கள் மூன்று; அவையே பதி, பசு, பாசம் எனப்படும். பதியைப் பசுவும் பாசமும் அறியா. பதி அவற்றின் பசுத்தன்மையையும், பாசத்தன்மையையும் போக்கும். அம்பலத்தில் ஆடி இறைவன் பஞ்சகிருத்தியங்களைச் செய்வான். தத்துவங்கள் 36. அவை தத்தம் கரணத்தில் ஒடுங்கும். சித்தர் எடுத்த பிறவியிலேயே சிவனை தரிசிப்பர்; நாதாந்தத்தில் விளங்குவர். சரியை கிரியை யோகங்கள் முறையே, சிவலோகம், சிவயோகம், சிவபோகங்களைப் பயப்பிப்பன. சீவன் தன் அறிவின் எல்லையில் இறை அருளைப் பெறுவன். இறைவன் சீவனில் கலந்துள்ள அத்துவிதத்தன்மை, பாலில் நெய் போன்றும் அப்பினில் உப்புக் கலந்துள்ளது போன்றுமாம். சீவனுக்கு முத்தி நிலையில் இறைவன் திருவடியல்லாமல் வேறு தஞ்சமில்லை. அதுவே செல்கதியது. சிவமே எல்லாமும்''.

என்று சுருக்கமாகவும் தெளிவாகவும் இப்பகுதியில் இயம்பப்படுகின்றன. சுருங்கச் சொல்லில் இந்த உபதேசப் பகுதியின் விரிவே ஏனைய திருமந்திரப் பகுதிகள் எனலாம். 300 மந்திரங்கள் சிதைந்தும், இடைச் செருகல்கள் கொண்டும் உள்ளன.

திருமூலர் தம் நூலைத் தமிழ் என்றே குறிப்பிடுதல் எண்ணத் தக்கது. இதைப் பின்பற்றியே பின்வந்த ஞானசம்பந்தரும் தன்னை ''தமிழ் ஞான மிகு சம்பந்தன்''[1] என்றும்; தம் பதிகங்களைத் ''திருநெறிய தமிழ்'' என்றும்[2] விதந்தோதினர் போலும். திருமூலரின் இக்கூற்றால் ஆகமநெறி தமிழ் வழக்கென்பதே பெறப்படும். இந்தத் தமிழில் கலைகள், ஞானம், யோகம், ஒழுக்கம் முதலிய பலபடித்தான செய்திகள் அமைந்துள்ளன.

பிற்காலத்தில் 13-ம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்த மெய்கண்ட தேவர், ஆகமநெறி வந்த சிந்தாந்த உண்மைகளைச் சூத்திரயாப்பினால் சைவ சமய இலக்கணம் வகுத்து மெய்கண்ட பரம்பரையைத் தோற்றுவித்தார். கி.பி. 8-ம் நூற்றாண்டில் தோன்றிய ஆதி சங்கரரின் மாயாவாதக் கோட்பாடு ஒரு பொருள் கொள்கைத்து. பிரம்மப்பொருள் ஒன்றே உள்ளது என்பர் ஏகான்ம வாதிகள்.

அடுத்து 11-ம் நூற்றாண்டினரான இராமானுஜரின் விசிட்டாத்துவிதம், அத்வைதிகளின் ஏகமாகிய பிரம்மம் வியாபகப்

---

[1] தேவாரப்பதிகங்கள், சென்னை நிரஞ்சன் விலாச அச்சுக் கூடம் - 1917, பக்கம் 25, மயிலை சண்முகம்பிள்ளை பதிப்பு.

[2] மேற்படி - பக்கம் 2.

பொருளே எனவும் உயிரும் பாசமும் கடவுளில் அடக்கம் எனவும், ஆயினும் பாசத்தையும் உயிரையும் போல் கடவுள் பலவல்ல, ஒன்றே என்பதாம்.

அடுத்து 13-ம் நூற்றாண்டினரான ஆனந்த தீர்த்தர் எனப் படும் மத்துவர் துவிதம் அல்லது பேதவாதக் கொள்கையினைக் கூறுவர். ஒன்றாகிய கடவுளும், இரண்டாவதாகிய உயிரும் பந்த மும் வேறு வேறாக நிற்கும் என்பது அவர் வழக்கு.

இங்ஙனம், அத்துவைதம், விசிட்டாத்துவைதம், துவைதம் என்ற கோட்பாடுகள் நாட்டின் நாலு பக்கங்களிலும் சுற்றிச் சுழன்று, தத்துவ உலகில் ஒரு முரண்பாட்டைத் தோற்றிப் பரப்பி வந்தமையைத் தடுத்து நிறுத்தி உண்மைத் தத்துவத்தை சிந்திக்க வைப்பதே மெய்கண்டாரின் பணியாக இருந்தது. அதோடு உண்மை தத்துவத்தை உலகறியச் செய்வதும் அவருடைய நோக்கமாகும். அவர் காட்டும் நெறி திருமந்திரம் குறித்துச் செல்லும் ஆகம நெறியாம்.

எனவே மெய்கண்டசாத்திரம் ஒரு புதுக்கோட்பாடல்ல. பதி, பசு, பாசம் எனப்படும் ஆகமநெறிப்பட்ட முப்பொருள் கொள்கையை தத்துவ உலகிற்குக் காலத் தேவைக் கொப்ப சூத்திரவடிவில் முறைப்படுத்தப்பட்ட சமய இலக்கணமாகும்.

உண்மை இங்ஙனம் அது வடமொழி வழக்கிலிருந்து மொழி பெயர்க்கப் பட்டதென்பது பொருந்தாக் கருத்தாகும்.

எனவே, திருமந்திரத்தின் பொருள் சிறப்பு, மறைந்து போன தமிழ் ஆகமங்களின் வீறுநிலையை எடுத்துக்காட்டுவதாகஉள்ளது.

காரைக்காலம்மையார் (கி.பி. 5 அல்லது 6ஆம் நூற்றாண்டு)

பெரிய புராணம் பகரும் அறுபான்மும்மை நாயன்மார்களில் காலத்தால் முற்பட்ட சிவனடியார்களில் ஒருவர் காரைக்காலம் மையார். அவர் ஒரு பெண்பால் என்பதும் அவரே, ஞானசம்பந்த ராதிய தேவாரமுதலிகள், பதிகப் பெருவழி நின்று பக்தி மார்க் கத்தை வளத்தற்கு வித்திட்டார் என்பதும், எண்ணி மகிழத் தக்கது.

இன்று தொகுக்கப்பட்டு உலவிவரும் சைவத்திருமுறைகளி லேயே, காலத்தால் முற்பட்டன, இவருடைய பிரபந்தங்கள். அவை பொருள் சிறப்பு கொண்டு திகழ்வன.

அம்மையாரின் ''திருவாலங் காட்டு மூத்ததிருப்பதிகங்கள்'' இரண்டும் அப்பெயர் கொண்ட திருத்தலத்தைப் பற்றிய பதி கங்கள். அவற்றில் அத்தலத்தின் இயல்புகள் பாடப்பட்டுள்ளன. அவற்றின் பொருள் நோக்குப் பரு நிலையிலிருந்து நுண்மைக்கு உய்ப்பன வாயுள்ளன.

பருநிலை: ஆலங்காட்டின் சுடுகாடு, அதன் வருணனையைச் சொல்லோவியமாகத் தீட்டுகின்றார்.:

''அங்குப் பிணங்கள் சுடப்படுகின்றன. பேய்கள் அலறி உளறுகின்றன. நள்ளிரவில் இறைவன் நடனம் நிகழும். அது போது ஈமத்தீ இருட்டைப் போக்கும். அதுவே இறந்தவர்க்குத் தக்கவர் கடமை செய்து இட்டதீ. அவன் நடனத்தின் போது ஏற்புடைய மத்தளம், துந்துபி, தாளம் போன்ற இசைக்கருவிகள் முழங்கும்.

நுண்மை நிலை: இச் சொல்லோவியத்தைக் கொண்டு உலக நிலையாமையை வற்புறுத்துவர். இதுவே உலக வாழ்வின் முடிந்த நிலை. அவா அடங்காஉயிர்களே பேய்கள். ஈமத்தீயில் வேகும் பிணங்களுக்கு அலறி உளறும் பேய் வாழ்வை, அடங்காப் பற்றுக் கொண்டு பிறர் கேட்டையும் கருதாது வாழ முயலும் உயிரிகளின் நிலைக்கு ஒப்புமைப்படுத்துவர். உலக இயக்கம் இறைவனால் ஒரு தாளகதியில், ஒப்பற்ற இசையில் நிகழ்கின்றது.

இதனால், பொதுவகையாக ஞான மெய்ப் பொருள் அறிவுறுத்தப்புக்கு உலக நிலைமையும் அதனால் அனைவரும் கடைப்பிடித்தொழுக வேண்டும் நல்லொழுக்க நிலைகளையும் உய்த்துணர வைக்கின்றார். ஞானத்தின் முதற்படி நிலையாமை, உணர்வே. இம்மேற்கோள் ஆகம நெறித்தது என்பது, திருமந்திரம் முதல் தந்திரப் பகுதி, பொருள் நிலையாலும் தெளியலாம்.

நிலையாமை உணர்வு மீதூர மெய்யுணர்ந்து, அகத்துறவு நிலை எய்திப் பற்றற்ற காலை, எய்தப் பெறுவது பிறவாநிலை. இவற்றின்நெடுக, தெளிந்த இறைவன் உண்மையில் கடைப்பிடியாகநின்று, அவன் திருவடியை இடைவிடாது தொழல் வேண்டும். இது சைவதத்துவ நெறியாம்.

சங்கப்பாடல்களும் நிலையாமை உணர்வை ஒதும்:-

''முதுகாடு ... ...
எல்லார் புறனுந் தான் கண்டு உலகத்து
மன்பதைக் கெல்லாந் தானாகத்
தன்புறங் காண்போர்க் காண்பறியாதே''[1]

—புறம் 356

சங்கப்பாடல் உலகநிலையாமையை உணர்த்தும் அளவில் நிற்கின்றது. ஆனால் அம்மையோ,

''அப்பனை அணிதிரு வாலங்காட்டுள்
அடிகளைச் செடித்தலைக் காரைக்காற் பேய்

---

[1] சங்க இலக்கியம், பாரி நிலையம், சென்னை, பதிப்பு. வையாபுரிப்பிள்ளை, இரண்டாம் பதிப்பு, 1967, பக்கம் 677.

செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்,
சிவசக்தி சேர்ந்தின்பம் எய்துவாரே.[1]

என்று வாழ்வின் இன்னாநிலையில் இருந்து விடுதிகாணச் செய்கின்றார். இது ஆன்மீகத்தின் மேம்பாட்டையும் வளர்ச்சியையும் உணர்த்தும். இஃது சைவ சமயத்தத்துவ வளர்ச்சியே. சங்க காலத்தில் அகமும், புறமும் வாழ்வின் அறநெறியையே பெரிதும் வலியுறுத்தும். அறநெறி உலக வாழ்வின் செம்மைநெறி, எனவே அங்கு இம்மை நோக்கே பெரிதும் குறிக்கோள் எனக் கொண்ட வாழ்வே வெள்ளிடைமலை. சங்கச் சான்றோர் இம்மைகடந்த ஒரு வாழ்வை ஏற்றுக் கொண்டாலும் அதன் அடைவில் அதிக நாட்டம் கொள்ளவில்லை எனலாம்.

அவர்கள் கடவுளர்களையும், நிலத்தின் காலத்தால் தோன்றும் கருப் பொருளாகவே கொண்டனர். எனவே நிலவரம்புக்கும், காலவரம்புக்கும் உட்பட்ட இக வாழ்வே அவர்களது பெரு நோக்காக இருந்தது. ''யாம் வேண்டுபவை பொருளும் பொன்னும் போகமுமன்று; வீடுபயக்கும் நின்னருளும் அதனை உண்டாக்க நின்னிடத்து யாம் கொள்ளும் அன்பும் அவற்றால் பெறும் அறம் ஆகிய பேறேயாம்.[2] என்ற கருத்தமைந்த பரிபாடல் வேண்டு கோளும் சங்க கால வாழ்வின் ஈற்று நிலை அனுபவமாகவே, அருகியே காண்கிறோம்.

அம்மையார் இந்நிலைகளைக் கடந்து வாழ்வை நோக்கி அனுபவித்துப் பயன்கொண்டு வழி காட்டுகின்றார். திருமந்திரம் ஒரு சாத்திரநூல். சாத்திரம் பெரும்பாலும் சமய இலக்கணம் கூறும். ஆனால் அம்மையாரின் இலக்கியம் இலட்சியத்தது. கடைப்பிடியாக, இறைவன்ஒருவனே; அவன் சிவபிரானே என்று வற்புறுத்துவர். இதுவும் சைவநெறியின் பூரண வளர்ச்சி நிலையைக் காட்டும். சேக்கிழார் கூற்றில்:

''கொன்றை வார் சடையினார்தங் குரைகழல் போற்றிச்
சிந்தை ஒன்றிய நோக்கில் உணர்வு கொண்டு''[3]

''இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை
என்றும்

---

[1] பதினோராந்திருமுறை, காசிமடத்து வெளியீடு, நேஷனல் ஆர்ட் பிரஸ், சென்னை, 1950, பக்கம் 5

[2] கடுவனிள வெயினனார், பரிபாடல், டாக்டர். சாமிநாதையர் பதிப்பு, 4-ம் பதிப்பு, சென்னை, கபீர் அச்சுக்கூடம், 1956 பக்கம், 48-49

[3] சேக்கிழார் பெருமான், பக்கம், 263.

மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க'' என்றார்.[1]

பின் வந்த சம்பந்தருடைய தேவாரப் பதிகங்கள் புற நிலையில் அம்மையின் அடிச்சுவட்டில் செல்லும்.

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டும் பதினாறு பாடல்கள் கொண்டு, ஈற்றுப் பாடல்களில் பதிகப்பயனாம் பாடினோரைப் பற்றிய குறிப்பும் கொண்டுள்ளன. சம்பந்தர் தேவாரம் இம்முறையை மேற்கொண்டியங்கும். சுந்தரரின் பெரும்பாலான பதிகங்களும் இம்முறையில் அமைந்துள்ளன. சம்பந்தரின் தொடக்கப்பதிகமாகிய ''தோடுடையசெவியனும்'' அம்மையாரின் தொடக்கப்பதிகத்தைப் போல் நட்டபாடை பண்ணில் இசைக்கக்பெறுகின்றது எண்ணலாம்.

சம்பந்தர் பாக்களின் அகநிலை, இயற்கையில், உலகவிரிவில் இறை உண்மையைத் தன்னகத்தே கொண்டிலங்கும், புராணச் செய்திகளால் அவன் ஆற்றல்களைக்கும் முகமாக சிவபிரானின் தலைமையை எடுத்தோதும்.

அகநிலையில், அம்மையின் பாக்களில் உலக அழிவில் இறைவனின் ஆற்றல் களைக்கும் முகமாக அவனது முதன்மையை வலியுறுத்துவர். சிவபுராணச் செய்திகளிலும், அற்புதத்திருவந்தாதியிலும் திருவிரட்டை மணிமாலையிலும் கூறுவர்.

குளம்புறக் கலைதுள மாலைகளும் சிலம்பக்
கொழுங்கொடி எழுந்தெங்கும் கூவிளங் கொள்ள
இளம்பிறை தவழ் பொழிலிம்மைபயங்கோட்டூர்
இருக்கையால் பேணியென் எழில் கொள்வ தியல்பே.[2]''

திருஞானசம்பந்தர்.

இது, சம்பந்தர் வாக்கில், இயற்கையில் இறைமைப் பொலிவு.

''கண்ணிறைந்த விழி யின்னழால் வரும்காமன்னுயிர்வீழப்
பெண்ணிறைந்தவொரு யான் மகிழ் வெய்திய பெம்மான்
உறைகோயில்''

—திருஞானசம்பந்தர்[3]

காமத்தை வென்ற அவனாற்றல் இங்குக் கூறப்பட்டுள்ளது.

''நாடும் நகரும் திரிந்து சென்று நன்னெறி நாடி நயந்தவர்
மூடி முது பிணத் திட்டமாடே முன்னிய பேய்க்கணம் சூழச்
சூழக்

---

1 மேற்படி — பக்கம், 265.

2 திருஞான சம்பந்தர் தேவாரப்பதிகங்கள், முதல் திருமுறை, தருமபுரம் ஆதீனம் வெளீயீடு, 1953, பக்கம், 344

3 மேற்படி, பக்கம், 20.

காடும் கடலும் மலையும் மண்ணும் சுழல அனல் கையேந்தி
ஆடும் அரவப் புயங்கன் எங்கள் அப்பன் இடம் திருவாலங்
காடே''[1]

அம்மையார் இங்கு உலக அழிவில் இறை ஆற்றலும் அவன் உண்மையும் பெற வைக்கின்றார். அவன் ஆற்றலை விதந்தோறும் புராணவழக்கும் இதில் அடங்கியுள்ளமையைத் தெளியலாம். அப்பரது பதிகங்களில் உள்ள உருக்கம் மிகுந்துள்ளமை அவரது அவல வாழ்வின் அனுபவமாகக் கொள்ளலாம். அவரது தொண்டின் சிறப்பு வெளிப்படை. இதுவே இறையருளைப் பெறும் வழியாக அவர் மேற்கொண்டார். எடுத்துக்காட்டு:

''சலம்பூ வொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என் நாவில் மறந்தறியேன்.

4.1.6 அப்பர் தேவாரம்

அம்மையாரின் தொண்டு வாழ்வுக்குச் சான்று:

''அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்[2]
அவர்க்கே அன்பாவதல்லாற்'' என்றும்

சிவனடியாரை சிவனோடு ஒப்ப எண்ணிப் பேணும் திறம் இவர் வாழ்க்கை வரலாற்றால் அறியப் பெறும்.

''தொண்டருக்குத் தொண்டராம் புண்ணியமும்'', . . .
''அடியவர்க் கன்பிலார் ஈசனுக்கன்பிலார், எவ்வுயிர்க்கு மன்பிலார்
தமக்கும் அன்பிலார்'', என்ற பிற்கால சிவஞானபோத பயனியலுக்கு வித்தும் இங்கே உள்ளது.

பின்வந்த சைவ நெறியாளர் மேற்கொள்ளும் இறைவனின் கடந்த கோலங்களும் கற்பிக்கப் பெற்ற அக்கோலங்களின் புராணப் பின்னணிகளும் இவர் பிரபந்தங்களில் பயின்று வந்துள்ளன.

காலனைவென்றது, முப்புரம் எரித்தது, இராவணனை அடர்த்தது, சுடுகாட்டில் என்புமாலை அணிந்து பேய்கள் சூழ ஆடியது போன்றன புராணப் பின்னணி கொண்டவை. சைவ தத்துவ நோக்கில் அவற்றின் உள்ளடக்கம் முறையே வருமாறு:

காலம் என்ற தத்துவத்தைக் கடந்தவன் (காலம் அசுத்த மாயையில் ஒரு தத்துவம்)
ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மல ஒடுக்கமே முப்புரம் எரித்தது.

---

[1] பதினோராந்திருமுறை, பக்கம்-4.
[2] பதினோராந்திருமுறை, பக்கம் 12.

ஐந்து அகமும், ஐந்து புறமுமாகிய மனநிலையில் விளங்கும் ஆணவமல ஒடுக்கமே தசமுகனை அடர்ந்தது.

எலும்பும் கபாலமும் ஏந்தியது, உலகங்களில் வாழும் அத்தனை உயிர்களின் உடல்களும் அங்ஙனம் நிலவி பயன் கொள என்பதாம்.

மேலும் இங்கு சிவபிரானின் சொரூபம் அவனது பிரிக்க முடியாத சத்தியாகிய திருவருள், அதுவே ஐந்தொழில் நிகழ்ச்சிக்கும் வித்தாகும் தன்மை, எண்வடிவினனாக உலக விரிவினில் திகழும் பெற்றி ஆகியனவும் தெளியப்படுகின்றன. சைவ சித்தாந்தம் கூறும் உயிரிலக்கணங்களில் தலையாய ஒன்று, அது (உயிர்) சார்ந்த தன்வண்ணமாகும் என்பதாம். உயிர், உடலில், அதன் நுண்மையாகிய மனத்தோடு சார்ந்து வாழ்கின்றது. எனவே, அதன் சுக, துக்க மோகமாம் அனுபவங்கள் சார்ந்துள்ள அம்மனத்தின் மூக்குண விகாரங்களுக்கொப்ப அமைகின்றன. இது தெளிந்து, மனத்துக்குப் பல படியாக அம்மையார் அறிவுரை விடுக்கின்றார்.

''நெஞ்ச மென்பாய்! வெவ்விய துன்பம் கிளந்து வந்தபோது அஞ்சித் தளர்ந்து இங்கு இருத்தல் தவிர்தி – இளந்திங்கள் எருக்கு கங்கை முதலியன சூடிய ஈசனை வணங்குவதே அதற்கு உபாயம்''[1]

உயிர் உடல் வயப்பட்டாலும், உள்ளிருக்கும் இறைவன் பக்கலில் சார்பு எனில் இன்பதுன்பங்கள் இல்லையாகும். இவ்வுண்மை;

''சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்து
சார்தர சார்தரு நூல்''

என்ற திருக்குறள் வற்புறுத்தும்[2]

இங்கு உயிருக்குச் சார்பே வாழ்வு என்ற சித்தாந்த உண்மையை இலக்கிய அழகோடு வெளியிடுகின்றார் அம்மையார்.

மேலும், துன்பத்தை வெறுத்து இன்பத்தையே அவரவரது உயிரிலக்கணங்களில் ஒன்றாக சித்தாந்தம் கூறும்.

''துன்பக் கடலில் விழாது இன்பமே வேண்டுவீராயின் அவன் பொற்கழலை நாளும் இறைஞ்சிப் பணிமின்,'' என்று நிலைத்த இன்பமெய்தும் உபாயத்தை அறிவுறுத்துகின்றார்.[3]

அம்மையாரின் அற்புதத்திருவந்தாதி ஞானத்தின் அற்புதங்களைக் கூறுவதாக அமைந்துள்ளது. இவ்வந்தாதி மேற்கொள்ளும் பொருள் கூறும் முறைமை இதற்கு முன் காணப்பட்டிலது. பின்வந்த நூல்களிலும், அதன் செறிவும், நடையும் முறையும் தெளிவும் காண்பதருமை.

---

[1] பதினோராந்திருமுறை, பக்கம் 7.

[2] திருவள்ளுவர், திருக்குறள் (சென்னை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்) 5-ம் பதிப்பு, 1946, பக்கம் 134.

[3] பதினோராந்திருமுறை, பக்கம். 9.

இறைவன் வடிவுகளைக் கூறும், எனினும் தனக்கென ஒரு வடிவின்மை, அவனது பருமையும் நுண்மையும், அவன் இருக்குமிடம்; சிவபக்திமேம்பாடு, அவனிடம் மறவாத அன்புடமை, பிறப்பறுக்கும் உறுதி, அவன் செயல்திறம் அவனது அளியும் தெறலும், அவனை வழிபடும் முறை இன்னோரன்ன செய்திகளை தெளிவாக இப்பகுதியில் தெரிவிப்பர்.

பிறவிகளில் மானுடப்பிறவியே சிறந்தது. அப்பிறவியில் தான் கல்வி கற்க வாய்ப்பும், அதன் பயனாக இறைவன் திருவடி தொழும் பேறும் கிட்டும். ஞான நாட்டத்தில் கல்வி முதற்படி. ஏனைய, கேட்டல் சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் அவற்றின் ஏனைய படிமுறைகள்.

''கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை
கிளத்தல் என ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்
வீடடைந்திடுவர் நிட்டை மேவினோர்கள்''

என்பது சிவஞானசித்தியார் சுபக்கம் கூறும் சாதனஇயல்.[1]

இதையே,

அம்மையார் கற்றவை மொழிமேல் வைத்து
''பிறந்து மொழி பயின்ற பின்பெல்லாம்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்''

என்று தன் ஞான அனுபவத்தை முதல் பாட்டிலேயே புலப்படுத்துவார்.[2]

பிறவி ஏழு என்ற கொள்கையையும் வெளியிடுவார். ஏழு பிறவிகளிலும் பிறவி தோறும் அவனடிக்கு அன்பு கூர்ந்து ஒழுக வேண்டும் என்பதை வற்புறுத்துவார். ''தெய்வ மென்பதோர் சித்தம் உண்டாதல்'', மானுடப்பிறவியிலேயே ஆகவின் இங்கு பிறவி என்றது மானுடத்தையே சுட்டும்; ஏழுவகை வேறுவேறு நிலைகளைஉடைய மானுடப்பிறவி என்க.

''ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு டைத்து''.[3]
''எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்''[4]
''எழுமை யெழுபிறப்பும் உள்ளுவர் தங்கள்
விழுமம் துடைத்தவர் நட்பு''[5]

---

1 மெய்கண்ட சாத்திரம், தருமபுர ஆதினம், சென்னை, சாது அச்சுக்கூடம் 1942, பக்கம், 195.
2 பதினோராந்திருமுறை, பக்கம், 12.
3 திருக்குறள், பக்கம், 153.
4 திருக்குறள், பக்கம், 26.
5 திருக்குறள், பக்கம், 42.

திருவள்ளுவரின் இக்குறட்பாக்களின் பொருளை எண்ண மானுடத்தின் ஏழு வேறு பிறவிகளையே கருத்தில் கொள்ள வேண்டும்.

இறைவனே உயிர்களின் வினைக்கீடாக, அவற்றை உடல் களில் பிணித்துப் பிறவிதோறும் அனுபவம் கைவரச் செய்வான். உயிர்கள் தரமாக உடல்களைச் சென்றடையா. அவ்வுயிர்களுக்கு வினைப்பயனை ஊட்டுபவனும் அவனே.

இச்சித்தாந்தக் கொள்கையை:

''இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான்; இறைவனே கண்டிறக்கம் செய்வான்''[1] என்ற இடத்தும்.

இருவினையும் போதற்கும் அவனருளே முன்னிற்க வேண்டும் என்ற கொள்கைக்குச் சான்றாக:

''கழற் கொண்ட சேவடி காணலுற்றார் தம்மைப் பேண
லுற்றார்
நிழற்கண்ட போழ்தத்து நில்லா வினை நிகர் ஏதுமின்றி
தழற் கொண்ட சோதிச் செம்மேனி எம்மானைக் கைமா
மலர் தூவித்
தொழக்கண்டு நிற்கிற்குமோ துன்னி நம்மடுந் தொல்
வினையே''

அம்மையாரின் கடவுள் கொள்கையில் தெளிவு இங்கு நோக்கத் தக்கது. பின்வந்த உமாபதி சிவாச்சாரியாரின் ''திருவருட்பயன்'' என்ற நூலும்

''எங்கும் எவையும் எரியுறு நீர் போல் ஏகம்
தங்கும் அவனே தனி''. — பாடல், 7[2]

நீரில் தங்கிய நெருப்புப்போல், புலப்படாது எவ்விடத்தும் ஒற்று மைப்பட்டு நிற்கும் முதல்வன் அப்பொருளுக்கு வேறாக நின்று அவை எய்துகின்ற மாறுதல்களைத் தான் எய்தாது செம்பொரு ளாய் நிற்பர், என்பது இப் பாட்டின் பொருள்.

அம்மையின் திருவந்தாதி:

''நூலறிவு பேசி நுழைவிலா தாதிரிக
நீலமணி மிடற்றின் நீர்மையே — மேலுவந்த
தெக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே யாம்''[3] இக்கருத்தோடொத்ததே

யாம் நூற் புலமையும் சாத்திர அறிவும் வாய்க்கப்பெற்றார். உண்மை காணாது, யானை கண்ட குருடர் போல இடறுவது எண்ணத்தக்கது.

---

1 பதினோராம் திருமுறை, பக்கம், 12.
2 மெய்கண்டசாத்திரம், பக்கம், 264
3 பதினோராந்திருமுறை, பக்கம், 17.

''நுண்ணறிவு வாய்க்கப்பெறாதார் தாம் கற்ற நூற்புலமை ஒன்றனையே கொண்டு தத்தமக்குத் தோன்றிய பலவற்றையும் அங்ஙனமே பேசித்திரிக'' என்கிறார்.

இதன் கருத்துப்பொருளை விரித்துக் காணில்—

நூல் ஊசியின் காதில் நுழைந்து பயன்பட இருப்பது. சாத்திர அறிவும் (நூலறிவு) உயிர் உணர்வை, ஐம்புலன் வழி சிதறி ஓடுவதைத் தடுத்து நிறுத்தி உள்ளே மெய்யுணர்வோடு பிணித்துச் செலுத்தவல்லதாம். ''காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே'' என்ற பட்டினத்தடிகளின் வாக்கும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

''அண்ணலைநாடிய ஆறுசமயமும்
விண்ணவராக மிகவும் விரும்பியே
முன்நின்றழிய முயன்றிலராதலான்
மண்ணின் றொழியும் வகையறியார்களே

திருமந்திரம் - புறச்சமய தூடணம்

என்ற திருமூலர் கருத்தும் இங்கு ஒப்ப நோக்கி இன்புறலாம். திருக்களிற்றுப்படியாரும் ''ஒன்றுரைத்த தொன்றுரையாச் சாத்திரங்கள் ஒன்றாக நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவால்''[1] என்றியம்பும்.

''அரனே உலகுக்கு தொன்று தொட்டு ஆதியானவன். அன்பால் தொழுவார்க்கு காண எளியன். அன்போடு முயல் வார்க்கு உள்ளொளி. மும்மூர்த்திகளுக்கும் அவனே தலைவன். முற்றும் உணர்ந்தவன். உயிர்களுக்கு உணர்த்துபவனும் அவனே. அவனே உயிர்களின் உணர்வாகவும் உள்ளான். உலகவடிவில் உள்ள பஞ்ச பூதங்கள், இவ்வுலகை உய்விக்கும் இரு சுடர்; உலகத்தில் உழன்று பயன் கொள்ளும் உயிர்கள் ஆகியவற்றோடு அவனேகலந்து ஒன்றாய், உடனாய், வேறாய் நிற்கும் அத்துவித நிலையன்'' என்பன அற்புதத்திருவந்தாதிப் பாடல்களின் கருத்து (பாடல் 20, 21),[2] இக்கருத்தை அத்துவிதப் பொருள் கூறும் சிவஞானசித்தியார் சுபக்கம் பாடல் பொருளோடு ஒப்பிடலாம்.

''உலகெலா மாகி வேறாய் உடனுமாம் ஒளியாய் ஓங்கி அலகிலா
உடல்கள் ஆன்மத்தாணையின் அணைந்து அமர்ந்து செல்வத்
தலைவனாய் இவற்றின் தன்மைத்தனக் கெய்தலின்றித் தானே
நிலவுசீர் அமலனாகி நின்றவன் நீங்காதெங்கும்''[3]

---

1 மெய்கண்டசாத்திரம். பக்கம் - 18.
2 பதினோராந்திருமுறை பக்கம் 17.
3 மெய்க்கண்ட சாத்திரம், பக்கம் 164.

உபதேசம், ஒழுக்கம் இரண்டையும் எண்ணி அம்மையார் இங்கு, மனத்தின் மடம், பேதைமை ஆகிய இரண்டையும் குறிப்பார். நெஞ்சுக்கு முடிந்த அறிவுரையாக:

''மடநெஞ்சே பேதாய், ஞானத்தால் (மெய்யுணர்வு) அல்லது அவன் திருவடிக்கண் சேரும் திருவை நீ பெறத்தான் ஆகுதியோ? அவன் திருதானும் ஞானத்திறத்தால் அடையப்படுவதாம், அடைந்தால் பற்றப்படுவதுமாம்''[1].

''உள்ளமே, அவன் அடிக்கமலம் எப்போதும் விரும்பி ஓதாய், அவன் திருவடி தரிசிக்கப் பெற்றபோது காலனை வென்றோம்; கடுநரகும் இல்லையாம், மேலை இருவினையும் அறுத்தோம்''[2]

''அவனைக்காணில் கண்ணாரக்கண்டும், கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தால் எண்ணியும் நான் இன்புறுவன்''[3]

''ஈசன் பொன்னடிக்கே நாமாலை சூட்டி, அன்பாய அடிக்கும் பூமாலை கொண்டு புனையும் அறிவு (ஞான) நெறியைப் பற்றினால் வினை என்னும் இருள் எவரைச் சுடும்? செஞ்சடையான் சேவடிக்கே ஆளாய் உரை மருவிஉய்ந்தோம்; ஆகவே இம்மைக்கும் அம்மைக்கும் எல்லாமாய் அமைந்தோம்.[4]

முடிவுரை: இங்ஙனம் அம்மையாரின் வாயிலாக சைவ சமயதத்துவங்களின், ஒரு முதிர்ந்த காட்சியை நாம் காண்கின்றோம். பின் வந்த ஏனைய அருள்பாடல்களெல்லாம் இவர் அடிச்சுவட்டைப் பின்பற்றின எனின் மிகையாகாது.

எனவே, சங்க இலக்கியகாலத்தில் அரும்பி இருந்த சைவ சமய தத்துவம் எடுத்துக்கொண்ட இக்காலப் பகுதியில் மலர்ந்து மணம் பரப்புகின்றது; தேவாரம் தொடங்கும் பக்தி இயக்க காலத்தில், காய்த்தும் கனிந்தும் பெரும்பயனளிக்கும் நிலையைக் காணலாம்.

மலரின் மலர்ச்சி, மணத்தைப் பரப்பும், நிறத்தால் உள்ளத்தைக் கவரும்; தேனைத்துளித்து இன்பத்தை நல்கும்.

தேன் தினைத்துணையாகத்தான் இருந்தாலும் அருந்தினார்க்கு சுவைபயந்து, நோய் போக்கும் மருந்தாம்.

எனவே, அம்மையாரின் பிரபந்தங்கள் சைவ சமயவளர்ச்சி வரலாற்றில் மலர்நிலை எனலாம்.

---

1 பதினோராந்திருமுறை, பக்கம், 19.
2 மேற்படி, பக்கம் 24.
3 மேற்படி, பக்கம் 25.
4 மேற்படி, பக்கம் 25; 26.

தொல்காப்பியரின் தெய்வக்கோட்பாடு

ஆ. சிவலிங்கனார்

தொடக்கம்

அகர் முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு[1]

என்பது திருவள்ளுவர் வாக்கு. உலகம் ஆதிபகவனை முதலாகக் கொண்டுளது; உலகத்தின் முதற் பொருள் ஆதிபகவன். ஆதி பகவன் என்பதற்குப் பலர் பலவாறு தத்தம் சமயத்துக்கு ஏற்பப் பொருள் கொள்ளினும் இங்கு நாம் தெய்வம் என்னும் பொதுப் பொருளைக் கொள்ளலாம்.

தெய்வம் உலகத்துக்கு முதற் பொருள் என்பது யாவரும் கூறுவது. ஆனால் தொல்காப்பியர் தெய்வத்தை முதற்பொருளாகக் கூறவில்லை. அவர்தம் முன்னோரும் கூறவில்லை.

நமக்குக் கிடைத்திருக்கும் நூல்களுள் பழமைவாய்ந்த முதல் நூல் தொல்காப்பியம். ஆதலின் முன்னோர் கருத்தாயினும் அதனைத் தொல்காப்பியர் கூறுதலின் அவர் கருத்தாகக்கொண்டு தெய்வம்பற்றிய அவர் கோட்பாடு யாது யாவை எனக் காணலாம்.

தொல்காப்பியர் மற்றவரைப்போலத் தெய்வத்தை முதற் பொருளாகக் கூறாமைக்குக் காரணம் என்ன?

தொல்காப்பியத்தின் நோக்கம்

தொல்காப்பியர் தம் காலத் தமிழனின் வாழ்க்கை நெறி முறைகளை நன்கு ஆராய்ந்து அவை பொதுவாக மனித இனத்துக்குப் பொருந்திவருவதையும் கண்டு அவற்றையே கூற நினைத்

---

[1] திருக்குறள் 1. சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1937.

தார். அதாவது மனிதனின் ஒழுகலாற்றையே கூறநினைத்தார். அவன் ஒழுக்கம் என்பது அவன் வாழ்க்கை. வாழ்க்கை அவனுடைய உரிமை. அவ்வுரிமையே அவன்பொருள். அதனால் தொல்காப்பியர் பொருளையே முதலில் கூற நினைத்திருக்க வேண்டும். பின் அப்பொருள் - அவ்வாழ்க்கை விலங்குவாழ்க்கை போலின்றி கருத்தைத் தெரிவிக்கும் பேச்சுடன் கூடியதாக இருத்தலின் பேச்சுபற்றி (சொல்பற்றி)க் கூற நினைத்தார். பேச்சுக்கு எழுத்துத் தேவையாதலின் பின் எழுத்து பற்றியும் கூற நினைத்தார். எனவே காரண காரியத் தொடர்பு பற்றி எழுத்து, சொல், பொருள் (வாழ்வு ஒழுக்கம்) என முறையே கூற நினைத்தார். அந்நினைப்பின் விளைவே எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என முப்பெரும்பிரிவாம் தொல்காப்பியத் தோற்றம்.

ஒரு நூல் மனிதனின் வாழ்வைப் பற்றியதாகத்தான் இருக்கவேண்டும் என்பது தமிழரின்-தமிழ் அறிந்த முன்னோரின் குறிக்கோளாகும். தொல்காப்பியர்க்கு முற்பட்டோரும் பிற்பட்டோரும் அக்கொள்கையினரே.

> ''எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே'? பொருளதிகாரம் பெறேமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம்''[1]

என இறையனார் களவியல் உரை கூறுவதையும் காணலாம். எனவே தொல்காப்பியத்தின் நோக்கம் மனிதவாழ்வுப் பொருளைக் கூறுவதேயாம். மனித வாழ்வையும் தமிழரின் வாழ்வையும் அடிப்படையாகக் கொண்டு கூறுவதாயிற்று.

தெய்வம் முதற் பொருள் இல்லை

தொல்காப்பியர் காலத்தும் முன்னும் வாழ்ந்த மனிதன் தமிழன் மலை, காடு, ஊர், கடல் பகுதிகளில் வாழ்ந்தான். அவன் வாழ்வு அவன் உரிமை. அதனால் அவன்வாழ்வு—அவன் ஒழுக்கம் அவன்பொருள் எனப்பட்டது. அப்பொருள் அவன் உரிமையாதலின் அது உரிப் பொருள் எனப்பட்டது. அவன் வாழ்வு தன்-தன் குடும்பம் பற்றியதாகவும், தன்னொடு பிறரையும் பற்றியதாகவும் அமைந்தது; தன்னைப்பற்றியது அகவாழ்வு என்றும், தன்னொடு பிறரைப்பற்றியது புறவாழ்வு என்றும் அவ்வாழ்வு இருவகையாயிற்று. அகவாழ்வு அகப் பொருள் எனப்பட்டது; புறவாழ்வு புறப் பொருள் எனப்பட்டது. அகவாழ்வின் விரிவே புறவாழ்வு ஆதலின் அகப்பொருள் முதலில் சிறப்பாகக்

---

[1] இறையனார் களவியல் சூத்திரம், 1. உரை. சென்னை சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1953.

கருதப்பட்டது. அடுத்துப் புறப்பொருள் கருதப்பட்டது. அந்த அடிப்படையில் அகவாழ்வை அகப் பொருளைக் கூறும்போது அவன் வாழ்வினை உரிப் பொருள் என்றனர் முன்னோர். தொல் காப்பியரும் அவ்வாறே கூறினார்.

தமிழனின் வாழ்வு தான் தோன்றிவளர்ந்து வந்த நிலத்தை அடிப்படையாகக்கொண்டிருந்தது. அன்றியும் காலத்தையும் சிறப்பாகக் கொண்டிருந்தது. அதனால் வாழ்வுப் பொருளாகிய உரிப்பொருளுக்கு நிலமும் பொழுதும் முதன்மையாயின. எனவே அவை முதற் பொருள் எனப்பட்டன.

தெய்வம். உலகைத் தோற்றுவிக்கும் முதன்மைப்பொருளாக ஆகலாம். ஆனால் மனிதன் வாழ்வுக்கு அவன் முயற்சிக்கு-அவன் இன்பத்துக்கு, காணப்படும் நிலையில்-வெளிப்படையில் முதற் பொருளாக இருப்பன நிலமும் பொழுதுமேயாம். அதனால் அக வாழ்வுக்கு முதற் பொருள் நிலமும் பொழுதுமாயின. அதனால் தொல்காப்பியர்

முதல்எனப் படுவது நிலம்பொழுது இரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே[1]

என்றார்.

தெய்வம் கருப்பொருள்

மனிதனின் வாழ்வுக்கு இன்றியமையாதது உணவு. அவ் வுணவு பெற்று நிறை வெய்திய பின்னர் அவன் வாழ்வு பல்வகை நாகரிகம் பெறுகிறது. அவ்வுணவுக்கும் நாகரிகத்துக்கும் துணை புரிவன அவனைச்சுற்றியுள்ள மரம், புள், விலங்கு முதலியன. அவையாவும் வாழ்வுக்குக் கருவாக (காரணமாக) அமைதலின் கருப்பொருள் எனப்பட்டன. கருப் பொருள்யாவும் மனிதனின் அனுபவப் பொருள்கள்—இன்பப் பொருள்கள்.

''தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப''[2]

என்றார் தொல்காப்பியர். மனிதனின் துய்ப்புப் பொருள்களாகிய உணவு முதலியவற்றுடன் தெய்வத்தைக் கூறினார் ஆசிரியர். தெய்வத்தை முதலாவதாகவும் கூறினார். மனிதனின் பொறி புலன்களால் நுகரப்படும் உணவு முதலியவற்றோடு பொறிபுலன் களுக்கு அப்பாற்பட்டதாகக் கூறப்படும் தெய்வத்தைக் கூறினார்.

---

[1] தொல்காப்பியம் — பொருளதிகாரம் — அகத்திணையியல் 4. தொல்காப்பிய மூலம், சென்னை, சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1967.

[2] மேற்படி, 18.

அதனால் தெய்வமும் பொறிபுலன்களால் நுகரப்படுவதாகவே அமையும்; அமைய வேண்டும் என்னும் கொள்கையினர் தொல் காப்பியர் எனக்கருதலாம்.

டாக்டர் வை. இரத்தினசபாபதி கூறுவதாவது:

''கடவுளைப் பற்றிய கருத்து எதுவாய் இருப்பினும் அது மனிதனின் அனுபவப் பொருளாக அமைந்து அனுபவிக்கப் பெற்ற காரணத்தால் தோன்றப் பெறுவது என்பதே தொல் காப்பியரின் உள்ளக் கிடக்கை. அனுமானம், ஆகமம் போன்ற அளவை முறைகளால் உண்டு எனக் கருதப்படும் பொருளன்று கடவுள். உணவு, விலங்கு, மரம் பறவை, இசைக்கருவிகளைப் போன்றவை அவ்வந்நிலத்துக் கேற்பவும், காலத்துக் கேற்பவும் மக்களின் அனுபவ நிலைக்கு ஒத்ததாக அறிந்து, துய்த்து அமைதி கொள்ளுதற்குரியவை. அவ்வாறே தெய்வமும் என்று குறிப்பிடுகிறார், தொல்காப் பியர்[1]

தெய்வம் பிறகருப்பொருள்போல நுகரப்படும் பொருளாமாறு பின்னர்க் காட்டப்படும்.

தெய்வவடிவம்

தெய்வம் நுகர்பொருளாகிவிட்டபடியால் உணவு முதலியன நிலவேறுபாடுகளுக்கேற்ப வேறுபட்டிருத்தல் போலத் தெய்வமும் நிலங்களுக்கேற்பவேறுபட்ட பெயரும் வடிவமும் உடையதாயிற்று.

குறிஞ்சிக்கு ஐவன நெல்லும் தினையும், முல்லைக்கு வரகும் சாமையும், மருதத்துக்கு செந்நெல்லும் வெண்ணெல்லும், நெய் தலுக்கு மீன் முதலியவும் உணவுப் பொருள்களாக வேறு பட்டிருத் தல் போலக் குறிஞ்சிக்கு முருகனாகவும் முல்லைக்கு மாயோனாக வும், மருதத்துக்கு வேந்தனாகவும், நெய்தலுக்கு வருணனாகவும் தெய்வம் வேறுபட்டபெயரும் வடிவமும் கொண்டதாகும்.

''மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்''[2]

என்றார் தொல்காப்பியர்.

''மற்றைய கருப்பொருள்கள் வெளிப்படையில் கண்ணுக்குப்

---

[1] திருமுறைத் தெளிவே சிவஞான போதம், டாக்டர் வை. இரத்தின சபாபதி. சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, 1981, ப. 22.

[2] தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல் 5:1-4

புலனாகத் தோன்றுவன. ஐம்புலனுக்கும் நுகர்ச்சிப் பொருளாக அமைவன. ஆனால் தெய்வம். தோன்றி வடிவம் காட்டவில்லை. அவ்வந்நிலத்து மக்கள் தாமே ஏற்றுக் கொண்ட பெயருடையதாயிற்று. அதனால் நிலங்கள் தோறும் வேறுபட்டிருக்கும் உணவு முதலிய கருப்பொருள்களை விவரிக்காமல் தெய்வத்தை மட்டில் நிலங்களுக்குரியனவாக வேறு வேறு விவரித்தார். தனக்கென நிலமில்லாத பாவைக்கு அவ்வந்நிலத் தெய்வமே தெய்வமாக அமைதலோடு கொற்றவை சிறப்புத் தெய்வம் ஆயிற்று''[1]

தெய்வ இலக்கணம்

தெய்வத்தின் இலக்கணம் இன்னது எனத் தொல்காப்பியர் வரையறுத்துக் கூறவில்லையாயினும் அவர் தெய்வம்பற்றிக் கூறிய இடங்களைக் கொண்டு ஒருவாறு தெளிவாகவே தெய்வ இலக்கணம் என்ன என்பதையுணரலாம்.

தெய்வம் பற்றிய இலக்கணம் கூறவில்லை; ஆனால் தெய்வம் பற்றிய சொல் இலக்கணம் கூறியுள்ளார்.

''பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே
உயர்திணை மருங்கின் பால்பிரிந் திசைக்கும்''[2]

இச்சூத்திரத்தில் தெய்வத்தையுணர்ந்தும் சொல்பற்றிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது. தெய்வத்தை உணர்த்தும் சொல் தேவு என்பது. அது உயர்திணைக்குரியது; ஆனால் தேவு வந்தது என அஃறிணை வினையால்தான் முடிக்கப்படும். ஏனெனின் உயர்திணை ஆண் பெண் பால்களில் ஒன்றையுணர்த்தும் இறுதி நிலை எழுத்து அதில் இல்லை. இக்கருத்தை காலம், உலகம் ..... பால்வரை தெய்வம் ..... பால்பிரிந்திசையா உயர்திணை மேன''[3] என்னும் சூத்திரத்தில் கூறி, அத்தேவு என்பது உயர்திணை வினையால் முடிக்கப்பட வேண்டின் தன் இறுதியில் ஓர் மாற்றம் ஏற்பட்ட பிறகே முடிக்கப்படும். தேவு என்பது தேவன் என உயர்திணை ஆண்பால் சொல்லாகத் திரிந்தோ தேவி என உயர்திணைப்பெண்பாற் சொல்லாகத் திரிந்தோதான் தேவன் வந்தான், தேவி வந்தாள் என உயர்திணை வினையான் முடிக்கப்படும்.

---

1 தெய்வம், ஆ. சிவலிங்கனார், மயிலம், திருப்புகழ் திருப்படி விழா வெள்ளிவிழா மலர், 1980.

2 தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், 4.

3 மேற்படி 58:2.

மேற் சூத்திரத்தில் ''உயர் திணை மருங்கின் பால்பிரிந்திசைக்கும்'' என்றது காண்க.

தெய்வம் என்பது ஒரு பொருள். அதற்குப் பால் உணர்த்தும் ஈறு கூறப்படாமையின் அது எல்லாவுயிர்க்கும் பொதுவானது என்பதும், அது உயர்திணையில் தேவன், தேவி என்பன போல ஈறு திரிந்து வரும் என்பதால், அது தன் நிலையினின்றும் வடிவு வேறுபட்டு உலகிடை வரும் என்பதும், அவ்வாறு வரும்போது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலங்களிலும், பாலை நிலத்தும் சேயோன், மாயோன், வேந்தன், கொற்றவை ஆகத் தெய்வப் பெயர்கள் கூறப்பட்டிருத்தலின் அத்தெய்வம் நிலங்களுக்கேற்ப-மக்களின் மன நிலைகளுக்கேற்பப் பல வடிவு கொள்ளும் என்பதும் முதற்பொருளில் கூறப்படாது கருப்பொருள்களுள் ஒன்றாகக் கூறப்பட்டிருத்தலின் தெய்வம் மக்களின் அனுபவப்பொருள் — நுகரப்படும் பொருள் என்பதும் தொல்காப்பியரின் கோட்பாடு என்று கருதலாம்.

தெய்வம் அனுபவப் பொருளாமாறு

இனி அத்தெய்வம் மனிதனுக்கு எவ்வெவ்வாறு அனுபவப் பொருளாகின்றது என்பது பற்றித் தொல்காப்பியர் கூறியன காணலாம்.

1. **காத்தல்**

''வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தும்''[1]

என்ற சூத்திரத்தால் தெய்வமானது மனிதனின் புறம்பாக அவனைச் சுற்றி வந்துகொண்டேயிருப்பது என்றும், காப்பது என்றும் கூறுகிறார்.

தெய்வம் மனிதன் உடம்பில்—உயிரில் நிறைந்திருப்பது என்றாலும் அவனைக் காக்கப் புறம்புறமாகவும் சுற்றி நிற்பது என்னும் தொல்காப்பியர் கருத்தை, மணிவாசகப் பெருந்தகைப் பாடல் மூலமாகவும் அறியலாம்.

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே

---

1 தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல் 109.

யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.[1]

என்பது மணிவாசகர்பாடல். தொல்காப்பியர் ''வழிபடு தெய்வம் நிற்புறங்காப்ப'' என்னும் தொடரால் ஒருவன் தெய்வ வழி பாடு கொள்ள வேண்டும் என்பதையும், அத்தெய்வம் அவனைப் புறம் நின்று காக்கும் என்பதையும் உணர்த்தியதன் மூலம் உலகில் மனிதனின் புறவாழ்வு பற்றிய இலக்கணம் அமைத்தார். அவர் மனிதனின் உலகவாழ்வு இலக்கணம் அமைத்தாராதலின் 'புறம் காப்ப' என்ற அளவில் சொல்லிச் செல்கிறார். மணிவாசகர் தம் அகவாழ்வோடு வீடுபேற்றை விரும்பியவராதலின் சிவன் தன் கடமையையாற்றப் புறம்புறம் திரிந்தாலும் தமது கடமை யாகச் சிவனைச் சிக்கெனப் பிடித்ததாகக் கூறுகிறார்.

2. அச்சுறுத்தல்

தன்னை வழிபடுவோரை மணிவாசகர் கூறியவாறுபோலப் புறம்புறம் திரிந்து உலப்பிலா ஆனந்தமான தேனினைச் சொரிந்து காத்தல் மட்டுமன்றித் தீயன புரிவோரைக் கடிதலும் செய்வது தெய்வத்தின் செயலாம்.

''மன்ற மராத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப''[2]

என வருவது காணலாம். தொல்காப்பியர், தெய்வம் அஞ்சல் (மெய்ப். 24) என்னும் மெய்ப்பாடு கூறுவதன் மூலம் தெய்வம் அச்சுறுத்தும் என்பதைக் கூறுகிறார். இல்லறத்து ஒழுகுவார் அல்லது இல்லறத்துக்கு முன்னதாகிய களவொழுக்கத்து ஒழுகு வார் பொய்ச்சூளுரை செய்வரேல் அவரைத் தெய்வம் அச்சுறுத் தும். அதனால் பொய்ச்சூளுரை செய்தோர்க்காக அவரைச் சார்ந்தோர் (தோழி, தலைவி) தெய்வத்துக்கு அஞ்சுதல் உண்டு. அவ்வச்சம் காரணமாகத் தோன்றும் உணர்ச்சி புறத்தே புலப்படு வதைத் தெய்வம் அஞ்சல் என்னும் மெய்ப்பாடாகக் கூறுகிறார். தொல்காப்பியர்.

3. பரிந்துரையேற்றல்

தெய்வம் தன்னை வழிபடுவோர்க்குப் புறம்புறம் திரிந்து காப்பதுமட்டுமன்றித் தன்னை வழிபடுவோர் வேண்டுகோளால் பிறர்க்கும் நன்மை புரியும். பிறர் துயர் துடைக்க வேண்டித்

---

[1] திருவாசகம், பிடித்தபத்து, 9. திருவாவடுதுறை. திருவாவடு துறையாதீன வெளியீடு, 1971.

[2] குறுந்தொகை. 87. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டெட், 1981.

தெய்வத்தை வழிபடுதல் என்றும் உள்ள ஓர் வழக்கம். பரிந்துரை யேற்றும் நன்மை புரிவது தெய்வம்.

தலைவனும் தலைவியும் உடன்போயினாராகத் தோழி மூலம்அதனையறிந்த செவிலித்தாய் நற்றாய்க்கு உடனே அதனைத் தெரியப்படுத்தாமல், உடன்போன இருவருக்கும் யாதோர் தீங்கும் நேராமல் இருக்க வேண்டித் தெய்வத்தை வணங்குவாள், வாழ்த்துவாள். அவ்வாழ்த்துதலை – வேண்டு கோளை ஏற்றுத் தெய்வம் உடன் போனவர்க்குத் துணை நிற்கும். இதனைத் தொல் காப்பியர் தெய்வம் வாழ்த்துதல்[1] என்று அமைக்கிறார்.

4. வெளிப்படுதல்

தெய்வம் பேரொளியுடன் கூடிய வடிவுடையது என்பர். ''சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே''[2] என்றெல்லாம் கூறுவர். அது வெளிப்பட வருதல் அரிது. அது, மனிதருள் முத்தியடைதற் குரிய பிற உயிரை அடைவதற்குரிய ஒருவராகிய குருவுடம்பிலும், இறைவனடியார் உடம்பிலும் கலந்தருளி உயிர்களுக்கு அருள் செய்யும் என்பது சைவசித்தாந்த சாத்திரம். சிவன் தானே தன் நினைவு மாத்திரையில் மனிதவுருவில் வருவான் என்பது வீர சைவசித்தாந்தம். அல்லமாப்பிரபு அவ்வாறு வந்தவர். தொல் காப்பியத்தில் அக்கருத்தமைந்ததுண்டாஎனில் இல்லை. ஆனால் தெய்வம் ஒருவன் மூலம் வெளிப்படுதல் உண்டு என்றும், அது மக்களுக்கு நோய்க்காரணத்தை அறியப்படுத்தும் என்றும் தொல் காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.

நோயைத் தீர்ப்பதேயன்றி நோய்க்காரணத்தை அறிவிப்பது தெய்வத்தின் தொழிலாகும். இத்தொழில் முருகன் மேல் ஏற்றிச் சொல்லப்பட்டது பழங்காலத்தில். முருகன் கைப்படை வேல். அது அறிவாகக் குறிக்கப்படும். அப்படையைக் கையில் வைத்திருப்பவனை வேலன் என்பர். அவனிடம் ஆவேசித்து முருகன் அருளுரை வழங்குவன் என்பது மரபு.

வேலன் கையில் வேலை ஏந்திக் கொண்டு ஓர் இடத்தில் முருகனை நினைந்து நிற்க, முருகன் அவனுள் தோன்றி அவன் வாய்மொழிமூலம் மக்கள் வேண்டுவனவற்றை – நன்மை தீமை களை அறிவிப்பன். அதுபோது வேல் ஏந்திய வேலன் தன் உணர்ச்சி யில்லாமலே வேலைத் திரித்து ஆடிக் கொண்டிருப்பன். அதனால் அவனை வேலன் என்ற சிறப்புப் பெயரால் அழைப்பர். அவன் ஆட்டத்தை வெறியாட்டு என்ற பெயரால் அழைப்பர். அந்த வேலன் அவன் வழிவரும் வேலன் என வழிவழியாக வெறியாட்

---

1 தொல்காப்பியம், பொருளதிகாரம் - களவியல் 24:7.

2 திருவாசகம், அருட்பத்து, 1.

டயர்தல் உண்டு. வெறியாட்டம் முருகன் கோயிலின் ஒரிடத்தி லேயே நடைபெறும். வெறியாடிப் பலன் சொல்லும் இச்செயலை இக்காலத்தில் குறிசொல்லுதல் என்றும் கூறுவர்.

குறத்தி கூறுவது குறி. குறத்தியும் எதிர்காலப் பலனும் நோய்தீர்க்கும் வழியும் ஏதோ ஓர் ஆற்றல் கொண்டு கூறுவாள். அதனால் குறி என்பது வேலன் கூற்றுக்கும் உரிய தாயிற்று.

ஒருபெண் — பருவப் பெண் வழக்கத்துக்கு மாறாகத் தன் தாயிடம் — மற்றைத் தோழியரிடம் நடந்துகொள்வாளேயானால் அதாவது தாயின் பக்கத்தில் படுக்காமலும், உணவு சரிவர உண் ணாமலும், தோழியர் உடனுறைவையும் கொள்ளாமலும் எப் போதும் தனிமையையே விரும்பி இருப்பாளேயானால், அதை ஒரு நோய் எனக் கொண்டு வேலனிடம் அதன் காரணத்தைத் தாய் வினவுவாள். அவன் அதற்கு அவள் கொண்டது காதல் என்றோ அல்லது பிற காரணங்களோ கூறுவான். அவ்வேலனைத் தொல்காப்பியர், ''வெறியறி சிறப்பின் வெல்வாய் வேலன்[1] என்றும், அவன் ஆட்டத்தைக் ''காந்தள்''[2] என்றும் கூறுகிறார். இது கூறுவதால் தொல்காப்பியர்க்குத் தெய்வம் மனிதன் மூலம் வெளிப்பட்டுப் பலன் தரும் என்ற கொள்கையுண்டு எனத் தெளிய லாம்.

5. விதிவகுத்தல்

மனிதன் செய்யும் நல்வினை தீவினைகளின் பயனை அனுப விக்கத்தேயாக வேண்டும். அவ்வினைகளை முறையே அனுபவிக்க விதிப்பது தெய்வம். பால் என்பது பகுதி; அதாவது வினைக்கூறு. அதை அனுபவிக்குமாறு விதித்தலின் தெய்வம் பால் வரைதெய்வம் எனப்படும். தொல்காப்பியரும் தெய்வமானது வினைப்பயனை உயிர்கள் அனுபவிக்கச் செய்யும் என்னும் கோட்பாட்டினை யுடையவர் என்பதை அவர் தெய்வத்தைப் 'பால்வரை தெய்வம்[3] என்பதால் அறியலாம்.

6. மக்களுள் கலந்திருத்தல்

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன்உன்

---

[1] தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல் 5:1, 2.
[2] மேற்படி 5:2.
[3] தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம் 58:2.

அடியார் நடுவுள் இருக்கும் அரு
ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே[1]

என மணிவாசகப் பெருமான் சிவபிரானை நோக்கி வேண்டு கிறார். இறைவன் இறைவியோர் தம் இடத்தில் கலந்திருப்பதாக மணிவாசகர் குறிப்பிடுகிறார். தெய்வம் மக்களுள் ஒரு பொரு ளாகவே கலந்திருப்பது. தெய்வத்துக்குரிய வேறு பெயர்களுள் ஒன்று கடவுள் என்பது.

கடவுள் ஒன்றாயினும் மாயோன், சேயோன், வேந்தன், வருணன் எனப் பல வடிவில் வருதலின், மனிதர்போலக் காமம் (விருப்பம்) கொள்ளுதலும் உண்டு. கடவுள் ஆணினைக் கடவுட் பெண்டிர் விரும்புதலும், அவனை மானிடப் பெண்டிர் விரும்புதலும், கடவுள் ஆண் மானிடப் பெண்டிரை விரும்புதலும் உண்டு.இவ்வகையில் செய்யுட்கள் தமிழில் உண்டு. கடவுள் ஆணி னைக் கடவுட் பெண் விரும்புதலும் — கடவுட் பெண்ணைக் கடவுள் ஆண் விரும்புதலும் புராணங்களில் காணப்படுவன. முருகனாகிய கடவுள் வள்ளி என்ற மானிடப் பெண்ணை விரும் பியதும், ஆண்டாளாகிய மானிடப் பெண் கண்ணனாகிய கட வுளை விரும்பியதும் கதைகளிற் கேட்டுவருகிறோம். தொல் காப்பியர்,

காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்[2]

என்றார். எனவே தெய்வம் மனிதருள் மனிதனாகவும் வாழும் என்னும் கோட்பாட்டினர் தொல்காப்பியர் எனக் கருதலாம்.

இக்காலத்தும் சிலவூர்களில் - முருகன் கோயில் உள்ள ஊர் களில் — அதிலும் முருகனைத் தம் வழிபடு தெய்வமாக — குல தெய்வமாகக் கொண்டுள்ளோர் சேர்ந்து வாழும் ஊர்களில் முருகன்கோயில் தனித்து இராமல், அக்கோயிலையும் ஒரு வீடாகக் கருதும்படி அமைந்திருத்தலைக் காணலாம். கோயிலை ஒட்டியே வல இடப்பக்கங்களில் வீடுகள் அமைந்து — வீடுகள் எண்ணப்படும்போது கோயிலும் ஒரு வீடுபோல் எண்ணுமாறு அமைந்திருப்பதைக் காணலாம்.

7. உவமப் பொருளாதல்

இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை நக்கீரர் சிற் றத்தால் சிவனையும், வலியால் பலராமனையும், பகையை வெல்வ

---

1 திருவாசகம், கோயில் மூத்த திருப்பதிகம், 1.

2 தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், 28

தால் திருமாலையும், நினைத்ததை முடிப்பதால் முருகனையும் ஒத்திருந்தானாகப் பாடியுள்ளார்.

''கூற்றொத் தீயே மாற்றரும் சீற்றம்
வலியொத் தீயே வாலி யோனைப்
புகழொத் தீயே இகழுந ரடுநனை
முருகொத் தீயே முன்னியது முடித்தலின்''[1]

என்பன அவர் பாடல்வரிகள். இவ்வாறு ஒப்புமைப்படுத்திப் பாடுவதைப் பூவைநிலை என்பர் தொல்காப்பியர்.

''மாயேன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலை''[2]

என்பர் ஆசிரியர். மாயோனைக் குறித்துக் கூறினாலும் பிற கடவுளரை ஒப்பிடுவதும் பூவை நிலை யெனக் கொள்ளல் வேண்டும். தெய்வத்தை மானிடர்க்கு ஒப்பிடலாம் என்பதும் ஆசிரியர் கோட்பாடு எனத் தெரிகிறது.

8. விருப்பம் நிறைவேற்றல்

கடவுளுக்கு அமரன் என்ற பெயரும் உண்டு. தொல்காப்பியர் அமரர் என்ற சொல்லை ஆண்டுள்ளார்[3] அமர்தல் என்பதற்கு மேவல் எனப் பொருள் உரைத்தார்[4] மேவல் என்பதற்குப் 'பொருந்துதல்', ,விரும்புதல்' என்னும் பொருள் உண்டு. ''நம்பும் மேவும் நசையாகும்மே''[5] என்று கூறிய அவர், தாமே மேவுதல் என்பதற்கு விரும்புதல் என்ற பொருளினை,

''எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்''[6] என்னும் சூத்திரத்தில் அமைத்தாளுகின்றார். அமர் என்பதற்கு விருப்பம் என்பது பொருளாதலின், அமரர் என்பதற்கு,'' விருப்பத்தை நிறைவேற்றுபவர்'' எனப் பொருள் கொள்ள வேண்டும். அமரர்-தேவர்; அவர் இருக்குமிடம் வானம் ஆதலின் அவர் வானோர் எனவும் கூறப்படுவர்.[7]

இல்லறத்தில் தலைவி குழந்தைப்பேறு எய்தினாளாக அது குறித்துத் தெய்வத்துக்குச் சிறப்புச் செய்தல் உண்டு. இது

---

[1] புறநானூறு, சென்னை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிமிடெட், 1981. பாடல் 56

[2] தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல் 5: 9, 10.

[3] மேற்படி 26:1.

[4] தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல் 82.

[5] மேற்படி 31.

[6] தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், 29.

[7] மேற்படி, கற்பியல், 5:13.

நீண்ட காலம் புதல்வர்ப் பேறு இல்லாமையால் தெய்வத்தை வேண்டிப் பெற்றமை குறித்துச் செய்யும் சிறப்பு.

புதல்வரைப் பயந்த புனிறுதீர் பொழுதின்
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி

ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும் செய்பெருஞ் சிறப்பு[1] என்பர் ஆசிரியர். அமரர்ச்சுட்டிச் செய்தலாவது, புதல்வர்ப் பேறு வேண்டிய தமது விருப்பத்தை வாய்க்கச் செய்தது சுட்டிச் (குறித்துச்) செய்வதாகும்.

தெய்வம் என்பது அமரர் என்னும் பெயருக்கேற்பத் தன்னை நோக்கி நேர்ந்து கொள்வார்க்கு அவர் எண்ணத்தை நிறை வேற்றும். போர்வீரர் தன்னை வேண்டி நேர்த்திக்கடன் செலுத்துவதாகக் கூறிப் போர்க்குச் செல்வாராயின் அவர்க்குக் கொற்றவை என்னும் பெண் தெய்வம் வெற்றிதரும் என்பது பண்டையோர் கொள்கை. தொல்காப்பியரும் அக் கோட்பாட்டை உடன் பட்டவர் என்பதற்கு அவர்,' கொற்றவை நிலை[2] கூறியதே சான்றாம்.

தெய்வ இலக்கணம் – தொகுப்பு

இதுவரை கூறியவற்றிலிருந்து,

1. தெய்வம் ஒருபொருள்
2. அது மாயோன், சேயோன் எனப் பல வடிவம் கொள்ளும்.
3. வழிபடுவாரைப் புறம் நின்று காக்கும்
4. பிறர்க்குத் தீங்கு செய்வாரை அச்சுறுத்தும்
5. வேண்டுவார்க்குத் துணை நிற்கும்
6. நோயைத் தீர்க்கும்
7. உயிர்களுக்கு விதிகளை வகுக்கும்
8. மக்களுள் கலந்துநிற்கும்
9. மக்களுக்கு உவமமாகச் சிறக்கும்
10. மக்கள் விருப்பங்களை நிறைவேற்றும் என்பன அறியலாம்.

மனிதன் – தெய்வம்

தெய்வத்தை மக்களின் அனுபவப் பொருளாகக் காட்டிய தொல்காப்பியர், மக்களைத் தெய்வமாகக் காட்டியதும் உண்டு. போரில் வீரம்காட்டி விழுப்புண் எய்தி இறந்த வீரனுக்குக் கல் எடுத்து வழிபடுதலைக் கூறியுள்ளார். இறந்த வீரனுக்குக் கல்லை

---

[1] மேற்படி, கற்பியல் 5:27-30.
[2] மேற்படி, புறத்திணையியல் 4:2.

ஆராய்ந்து கொள்ளுதலும், அதை நீர்ப்படுத்தலும், ஓரிடத்து நடுதலும், அதற்குக் கோயில் எடுத்தலும், வாழ்த்துதலும் - பண்டையோர் வழக்கு.

வழிபாட்டுக்காகக் கல்லைத் தேர்ந்தெடுத்து, அதனை வேற்று வேந்தர் ஆற்றுநீரில் கழுவிப் பின்னர்த் தன்னாட்டில் நட்டுக் கோயில் அமைத்து வழிபடுதலைப் பண்டைத் தமிழரசர் தம் வெற்றிக்கறிகுறியாகக் கொண்டிருந்தனர். இதற்குச் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுக்க இமயம் சென்று கல் எடுத்துக் கங்கையில் நீர்ப்படுத்துத் தன் நாட்டில் வைத்துக் கோயில் எடுத்ததைச் சான்றாகக் காணலாம். வீரனுக்குக் கோயில் எடுக்கும் வழக்கினைத் தொல்காப்பியர்,

'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபிற் பெரும்படை வாழ்த்தல் என்று
இரு மூன்று மரபிற் கல்''[1]

எனக் கூறுகிறார்.

புதியதாகச் சிலை வடித்துக் கோயில் எடுக்கும்போது புதிய சிலையைக் கோயிலில் நாட்டுதற்கு முன்னர் நீரில் மூழ்க வைப் பதைக் காண்கிறோம். இவ்வழக்குத் தமிழரின் 'நீர்ப்படை' என மேலே கண்ட வழக்கே யாகும். பிற்காலத்தில் கும்பாபிடேக விதிகளை அமைத்தவர்கள் தமிழரின் வழிபாட்டு முறைகளையே பெரிதும் மேற்கொண்டவர்களாதலின் நீர்ப்படைச் செயலையும் அதன் சிறப்புநோக்கி விடாது அமைத்தனர். இதனால் தொல் காப்பியர்க்கு மனிதனும் தெய்வமாகலாம் என்னும் கோட் பாடுண்டு என்பதும், நீராட்டு முதலிய தெய்வ வழிபாட்டுச் செயல்களும் உடன்பாடே என்பதும் அறியலாம்.

---

[1] மேற்படி, புறத்திணையியல் 5:19-21.

திரு வி. க. வும் மார்க்ஸீயமும்

தா. வே. வீராசாமி

இந்த நூற்றாண்டில் தோன்றிய பல தத்துவங்கள் பல நாடுகளில் தத்தம் செல்வாக்கைப் பரப்பின. ஆயின் சென்ற நூற்றாண்டில் தோன்றிய மார்க்ஸீயம் உலகெங்கும் தன் செல்வாக்கைச் செலுத்தி வருகிறது. மார்க்ஸின் (1818-1883) கருத்துக்களின் முழுத் தொகுப்பு முறையே மார்க்ஸீயம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மூன்று முக்கியமான கோட்பாடுகள் இருந்தன என வி. இ. லெனின் குறிப்பிடுவார். அவையாவன ஜெர்மன் முதுபெரும் தத்துவஞானம்; ஆங்கில முதுபெரும் அரசியல் பொருளாதாரம்; பொதுவாகப் பிரஞ்சுப் புரட்சிப் போதனைகள் என்பனவாம். இம்மூன்று தத்துவப் போக்குகளையும் தொடர்ந்து ஆராய்ந்து அவற்றிற்கு முழுவடிவம் அளித்த மேதைதான் காரல் மார்க்ஸ் என்பர்.[1]

இக்கருத்துக்கள் யாவும் சேர்ந்து புதிய காலத்திற்குரிய பொருள் முதல் வாதமாகவும், புதிய காலத்திற்குகந்த விஞ்ஞான சோஷலிஸமாகவும் அமைந்துள்ளன. இவையிரண்டின் அடிப்படையில் உலகின் நாகரிக நாடுகளிலெல்லாம் இருக்கிற தொழிலாளர் இயக்கத்தின் தத்துவமாகவும், வேலைத் திட்டமாகவும் திகழ்கின்றன.

இத்தகைய சிறப்புப் பெற்ற தத்துவத்தை உணர்ந்தவராகத் தமிழறிஞர் திரு. வி. கலியாண சுந்தரனார் (திரு. வி. க.) (1883-1953) விளங்கினார். மார்க்ஸீயத்தின் உயிர் நாடி

---

[1] மார்க்ஸையும் ஏங்கெல்ஸையும் பற்றிய நினைவுக்குறிப்புகள், (மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகம், ஆண்டு இல்லை) ப. 42.

பொருள்[1] என்பதை உணர்ந்திருந்தார். தொழிலாளர் மேடை களில் முப்பத்தைந்து ஆண்டுகட்கு மேலாகப் பேசிவந்தவர் அவர். அவர் பேசியதை நூல்வடிவமாக்கினால் அவை உயிருடன் நாட்டில் உலவுமா என அவரே ஐயுற்றதுண்டு.[2] எனினும் தன் வாழ்க்கையைப் பெரிதும் கவர்ந்தது தொழிலாளர் இயக்கம் எனவே அவர் குறிப்பிடுகிறார். திலகர் தமிழகத்திற்கு வந்த போது (17, 18-12-1919) மார்க்கிஸம் பற்றித் திரு. வி. க. அவரிடம் தொட்டுக் காட்டிய போது 'மார்க்கிஸத்தின் மீது இந்தியா நாட்டம் செலுத்தும் காலம் வரலாம், அதற்குள் மார்க் கிஸம் பலவித மாறுதல் அடையும். இந்தியா எதையும் தனது இயற்கையாக்கியே ஏற்கும் பண்புடையது'[3] எனக் குறித்த சொற்கள் அவர் உள்ளத்தில் நன்கு பதிந்தன.

மார்க்ஸ் எழுதிய 'மூலதனம்' என்ற நூல் நமக்கு அற்புத மான பலமும் உன்னதமான ஞானமும் கொண்ட அவரது மனத்தைத் திறந்து காட்டுகிறது என்பர் போல் லபார்க்.[4] இதை உணர்ந்தவர் போல் திரு. வி. க. மூலதனத்தைப் பதினேழு முறை படித்ததாகக் கூறியுள்ளார்[5]

திரு. வி. க.வின் தொடக்க கால வாழ்வு சைவசமயப் பணியில் ஈடுபட்டது. அச்சமயத்துடன் மட்டும் அது அமைந்து விட வில்லை. வைணவம், சைனம், பௌத்தம், கிருத்துவம், இஸ்லாம் போன்ற பல சமய ஆராய்ச்சிப் பேறு அவர்க்குக் கிடைத்தது. அவ்வாராய்ச்சியின் விளைவாக அவருள்ளத்தில் பொதுமை உணர்ச்சியே உண்டாயிற்று. சமயங்களின் அடிப் படையாயுள்ள பொதுமைச் சமரசம் ஏன் உலகில் பரவவில்லை என்று எண்ணிப் பார்த்து விளங்காமல் மயங்கினார்.

தொடக்க காலத்தில் சச்சிதானந்தம் பிள்ளை வாயிலாக மேல்நாட்டுத் தத்துவ அறிவைப் பெற்ற திரு. வி. க. டார்வின் கண்ட அறிவியல் உண்மைகளைச் சிங்காரவேலு செட்டியார் அறிவுறுத்தப் பயன் பெற்றார். சிங்காரவேலு செட்டியார் மார்க்ஸ் வரலாறு, பூமியும் பொருளாதாரமும், பொதுவுடைமை

---

[1] திரு வி. க. பொருளும் அருளும் அல்லது மார்க்ஸீயமும் காந்தியமும், (சென்னை, சாது அச்சுக் கூடம், 1959) ப. iii

[2] திரு வி. க., திரு வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் I (சென்னை, கழகம், 1969) ப. 141.

[3] மேற்படி. ப. 317.

[4] Marx and Engels Through the Eyes of Contemporaries

[5] கோவையில் 1949 இல் நடைபெற்ற திருக்குறள் மாநாட் டில் திரு வி. க. கூறியது.

ஆகிய பொருள் பற்றித் தொழிலாளரிடையே அறிவூட்டிய ஆசான் ஆவர்.[1] பெரிய புராணம், திருமந்திரம், பட்டினத்துப் பிள்ளையார் பாடல்கள் ஆகியவற்றிற்கு விளக்கவுரை கண்டுவந்த திரு. வி. க. வின் நெறியில் இத்தகைய புதுக் கண்ணோட்டம் பாய்ந்தது. பல தமிழறிஞர்கள் பழைய இலக்கியங்களில் திளைத்திருந்த போது, அவர் இத்தகு புது ஒளியில் புகுவதைக் கண்டு அவரைப் புறக்கணித்துச் சென்றதை அவர் வாழ்க்கைக் குறிப்பு நிகழ்ச்சிகள் குறிப்பாகச் சுட்டிச் செல்கின்றன.[2]

ஸ்பென்ஸர் கம்பெனியில் எழுத்தராகப் பணிபுரிந்தபோது 'பந்தே மாதர' இதழை மற்றவர்களிடம் படித்து நாட்டுப்பற்றுணர்வையும் வெள்ளையர் எதிர்ப்புணர்வையும் பரப்புவதாக எண்ணிய அந்த வெள்ளைக் கம்பெனியார்' திரு. வி. க. வை எச்சரித்தனர். அதிகாரத்துக்கஞ்சி மானம் விற்கும் நீர்மை தம் பிறவியில் இல்லாததால் அப்பணியை விட்டு விலகினார். அந்தக் கொதிப்புணர்வு போராட்ட உணர்வாக மாறுவதற்கு வழிகாலாக அமைந்தவை அக்கம்பெனிக்கு வந்து சென்ற கீர்ஹார்டி என்பவர் காட்சியும், அவர் தொழிலாளர் பற்றி எழுதிய நூல்களுமாகும். தொழிலாளர் பற்றி அறிந்த உள்ளத்தில் உரிமைக்காக வெள்ளைக் கம்பெனி வேலையை விட்டு விடும் ஊக்கம் எழுந்தது.

செல்வபதியார் அழைத்ததால் வேங்கடேச குணாமிர்த வர்ஷணி சபையுடன் தொடர்பு பூண அதில் தொழிலாளர் இயக்கம் பற்றிய எண்ணமே திரு. வி. க. உள்ளத்தில் வளர்தற்கு வழி செய்தது. 1917 இல் 'தேச பக்தன்' இதழ் நடத்தும் போது ருஸ்யாவிலிருந்து வெளியான செய்திகள் அவரைக் கவர்ந்தன. கேசவப்பிள்ளை, இராமாஞ்சலு நாயுடு போன்றவர்கள் கூட்டுறவால்[3] மேல்நாட்டுத் தொழிலாளர் இயக்கம்பற்றியும் பொருளாதார விடுதலை மாண்பு குறித்தும் தொழிற் சங்கத்தின் இன்றியமையாமை பற்றியும் உணர்ந்தார். ஏங்கெல்ஸ் 'பெருநகரங்களில் தொழிலாளர் நிலை' கண்டுணர்ந்த உண்மைகளைச்[4] சென்னைத் தொழிலாளர் நிலையால் திரு. வி. க. தெளிவாக அறிந்தார்.

---

1 ம. சிங்காரவேலு, பொதுவுடைமை விளக்கம், (சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1974).

2 திரு. வி. க., திரு வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள், (மேற்கண்ட நூல்) ப. 217.

3 திரு வி. க. இந்தியாவும் விடுதலையும், (சென்னை, சாது அச்சுக்கூடம், 1940) ப. 347.

4 Engels, The Condition of the working class in England, (Moscow, Progress Publishers, 1973) pp. 112-113

தொழிலாளர் வாழ்வு பற்றிய எண்ணம், சிங்காரவேலு செட்டியாரின் கூட்டுறவு தந்த விளக்கம் ஆகியவை பொதுமையை உலகில் பரப்பி நிலைபெறுத்த வல்லது கார்ல் மார்க்ஸ் கொள்கை என்ற எண்ணத்தைத் திரு. வி. க. உள்ளத்தில் இடம் பெறச் செய்தன. முதல் முதலாக சோஷிலிஸத்திற்கும் அதனால் நம் காலத் தொழிலாளர் இயக்கம் முழுவதற்கும் ஒரு அறிவியல் அடிப்படையைத் தந்தவர் மார்க்ஸ் என்று உறுதியாக நம்பினார்.

கார்ல் மார்க்ஸும் பிரடரிக் ஏங்கல்ஸும் பாட்டாளிகளின் மிக முற்போக்கானதும் புரட்சிகரமானதுமான வர்க்கத்தின் நலன்களை வெளிப்படுத்திய புதிய கோட்பாட்டைப் படைத்திருப்பதையும் உலகைப் புதிய உலகாய் மாற்றிப் புதுப்பிப்பதற்கு ஆற்றல் வாய்ந்த ஒரு தத்துவ ஆயுதமாக உழைக்கும் மக்களுக்கு அளித்திருப்பதையும்[1] அறிந்து அது அதற்கு முற்பட்ட கோட்பாடுகளிலிருந்து மாறி இருப்பதையும் அறிந்தார்.

உலகம் போராட்டத்திற்கு இரையாதலைக் கண்ணாரக் கண்டு திரு. வி. க. உளந் துடித்தார். அத்தகைய உலகப் போராட்டம் குறித்து ஆராய்ச்சி செய்த பலருள் சிறந்தவராக அவருக்கு மார்க்ஸ் வெளிப்பட்டார். உலகப் போராட்டத்திற்கு மூலமாக நிற்பது முதலாளி தொழிலாளி என்ற வேற்றுமை உணர்வு என மார்க்ஸ் கண்ட உண்மையைத் திரு வி. க. போரின் அடிப்படைக் காரணத்தை நடுவு நிலையிலிருந்து ஆராய்ந்தே அறிந்தார். சாம்ராஜ்யப் பெருக்கம் முதலாளி-தொழிலாளர் வேற்றுமை உணர்வை வளர்ப்பதாயிற்று. அவ்வளர்ச்சி வாழ்க்கையில் போராட்டத்தைப் புகுத்தியது. அப்போராட்டத்தை ஒழிக்கும் மருந்து கார்ல் மார்க்ஸ்க்குக் கிடைத்ததாகத் திரு.வி.க. அறிந்தார். அம்மருந்தாகப் பொதுமை அறத்தை நிலை நிறுத்த வல்ல பொருளாதாரச் சமரசம் என்பதை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டார்.[2]

அரசியல் – பொருளாதாரம் பற்றிய சிந்தனை வளர்ந்த போது திரு. வி. க. 15-10-21 அன்று தென்னார்க்காடு மாவட்ட மூன்றாம் அரசியல் மாநாட்டில், 'முதலாளி வகுப் பென்று ஒன்று உண்மையால், தொழிலாளி என்ற வேறோர் வகுப்புப் பிரிந்து நிற்கிறது. இப்பிரிவை உண்டாக்குவது பொருட் செல்வம். அப் பொருட் செல்வம் எல்லார்க்கும் பொதுவாக

---

[1] கியோர்க்கி ஷஹன்ஸாரவ் முதலியோர், மனிதனும், விஞ் ஞானமும் சமுதாயமும், (சென்னை, நியூ செஞ்சுரிபுக்ஹவுஸ், 1973) ப. 11.

[2] திரு வி. க., திரு வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் II, (சென்னை, கழகம், 1969) பக். 580-582.

வகுக்கப்படின் முதலாளி தொழிலாளி என்னும் வேற்றுமையே ஒழிந்துபோகும். ஒரு வேளை காங்கிரஸ், முதலாளி சுயராஜ்யம் பெறினும், அந்த ராஜ்யம் மீண்டும் தொழிலாளர் வசம் விரைவில் வந்துவிடும். தொழிலாளர் ராஜ்யமே சுயராஜ்யம், சுகராஜ்யம். அது கருதியே யான் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து தொழிலாளர்க்காக உழைத்து வருகிறேன்' என்று உரையாற்றியுள்ளார்.[1]

இவ்வாறு பேசுவதற்கு முன்னரே இந்தியாவில் முதல் தொழிலாளர் சங்கமாகச் 'சென்னைத் தொழிலாளர் சங்கம்' 27-4-1918 அன்று திரு. வி. க. வின் முயற்சியாலும் வாடியா, கேசவப்பிள்ளை, இராமாஞ்சலு, செல்வபதி, சர்க்கரைச் செட்டியார், ஆகியோர் துணையாலும் உருப்பெற்றது. அன்று முதல் திரு. வி. க. சென்ற ஊர்களிலெல்லாம் தொழிற்சாலைகள் உள்ள இடங்களில் தொழிற்சங்கங்கள் காணுமாறு பேசினார். அதன் விளைவாக எம். அண்ட் எஸ். எம் தொழிலாளர் சங்கம், டிராம்வே தொழிலாளர்சங்கம், மின்சாரத் தொழிலாளர் சங்கம், மண்ணெண்ணெய்த் தொழிலாளர் சங்கம், அச்சுத் தொழிலாளர் சங்கம், அலுமினியம் தொழிலாளர் சங்கம், ஐரோப்பிய வீட்டுத் தொழிலாளர் சங்கம், நாவிதர் சங்கம், தோட்டிகள் சங்கம் ரிக்ஷா ஓட்டிகள் சங்கம், போலீஸார் சங்கம், தென்னிந்திய ரெயில்வே தொழிலாளர் சங்கம் (நாகை), கோவை நெசவுத் தொழிலாளர் சங்கம், மதுரை நெசவுத் தொழிலாளர் சங்கம் முதலாயின தோன்றின.

இவ்வாறு தொழிற்சங்கங்கள் உருவாக உழைத்ததின் அடிப்படையில் மார்க்ஸ் கண்ட உண்மைகள் வெளிப்பட்டன. அவ்வுண்மைகளாவன: உழவர்களையும் கைவினைஞர்களையும் விட அதிகமான அரசியல் விழிப்பைப் பெற்றிருப்பதுடன் அமைப்பு இயக்க முறையில் திரண்ட வார்க்கமாகவும் தொழிலாளர்கள் திகழ்கின்றனர் என்பது ஒரு உண்மை யாகும். அரசியல் விழிப்பும் அமைப்பு முறையில் திரளும் திறனும் அத் தொழிலாளர்களை மிகப் புரட்சிகரமான வர்க்கம் ஆக்குகின்றன என்பது மற்றொரு உண்மையாகும்.[2]

இத்தகைய வர்க்க வுணர்வுடன் தொழிற் சங்கங்கள் தென்னிந்தியாவில் அமைக்கப்பெற்றன. இங்கு எழுந்த தொழில் கிளர்ச்சி காட்டுத்தீப்போல் நாடு முழுவதும் பரவலாயிற்று.

---

[1] திரு வி. க., இந்தியாவும் விடுதலையும், (மே. நூ.) பக் 337-338.

[2] கியோர்க்கி ஷஹனஸாரவ் முதலியோர், மனிதனும் விஞ்ஞானமும் சமுதாயமும், (மே. நூ.) பக். 126-127.

பம்பாய், கல்கத்தா, கான்பூர், நாகபுரி முதலிய இடங்களில் தொழிற் சங்கங்கள் காணப்பட்டன. திரு. வி. க. வின் வேட்கை தொழிலாளர் இயக்கம், ஆக்கம் பெற வேண்டும் என்பதேயாகும். இத்தகைய வேட்கை அக்காலத் தமிழறிஞர்களிடம் காணப் பெறாத புதுமையாகும். இச்சங்கங்களில் கதவடைப்பும் வேலை நிறுத்தமும் அடிக்கடி நிகழ்ந்தன. ஒவ்வொரு வேலை நிறுத்த மும் சமதர்ம வேதத்தின் ஒரு படலமாகத் திரு. வி. கருதினார். மேலும், முதலாளியின் அடக்கு முறையும் தொழிலாளர் வேலை நிறுத்தமும் பெருகப் பெருகச் சமதர்ம உணர்வுதானே தொழி லாளிகளிடைத் தோன்றும் என நம்பினார்[1] இது மார்க்ஸீயத் துடன் ஒப்பிட்டுக் காணவேண்டிய கொள்கையாகும்.

எல்லாச் சங்கங்களுக்கும் நடுநாயகமாக ஒரு மத்திய சங்கமும் எழுவதற்குத் திரு. வி. க. துணை செய்தார். தொழிற்சங்கத் தலைவர் என்ற முறையில் அரசியல் அடக்கு முறைக்கு ஆளானார். வழக்குகளின் பிடியிலே சிக்கினார். வேலை நிறுத்தத்தின்போது (9-12-1920) போலீஸார் சுட்டதால் இரு தொழிலாளர் இறந்த தது குறித்து நெக்குருகினார். இவ்வாறு பல தொல்லைகட்கு உட்பட்டும் சங்கம் சாயவில்லை; முன்னிலும் மாறாக உரம் பெற்று வளர்வதில் மார்க்ஸியம் வளர்வதைக் கண்டு மகிழ்ந்தார்.

தொழிலளார்க்குப் பொருளாதார உணர்ச்சி ஊட்ட முனைந்தார். தொழிலாளர் உழைத்துச் சம்பளமட்டும் பெறுங் கூலிகாளாய்க் காலங் கழித்து வருதலாகாதென்றும், தொழிலாளர் உழைப்புக் கலவாமல் எவ்வித விளைவும் உண்டாவதில்லை யென்றும் ஆதலின் தொழிற்சாலைகளில் தொழிலாளர்க்கும் பொருளாதாரத்தில் உரிமையிருத்தல் வேண்டுமென்றும் பேசி வந்தார். பல போராட்டங்களில் தொடர்ந்து தொழிலாளர் துணைவனாகப் பங்கேற்றார். 1921-ஆம் ஆண்டு வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டதால் திரு. வி. க. வை நாடுகடத்த எண்ணும் அளவுக்கு அவர் மீது வெள்ளையர் அரசின் கொடுங் கோலுள்ளம் துணிந்தது.[2]

தொழிலாளர் இயக்கத்துடன் திரு. வி. க. நின்றுவிடவில்லை. தொழிற்சங்க உணர்வு சிறப்பாக விவசாயிகளிடத்தில் புகுவது நன்மை தரும் என உணர்ந்தார். ஏனெனில் நமது நாட்டில் பெரும்பான்மையோர் விவசாயிகள். அவர்களே நாட்டின் முது கெலும்பாயிருப்பவர்கள். அவர்களை மிகச்சிலர் ஒடுக்கி ஆண்டு வருகின்றனர். அவர்கள் விடுதலை நாட்டின் விடுதலையாகும்;

---

[1] திரு. வி. க. இந்தியாவும் விடுதலையும், (மே. நூ.) ப. 351.

[2] மேற்படி பக். 380-382.

பொருளாதார விடுதலையாகும்; இந்நிலையில் ஏங்கெல்ஸ் விவசாயத் தொழிலாளர்கள் பற்றி எழுதிய கருத்துக்கள் திரு. வி. க. வின் இத்தகைய எண்ணங்களுக்கு உரமூட்டின.[1]

இந்நிலையில் தான் ஈடுபட்ட காங்கிரஸ் இயக்கத்தையும் தொழிலியக்கத்தையும் ஒப்பிட்டுக் காணும்போது இடைக்காலத்தில் 1937 முதல் இரண்டரை ஆண்டுக்காலம் காங்கிரஸ் ஆட்சியில் சமதர்ம ஆட்சி கால்கொள்ள வில்லை என்ற உண்மையை ஏற்றுக் காங்கிரஸும் தொழிலியக்கமும் ஒன்றினாலன்றிக் காங்கிரஸ் சமதர்மமயமாகாது என்ற உண்மையை ஏற்றுக் கொள்கிறார். சமதர்மம் நிலவவேண்டும் என்று வெளிப்படையாக வர்க்க பேதத்தை ஈனமாகக் காட்டுகிறார் திரு. வி.க.

சாம்ராஜ்ய ஆட்சியை வைத்துக் கொண்டு வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதென்பதும், யுத்தத்தை நிறுத்துவதென்பதும் ஒழுக்கத்தை ஓம்புவதென்பதும் ஏமாற்றமாகப்பட்டது. சாம்ராஜ்யத்தால் விழுங்கப்பட்ட உலகை விடுதலை செய்து சமதர்மத்தால் சீர்திருத்தி அமைக்க முயன்றவர்களுள் சிறந்தவர் காரல் மார்க்ஸ். சமதர்மத்தை விஞ்ஞான முறையால் ஒழுங்குபடுத்தி உலகுக் கீந்த பெருமை காரல் மார்க்ஸுக்கு உண்டு. மார்க்ஸ் போதனையைச் சாதனையாக்க முயன்றவர் லெனின் உள்ளிட்ட சிலர்[2] என்று வரலாற்று உண்மையைத் தெளிவாகக் கூறுகிறார் திரு. வி.க.

விடுதலை பெறும் தறுவாயில் காங்கிரஸ் ஆட்சி நடந்தது. அப்போது பஞ்சாலைத் தொழிலாளர் வேலைநிறுத்தம் சென்னையில் நடை பெற்றது. தொழிலாளர் சார்பில் திரு. வி. க. நின்றார். அது கண்டு காங்கிரஸ் அரசு, 9-6-47 முதல் 10-7-47 வரை திரு வி. க. வை வீட்டை விட்டு வெளியேறலாகாது எனக் கட்டளை பிறப்பித்தது.[3] இவ்வாறு தொடக்க காலமுதல் திரு. வி. க. மார்க்ஸீய நெறியை நம்பித் தொழிற் சங்கங்களைக் கட்டி வளர்த்துத் தொழிலாளர்களைப் போராட்ட நெறியில் உருவாக்கிய போது ஆட்சியாளர்களால் — வெளியார் உள் நாட்டினர் என்ற வேறுபாடு கருதாத நிலையில் எல்லாவகையிலும் துன்பப்பட்டார். எனினும் மார்க்ஸீயத்தின் மீது தாம்

---

[1] Engels, The Condition of the working class in England pp. 297-311.

[2] திரு வி. க. இந்தியாவும் விடுதலையும், (மே. நூ.) பக். 400-401.

[3] திரு. வி. க. கிறிஸ்துமொழிக்குறள், (சென்னை, புனித நிலையம், 1972) ப. iii.

கொண்ட நம்பிக்கையைத் தளர விடவில்லை. தாம் வளர்த்த நெறிக்கு ஏற்ப மார்க்ஸை 'முனிவர்' என்றே போற்றினார்.[1]

பெண்ணின் பெருமையை நாடெங்கும் பரப்பியவர் திரு. வி.க. பதியிலார் என்ற தலைப்பில் காணும் கருத்துக்கள் மார்க்ஸீய அடிப்படையில் முகிழ்த்தவை. 'உலகில் செல்வரே பல கேட்டிற்குங் காரணமாயிருத்தல் கண்கூடு. ஏழைத் தொழிலாளர் உழைப்பால் பெறுஞ் செல்வத்தை முதலாளிகள் பலதிறக் களியாடல்களுக்குச் செலவு செய்தல் பெருந்தவறு. களியாடல்களுள் பெண் மக்களை கற்பழிக்கும் ஆடல் தலையாயது. செல்வர் பொருட்டுப் பதியிலாப் பெண்மக்கள் தங்கள் நிலையை மறந்து தங்களை ஒரு விலைப் பொருளாகக் கருதி வாழ்கிறார்கள்[2] என்று எழுதியுள்ள கருத்து மாதர் விடுதலை பற்றி வி. இ. லெனின் குறித்த கருத்துடன் ஒப்பிடத் தக்கது. அவர் கருத்துப் பின் வருமாறு; ''எங்கெங்கு நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் வியாபாரிகளும் இருக்கிறார்களோ அங்கெல்லாம் பெண்கள் ஆண்களுடன் சமமான நிலையில் — சட்டத்தின் முன்பு கூட — இருக்கமுடியாது. மாதர் பூரண விடுதலையை வென்று பெறாத வரையில் தொழிலாளி வர்க்கம் பூரண விடுதலையை அடைய முடியாது''[3] இக்கருத்துக்களுடன் திரு. வி.க. முழுதும் ஒத்துச்செல்கிறார் என்பதில் ஐயமில்லை.

திரு. வி. க. ஜெர்மானியர், பிரஞ்சுக்காரர்கள் போலத் தமிழரும் தாய்மொழி வாயிலாகவே கல்விகற்க வேண்டும். அறிவியல் நூல்களைக் குறிப்பாக இளைஞர் பயிலவேண்டும் என வற்புறுத்தினார்.[4]

திரு. வி. க. தமிழ் உரைநடையில் பெரும் மாற்றம் செய்தவர். தம்முடைய வாழ்வில் மூவகை எழுத்துநடை அமைந்ததை ஒப்புக் கொள்வார். இளமைக் காலத்திலே ஒரு நடை; பின்னர்ச் சங்க இலக்கியச் சார்புள்ள நடை அமைந்திருந்தது. இதனைத் தமிழறிஞர்களிடையேயும் நன்கு கற்றறிந்தவர்களே படித்தறிய இயலும். மூன்றாம் நிலையில் பத்திரிகை ஆசிரியராக அமர்ந்தபின் அமைந்த நடை தனிச் சிறப்புடையது. இந்த நடை எளியது.

---

1 திரு வி. க. பொருளும், அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும், (மு. நூ.) ப. 43.

2 திரு வி. க. பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை, (சென்னை, புனித நிலையம், 1969) ப. 295.

3 வி. இ. லெனின், மாதர் விடுதலைபற்றி, (சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1972) ப. 135, 137.

4 திரு வி. க. சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, (சென்னை, புனித நிலையம், 1972) ப. 61, 30.

சிறு சிறு வாக்கியங்களால் ஆயது. நூலுக்கேற்ற நடையாகவும் காலத்துக் கேற்ற நடையாகவும் அமைந்தது. சுருங்கக் கூறின் எழுத்து நடையும் பேச்சு நடையும் ஏறக்குறைய ஒன்றாகவே அமைந்தது.[1]

திரு. வி. க. தம் வாழ்க்கைக் குறிப்புக்களை நூலாக எழுதத் தொடங்கிய போது தொழிலாளர்கள் அவரிடம் சென்று 'நூலைப் புலவர்க்கென்று எழுதாதேயுங்கள்; எங்கட்கு என்று எழுதுங்கள்' என வேண்டுகோள் விடுத்தனர் என்பதால் அதனை மனத்தில் கொண்டு அந்த நூலை எல்லார்க்கும் பயன்படு முறையில் திரு. வி.க. எழுதி வெளியிட்டார். படித்த தமிழறிஞர்களுக்கும் படிக்காத தொழிலாளர்க்கும் அதுவரை நிலவி வந்த பெரும்பிள வாகிய நிலை இத்தகைய நூல் முயற்சியாலும் நடை எளிமையாலும் குறைந்தது என்பது உண்மை. இவ்வாறு மொழியைப் பொதுமக்கள் கருவியாகப் பயன்படுத்தும் உணர்வைத் திரு. வி. க. வுக்குக் கொடுத்தது மார்க்ஸீயக் கொள்கையே.

மார்க்ஸ் நடையைப் பற்றி ஆய்வாளர்கள் குறிப்பிடும் போது அவரை ஒரு தூய நடைவாதி என்பர். சரியான விளக்கத்திற்காக அவர் நீண்ட நேரம் மிகவும் சிரமப்பட்டுத் தேடி அலைவார். அனாவசியமாக அந்நிய மொழிச் சொற்கள் பயன்படுத்துவதை அவர் வெறுத்தார்[2] என்பர்.

இந்நிலையில் மொழிநடைபற்றி ஒற்றுமையைக் கூறும் பொது மக்களுக்கு மொழி பயன்படவேண்டும் என்ற அதன் அடிப்படை உண்மையும் நன்கு புலனாகிறது. இந்நிலையின் வளர்ச்சியாகவே இந்தி மொழித் திணிப்பைப் பற்றியும் திரு. வி. க. வின் எண்ணம் உருவெடுத்தது. 1937-இல் இந்தி கட்டாயமாதல் கூடாது என அக்காலத்திலிருந்த சென்னை மாநிலத் தலைமை அமைச்சராக விளங்கிய ராஜாஜியிடம் எடுத்துரைத்தார். இரஷ்ய நாட்டில் ஆட்சிமொழியைக் கட்டாயப்படுத்தித் திணிக்கக் கூடாது[3] என லெனின் 1914 இல் எழுதிய கருத்துக்களை ஒப்பிடின் திரு. வி. க. இந்தியை ஆட்சி மொழியாக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்த தின் உண்மை விளங்கும்.

திரு. வி. க. வின் வாழ்க்கையின் தொடக்கம் தமிழிலக்கிய நூல்களின் விரிவுரை செய்வதில் முளைவிட்டது எனக் கண்டோம்.

---

[1] திரு வி. க., திரு வி. க. வாழ்க்கைக் குறிப்புகள், (மு. நூ) ப. 143.

[2] மார்க்ஸையும் ஏங்கெல்ஸையும் பற்றிய நினைவுக் குறிப்புகள், (மு. நூ) ப. 155.

[3] V. I. Lenin, On Literature and Art, (Moscow, Progress Publishers, 1967) p. 96

அதன் உயர்நிலையாகத் திரு. வி. க. தம் வாழ்வில் திருக்குறள் அறத்துப்பாவில் பாயிரம், இல்லற இயல் ஆகியவற்றிற்கு விரிவுரை எழுதியுள்ளார். திருக்குறளுக்கு மணக்குடவர் முதல் இக்காலத்தில் பலர் பல்வேறு சமூக அரசியல் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் பொருள் விளக்கம் கண்டு உரை எழுதினர். ஆயினும் மார்க்ஸீய ஞானியின் துணை கொண்டு திரு. வி. க. சில குறட்பாக்களுக்கு உரை கண்டது தனி வழியாகும்.

'அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை'

என்ற குறள் 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்தில் காணப் பெறுகிறது. இதற்குப் பொருள் கண்டவர்கள் தத்தம் நிலைக்கு ஏற்பப் பண்டைய மரபு நெறியில் ஊழ்வலியின் பெருமையைப் புலப்படுத்தும் வகையில் உரை எழுதினர்.

ஆயின் திரு. வி. க. கண்ட உரையில் மார்க்ஸீயம் தழுவிய கருத்துக்கள் வெளிப்படுகின்றன. அவர் கண்ட உரைநெறியில் உலகில் சிலச்சில சமயம் புரட்சி உண்டாகிறது. புரட்சி உண்டாகக் காரணம் தொழில் முறைகளில் உயர்வு தாழ்வு கற்பித்தல். பிறப்பில் உயர்வு தாழ்வு கொள்ளல், தொழில் முறைகள் அறநெறியினின்று பிறழ்தல் முதலியவற்றைச் சிறப்பாகக் குறிக்கலாம். புரட்சி இயற்கையின் ஆணைப்படி எழுந்து கற்பிதங்களை ஒழித்து அறநெறியை விளக்கி அடங்கிவிடும் என்று உரைத்த திரு. வி. க. மேலும் ஒரு படி சென்று அறநெறி மறக்கப்பட்ட இடங்களிலேயே புரட்சி எழும் என்று புரட்சி எழும் இடத்தைச் சுட்டுகிறார்.[1]

தொழில் முறைகள் ஒழுங்காக நடைபெற்றாலன்றி உலகில் அமைதி நிலவாது. அத் தொழில் முறைகளையொட்டிப் பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பிப்பது அமைதி காப்பதாகாது என்ற கருத்தைக் கூறிப் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற பொதுமைக் கருத்தைத் திரு. வி. க. வற்புறுத்துவார். இதைத் தொடர்ந்து, இக்குறளுள் காணும் சிக்கலைப் பழைய நெறிப்படி காணாமல் புதிய நெறியில் தீர்க்க முனைகிறார்.

பல்லக்கைத் தாங்கிச் செல்வோரும் மனிதரே. அதில் ஏறிச் செல்வோரும் மனிதரே. இருவரும் ஒருவழியில் பிறந்தவரேயாவர். இருவரும் தொழில் முறையில் ஈடுபட்டவரேயாவர். அறநெறி தொழிலிடைப் பொதுவாய் இலங்குவது. அறநெறி பல்லக்கைத் தாங்கலில் சுருங்கியும் அதில் செல்கையில் பெருகியும் நிற்பதோ இல்லை. பல்லக்கைச் சுமந்து செல்வோரும் அறநெறி

---

[1] திரு வி. க. திருக்குறள் விரிவுரை I, (சென்னை, சாது அச்சுக் கூடம், 1956) ப. 395.

நின்றால் அறவோராகலாம். பல்லக்கில் ஊர்ந்து செல்வோரும் அறநெறி நின்றால் அறவோராகலாம். அறவோராகும் வாய்ப்பு இருவர்க்கும் உண்டு. 'அறத்தாறு' ஒரு சாரார் பக்கஞ் சாயும் தன்மையுடையதன்று. ஆகவே 'அறத்தாறு இதுவென வேண்டா' என்றார். என்னை? அது சிவிகை பொறுத்தானோடூர்ந்தானிடை' வெளிப்படையான் விளக்கலான் எனக் குறிப்பார்.[1]

இது போன்றே 'என்பிலதனை வெயில் போலக் காயுமே அன்பிலதனை அறம்' என்ற குறளுக்கு விரிவுரை காணும் போதும் 'இயற்கை அறத்தில் சில நியதிகள் உண்டு. அவைகட்கு இயைந்து நடந்தால் நன்மை விளையும்; இயையாது மாறுபட்டு நடந்தால் தீமை விளையும். காய்தல் – மறக்கருணை[2] எனக் கூறும்போது மார்க்ஸீயத் தத்துவத்தில் இயற்கைப் பொருள்களிடையே காணும் உண்மைகளை விளக்கும் மெய்ம்மை புலனாகிறது. இதனை விளக்கவுரை காணுமிடத்திலேயே ஆசிரியர் தெளிவாகக் கூறுகிறார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உனது (பழந்தமிழ் நாட்டினது) உள்ளுறையன்றோ இந்நாளில் சமதர்மம் என்று விரிக்கப்படுகிறது?' என வினவி உண்மையைத் திரு. வி. க. தம் திருக்குறள் விரிவுரை – பாயிர முன்னுரையில் கூறுவார்.

மதம் பற்றி மார்க்ஸீயம் காண்பது தனி நிலை யாகும். எல்லா நவீன கால மதங்களையும், சர்ச்சுகளையும் சகலமத நிறுவனங்களையும் பூர்ஷுவா பிற்போக்கின் கைக்கருவிகளாகச் சுரண்டலைப் பாதுகாப்பதற்கும் தொழிலாளி வர்க்கத்தை வெறிமயக்கமுறச் செய்வதற்குமான கருவிகளாகவே மார்க்ஸீயம் எப்போதும் கருதியது.[3] இதனை மனத்தில் கொண்ட வண்ணம் இராமலிங்க வள்ளலாரின் 'மழவுக்கு மொரு பிடி

---

1 மேற்படி ப. 398.

2 திரு வி. க. திருக்குறள் விரிவுரை II, (சென்னை, சாது அச்சுக்கூடம், 1951) ப. 676.

3 வி. இ. லெனின், மதத்தைப் பற்றி, (சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1974) ப. 30

சோறளிப் பதன்றி'[1] என்ற பாட்டிற்குப் பொருள் கூறும்போது மார்க்ஸீயத்தைப் புகுத்தித் திரு. வி.க. விரிவுரை யாற்றினார். மார்க்ஸீயத்துக்கும் இராமலிங்கீயத்துக்கும் ஒற்றுமை உண்டு என்பது திரு. வி. க. கண்டவுண்மை. மார்க்ஸ், போலீஸற்ற — சேனைகளற்ற — அரசற்ற ஓர் உலகைக் காணவே முயன்றார். வள்ளலாரும் அத்தகைய உலகைக் காணவே உருகி உருகிநின்றார். வள்ளலார் கண்ட அகிம்சை, அருள், கொல்லாமை என்பவை மார்க்ஸீயத்தில் இல்லை' என்பதையும் திரு. வி. க. உணர்ந்திருந்தார்.

இதனை உணர்ந்தே மேலும் விளக்கும்போது 'தற்கால உலக வாழ்க்கைக்குப் பயன்படுவதுதான் உண்மையான வாழ்க்கையாகும். அரிசிப் பஞ்சம் இச்சமயம் தாண்டவமாடுகிறது' ஒரு பணக்காரர் தம் வீட்டில் ஆயிரம் அரிசி மூட்டைகளைப் பதுக்கி வைப்பது தான் முதலாளித்துவம். இதைக் கார்ல்மார்க்ஸ் வெறுத்தார். நாமும் வெறுக்கிறோம், எனச் சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தில் வள்ளலார் நூற்று இருப்பத்தைந்தாம் பிறந்த நாள் விழாவில் உரையாற்றினார்.

நாட்டில் உணவுப் பஞ்சமும் உடைப் பஞ்சமும் தாண்டவமாடும்போது நம்மவர் செய்யும் தடபுடல் உற்சவங்களைத் திரு வி. க. வெறுத்தார். இருபிடி ஊண் வழங்கினால் உழவுக்கு முதல் குறையுமென்று வளர்த்த பொருளைக் கள்ளமார்க்கெட் காசை — பேயின் விழவுக்கு வீணாக்குகின்றனர். தங்கமயில் வாகனம், வெள்ளி ரிஷபம், புஷ்பவிமானம், பொய்க்கால் குதிரை, மேளக் கச்சேரி, நாட்டியக் கச்சேரி, வாணவேடிக்கை முதலானவற்றிற்குப் பணத்தைப் பாழாக்குகின்றனர். ஏழையைக் கண்டு நீட்சிதர் வெறுக்கிறார். ஏழையை நடராஜாவிடம் நெருங்காதபடி செய்கிறார். பொதுவுடைமையாகிய நடராஜா அப்படி இல்லையே எனக் கேட்கும் போது சடங்குகள் சமயப் பூசாரிகள் என்பவற்றைப் பிரித்துக் காணும் போக்கைத் திரு. வி. க. விடம் காண்

---

[1] மழவுக்கு மொருபிடி சோறளிப்ப தன்றி
இருபிடியூண் வழங்க லிங்கே
உழவுக்கு முதல் குறையு மென வளர்த்தங்கு
அவற்றை யெலா மோகோ பேயின்
விழவுக்கும் புலாலுண்ணும் விருந்துக்கும்
மருந்துக்கு மெலிந்து மாண்டார்
இழவுக்கு மிடர்கொள கோலிறை வரிக்குங்
கொடுத் திழப்பா ரென்னே யென்னே'
(பாடல்: 5331 — திருஅருட்பா) ஊரன் அடிகள் பதிப்பு 1972.

கிறோம். மேலும் 'சாதி மத உயர்வு தாழ்வுகளை ஒழித்த சம தர்மமே எனது கொள்கை' என இந்நாட்டிற்கு ஏற்ப மக்கள் பொதுநலம் கருதி தம் கருத்தை வெளியிடுகிறார்.[1]

திரு. வி. க. தம் நிலைக்கு ஏற்பச் சமயங்கள் போருக்காக வகுக் கப்பட்டன அல்ல. சமரச ஞானப் பேற்றிற்கெனவே அவைகள் வகுக்கப்பட்டன என்பார்.[2] மார்க்ஸை நாத்திகர் என்பர் பலர். இக்கருத்தில் திரு. வி. க. மாறுபடுகிறார். ஆயினும் நாத்திக நூல்களை வரைந்து விடுத்த மேலை நாட்டு தத்துவர் ஆராய்ச்சி யில் முதிர்ந்த அறிஞர் என்பதை ஏற்றுக் கொள்கிறார். மேலும் மேலை நாட்டு நாத்திக நூல்கள் பல கீழை நாட்டு ஆத்திக் நூல்களுக்கு ஆக்கம் தேடுவன என்பது திரு வி. க. தமது அனுப வத்தில் கண்ட உண்மை என்பர்.[3]

தம்மனத்திற்கு மார்க்ஸியம் நாத்திகமாகத் தோன்றவில்லை என்கிறார். மகமதுவின் தெய்வ ஒருமையும், கிருஸ்துவின் அன்பும், புத்தர் தர்மமும், அருகர் அஹிம்சையும், கிருஷ்ணன் நிஷ்காமியமும், குமரன் அழகும், தட்சணாமூர்த்தி சாந்தமும் பொதுமை அறத்தை வேராகக் கொண்டமையைக் கூறி அப் பொதுமை அறம் ஏன் ஓங்கவில்லை எனச் சிந்தித்து அதற்குரிய தடைகளாகச் சாம்ராஜ்யங்கள், மடங்கள், சம்பிரதாயங்கள், கட்டுப்பாடுகள், கண்மூடி வழக்க ஒழுக்கங்கள் எனக் கூறி அவ் வேற்றுமைகளைப் படைத்து வளர்ப்பது முதலாளி தொழிலாளி வேற்றுமை எனக் கண்டு அதனை ஒழிக்க வல்லது 'பொருட் பொதுமை' என்ற முடிவுக்கு வருகிறார். மேற்கண்ட பெரியோர் களின் அன்பும் பிறவும் மன்பதையில் கால்கொள்வதற்குத் துணை செய்யும் ஆற்றல் வாய்ந்தது 'பொருட்பொதுமை' என்ற நுட்பத்தை உணர்ந்ததால் மார்க்ஸீயம் தம் உள்ளத்தைக் கவர்ந் ததை வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார்.

அக அமைதிக்குப் புற அமைதி வேண்டற்பாலது. புற அமைதியை உலகில் நிலவச் செய்யும் வல்லமை வாய்ந்த மார்க்ஸீ யத்தை நாத்திகம் என்று எப்படித் தள்ளுவது எனத் திரு வி. க. வினவுகிறார். அதன் விடையாக மார்க்ஸீயத்தைத் தள்ளுவது சான்றோரின் அமைதிச் செல்வத்தைத் தள்ளுவதாகும்; போராட் டத்தை அழைப்பதாகும் எனக் கூறிப் பின் சான்றோர் அருளிய

---

[1] திரு வி. க. தமிழ்க் கலை, (சென்னை, பாரிநிலையம், 1978) பக். 23-24, 30, 32, 33, 44.

[2] திரு வி. க. கடவுட் காட்சியும் தாயுமானாரும், (சென்னை புனித நிலையம், 1972) ப. 22.

[3] திரு வி. க. என் கடன் பணிசெய்து கிடப்பதே, (சென்னை புனித நிலையம், 1969) ப. 16.

பொதுமை அறத்து ஆக்கம் தேடவே தாம் மார்க்ஸின் பொருட் பொதுமைக் கொள்கையைத் தழுவுவதாகக் காரணம் காட்டு கிறார். ஆயினும் மார்க்ஸீயத்திலும் சிறு குறையுண்டு எனக் கூறி மார்க்ஸீயத்தில் 'சத்' என்னும் செம்பொருள் சேர்ந்தால் அது நிறைவுடையதாகும்[1] என முடித்துக் கூறுவார் திரு. வி. க.

இந்நிலையில் தான் திரு வி. க. வின் உள்ளம் காந்தியத்தின் வழியே படர்கிறது. காந்தியத்திற்கும் மார்க்ஸீயத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நன்குணர்ந்து' மனித வாழ்க்கை யும் காந்தியடிகளும்' என்ற நூலின் ஐந்தாம் பதிப்பிலேயே புதிய பொருளாகச் சேர்த்துள்ளார். சுயராஜ்யம் பற்றிக் குறிக் கும் போது காந்தியடிகள் கருதிய சுயராஜ்யத்தை இந்தியாவும் உலகமும் அடைவதற்குக் காந்தியமும் மார்க்ஸீயமும் கலந்த தர்மமார்க்கம் தேவை என வற்புறுத்துவார் திரு. வி. க.[2]

அஹிம்சை பற்றிய கருத்தை நன்கு விளக்கமாகக் காட்டு வார் திரு. வி. க. நிலமும் பொருளும் அறிவும் பொதுவாயின் புதுஉலகம் நன்முறையில் அமையும். அவ்வுலகம் அஹிம்சை வண்ணமாகப் பொலியுமென்று மார்க்ஸீயம் கூறுகிறது. அது (மார்க்ஸீயம்) குறிக்கும் போராட்டத்தில் இரத்தம் சிந்தாமை காணோம். மார்க்ஸீயம் ஹிம்சையை வெறுக்கவில்லை. போராட் டத்தைக் கடந்து முதுமை எய்துங்கால் உலகெலாம் அஹிம்சா தர்ம மணமே கமழும். காந்தியடிகள் விருஷபதேவர் வழி வந்தவர்; மார்க்ஸ் அவ்வழி வந்தவரல்லர். ஆதலின், கை யாளப்படும் முறையில் இரு சார்பிலும் வேற்றுமை விளைந்தே தீரும். மேலை நாடு ஹிம்சையில் இறங்கியே அஹிம்சையைக் காணும். மார்க்ஸீயம் மேலை நாட்டில் ஓங்கி வளர்ந்து பரவி இந்தியாவில் புகுங்கால் அது காந்தியத்தில் ஒன்றும் என்று திரு. வி. க. எண்ணுகிறார்.[3]

காந்தியத்தையும் திரு வி. க. முற்றமுழுக்க கற்றார் எனக் கொள்ள இயலவில்லை. காந்தியடிகள் கூறிய வருணாச்சிரமத் தைக் கூர்ந்து கண்டார். 'வருணாச்சிரமம் பிறப்புவழி இயங்க வேண்டும் என்பது காந்தியடிகள் கருத்து. பிறப்புவழி வருணாச் சிரமம் பற்றிய கருத்து தம் சிற்றறிவுக்கு விளங்கவில்லை என அடக்கத்தோடு கூறுகிறார். ஆயினும் அவர் தம் கருத்தை வெளிப் படையாகக் கூறத் தயங்கவில்லை.

---

[1] திரு வி. க., திரு வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள், (மு. நூ.) ப. 580-582.

[2] திரு வி. க., மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், (சென்னை, அரசி புக் டிப்போ, 1969) ப. 335.

[3] மேற்படி, பக். 309-311.

'பிறப்பை ஒட்டித் தொழிலின் முறைகளைக் கட்டுப்படுத்தல் இயற்கை நோக்கைச் சிறைப்படுத்துவதாகும். அவரவர் இயல்புக் கேற்ற தொழில்களை அவரவர் ஏற்றுச் செய்யலாம். அவரவர் இயல்புவழித் தொழில்களை ஏற்றுச் செய்வதே இயற்கை முறை. பிறப்பு வழித்தொழில்கள் நடைபெறல் வேண்டுமென்று கட்டுப் படுத்துவது இயற்கையை ஒறுப்பதாக முடியும்

'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'

எனவரும் திருவள்ளுவர் மொழியே இயற்கை நோக்குக்கு அரண் செய்வதாகும். இதுவே சிறியேன் உட்கிடைக்கையும்'[1] எனத் தம் கருத்தைத் திருவள்ளுவர் கருத்தோடு இணைத்துக் காந்தியக் கருத்தை விட்டு விடுகிறார்.

தொழில் நிலையில் மார்க்ஸீயத்துக்கும் காந்தியத்துக்கும் உள்ள வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுகிறார். திரு வி. க. இயந்திர இயக்கம் பற்றிப் பல கருத்துக்கள் வெளிவந்ததை ஒட்டி அவற்றை ஆயும்போது 'ஒன்று உலகில் பொதுமை அறம்பரவி னால் இயக்கத்தால் கேடு விளையாது என்பது; இன்னொன்று இயந்திர இயக்கமே தொலைந்து பழைய கைத்தொழில் முறை உயிர்த்தெழல் வேண்டு மென்பது; முன்னையது மார்க்ஸீயம். பின்னையது காந்தியம். சிங்கநோக்கால் மார்க்கிஸீயத்தை யும் பார்க்கிறேன். காந்தியத்தையும் பார்க்கிறேன். இரண்டை யும் ஆராய்கிறேன். சிந்திக்கிறேன் என் கருத்தைப் பேச்சாலும் எழுத்தாலும் வெளியிட்டு வருகிறேன்[2] என்று கூறும்போது இரண்டு கொள்கைகளையும் பற்றித் திரு வி. க. ஆராயும் நிலை புலப்படுகிறது.

ஆயின் ஹிரேன் முகர்ஜீ[3] இ. எம். எஸ். நம்பூதிரிபாத்[4] போன்ற மார்க்ஸீயவாதிகள் காந்தியத்தைப் பற்றி ஆராய்ந்து இரு கொள்கைக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆழமாக ஆய்ந்துள்ளனர். எனினும் அவர்கள் மார்க்ஸீயத்தைக் காந்தியத் தோடு ஒன்றும் அளவு தம் கருத்தைத் தெரிவிக்கவில்லை. எனினும் காந்தியத்தைப் பின்பற்றியவர்கள் இந்திய விடுதலைக்குப் பின் காந்தியக் கருவியைத் தம் நலத்திற்குப் பயன்படாமல் போனதால் புறக்கணித்ததை நம்பூதிரிபாதின் நூல் நன்கு எடுத்துக்காட்டும்.

---

1 மேற்படி, பக். 108-109.

2 மேற்படி, பக். 236-237.

3 Hiren Mukerjee, Gandhiji a study, (New Delhi, People's publishing House, 1979) pp. 203-225

4 E. M. S. Namboodripad, (The Mahatma and the Ism, (New Delhi, People's Publishing House, 1958)

தம் வாழ்க்கையில் திரு வி.க. காந்தியம், மார்க்ஸீயம் இரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்தார். மார்க்ஸீயம் அவருடைய தொடக்க கால சமய நெறியில் எழுந்த வினாக்களுக்கு விடையாக அமைந்து தொழிலாளரியக்கங்களைக் கட்டி வளர்க்க உறுதுணையாக அமைந்தது. புற அமைதி காணும் வலிமைமிக்க கருவியாக அதனைக் கொண்டார். காந்தியம், மார்க்ஸீயம் ஆகிய இரண்டும் சேர்ந்த சமதர்மம் உலகை நல்வழியில் நடத்தும் என நம்பினார். அந்நம்பிக்கையில் மார்க்ஸீயம் உடலாகவும் காந்தியம் உயிராகவும் தோன்றின. இரண்டும் ஒன்றினால் சமதர்ம வாழ்க்கை முகிழ்க்கும் என உறுதியாக உலகுக்கு எடுத்துரைத்தார்.[1] மார்க்ஸீயத்தின் உயிர் நாடி பொருள் எனவும். காந்தியத்தின் உயிர்நாடி அருள் எனவும் தம் இறுதிக் காலத்தில் புறக்கண் மங்கிய காலத்தும் அகக் கண்ணொளியுடன் கண்டுணர்ந்தார்.[2] தம் இறுதிக் காலப் பாடல்களில்

உழவும் தொழிலும் கொழிக்க விளைவே
பொருளும் அருளும் மருவி ஒன்றுக
மார்க்கிஸ் காந்தி மார்க்கம் வெல்க (1, 9, 10, 21 – 'பொருளும் அருளும்') (மார்க்ஸை மார்க்கிஸ் எனத் திரு வி.க. குறிப்பிட்டுள்ளார்.)

பொருளும் தேவை அருளும் தேவை
இரண்டும் வாழ்வை இயக்கும் ஈரல்
(5.8-9 'பொருளும் அருளும்')

எனக் கூறிய பின்னர் முடிவாக

மார்க்ஸீயம் காந்தியம் தொடக்கம் மாறே
இரண்டும் முடிவில் இணையும் ஒன்றாய்
அகிம்சையை இம்சையால் இணைப்பது மார்க்ஸீயம்
அகிம்சையை அகிம்சையால் அணைப்பது காந்தியம்
(5.95-98 'பொருளும் அருளும்)

என்ற உண்மையைப் புலப்படுத்துகிறார்.

இந்தியத் தத்துவ ஞானத்தில் நடு நெறி என்பது பண்டு தொட்டு வழங்கிவருவது. இதனையே 'நல்ல' நெறி எனச் சுட்டுவர். இந்நெறியில் மார்க்ஸீயத்தைக் காந்தியத்துடன் இணைக்கும் நோக்காகத் திரு. வி. க. வின் நோக்குப் புலப்படுகிறது. இதன் வாய்ப்பும் வளர்ச்சியும் குறித்து விடையளிக்கத் தக்கது எதிர்காலமாகும்.

---

[1] திரு வி. க., பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி, (சென்னை, புனித நிலையம், 1969) ப. 159.

[2] திரு வி. க. பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும், (மு. நூ.) ப. 68.

Index

A

Abhāva, 198
Acit, 9, 20, 168
Adhi bhautika, 71
Adhi daivika, 71
Advaita Vāda, 15, 210
Āgāmya, 70, 71, 74, 75
Ahaṅkāra, 125
Ajīva, 260
Ājīvaka, 193, 278, 279, 280
Aḷavai vāda, 196, 198
Ākāmiyam, 97
Akṣapāda, 195
Anādi, 67
Anāhada, 105
Āṇava, 1, 2, 3, 4, 7, 9, 49, 50, 53, 56, 58, 59, 62, 63, 65, 72, 94, 103
Annam bhaṭṭīyam, 199
Antah-Karaṇa, 202
Anumāna, 198
Apiṭekamālai, 187
Appar, 6, 14
Arcāvatāra, 136
Aṟivar, 224
Arthā-patti, 198
Aruḷ catti, 7, 28, 83, 86
Aruḷnanti Civam, 13, 14, 31, 33, 44, 46, 57, 75, 81, 198, 210
Arulsamy Rev. Fr. S., 79
Arunachalam M., 81, 193
Arunachalam, P. 13
Arunakiri nātar, 152
Asat, 1, 9, 28, 30, 99
Asatkārya Vāda, 197, 201
Aṣṭāṅga yoga, 5, 172, 203
Aṣṭāvarana, 180
Āstika, 193, 194, 195, 196, 198
Aśuddhavidyā, 185
Ātman, 5
Ātma rūpa, 30
Ātma Śuddhi, 30, 162

B

Bādarāyaṇa, 194, 196
Basava Purāṇa, 186
Bāvaleśya, 277
Bhasham, A. L., 279, 280
Bhaktiyoga, 172
Bhāskārya Vādā, 210
Bhoga Kārikā, F.N. 34
Bhūtavāda, 195
Brahman, 5, 15, 21
Buddha, 195
Buddhi, 73

C

Caiva Cittāntam, 50, 54, 56, 62
Cakala 2, F.N. 8, 54, 55
Cakalar, 9, 58
Cakamārkkam, 5
Cākkiram, 8
Cākkirātitam, 8, 83
Cāloka Mukti, 6, 112
Cāmīppiyam, 6
Caṅkarppanirakarāṇam, 13, 14 79, 86, 198
Cariyai 5, 6, 31, 56, 112, 249, 251

Carputtiramārkkam, 5
Cārupam, 6
Cārvāka, 133, 193
Cattinipātam 7
Cāyucciyam, 6
Cit, 1
Citcat, 25
Cittānta cāttiram, F.N. 79
Cīvakacintāmaṇi, 280, 282
Civañāṇa Cittiyār F.N. 2 F.N 31 F.N. 35 13, 14, 34, 44, 76, 79, 80, 81, 104, 118, 153, 201, 206
Civañāṇa Cuvāmikaḷ, 221
Civañāṇa [Cuvāamikaḷ, Neñc u viṭu tūtu, 187
Civāñaṇa Muṇivar, 75
Civañaṇapōtam F.N. p. 2 F.N. p. 30 13, 14, 42, 43, 79, 80, 81, 94, 96, 102, 206, 210
Civañāṇa vaḷḷalār, 209
Cīvaṇ muttar, 3, 4, 9
Civappēṟu, 62
Civaprakācam, 13, 14, 36, 50, 67, 79, 80, 81, 82
Cōpāṇamārkkam, 5
Culūtti, 8
Cuntarar, 6, 14, 93
Cupakkam F N p 31, F.N. p.35
Curuti, 119
Cuttam, 2, 61

D

Dakṣiṇāmurti, 36
Darśana, 193
Dasakaryas, 29, 30, 162
Dāsamārga, 112, 156
Devadatta. V, 257
Dhanakoti, K.C., 105
Dhyāna, 202, 203
Dīkṣā, 32, 184
Dravya, 168
Dravyaleśya, 277
Driṣti dīkṣā, 232
Dṛṣtānta, 197

F

Four-mārgas, 156

G

Gaṇācāra, 180
Gangadaran, S. 63
Gommaṭasāra, 278
Guṇas, 126
Guru Gñāṇasambandhar, 37

H

Haṭha yoga, 202

I

Icchā Śakti, 23
Impersonal, 19
Individual Soul, 49
Iṉmai, 198
Iraṇṭu-the touch potential, 23
Iruṇtaviṉai, 70
Irupā Irupahtu, 13
Iruviṉaiyoppu, 7, 101
Iśāna, 22, 137
Iṣṭalinga, 180, 181
Iśvarabhāva, 241
Iśvara krishna, 200
Iyalpu, 198

J

Jalpa, 197
Jaṅgama, 105, 180, 181, 182
Jīvan-mukta, 35, 100
Jīvātmā, 100
Jñāna, 5, 28, 31, 38, 169, 214,249
Jñānamudra, 36
Jñāna Śakti, 23
Jñana yoga, 172
Jñānendriyās, 125, 185

K

Kaivalya, 3, 20
Kapilar

Karma, 5, 6. 36, 63, 67, 68, 72, 97, 120
Karma mārga, 157
Karmendriyās, 122, 185
Kāraikkāl Ammaiyār, 87
Karmayoga, 172
Kāmika, 112
Kaṇabhuj, 196
Kañjugas, 185
Kaṇmam. 1, 2, 3, 4, 9, 58, 103
Kāṇmiyam, 55
Kandasamy, S.N. 117
Kaṭuv aṇiḷaveyiṇaṇār, 129
Kalittokai, 218
Kaṭuvaṇ Ilaveyiṇaṇār, 224
Kiriyai, 5, 6, 31, 56, 113
Kolappa Pillai. R, 247
Koṭikkavi, 13, 79, 87
Kriyā, 249,, 251
Kriyāsakti, 23
Krpā, 171
Krṣna, 135, 171
Kumpa Karnan, 97
Kurma, 171
Kurmāvatāra, 135
Kuṟiñcippattu, 215
Kuṟuñ Kaḷinetil, 187

L

Leśya, 277, 278, 279, 282
Liberation, 1
Lingācāra, 179
Liṅkotpavar, 22
Lokāyata, 195

M

Mahat, 185
Maheśvara sthala, 152, 183
Maheswary. M. Arulchelvam 1
Mala-paripāka 7, 55, 101, 101
Mala, 26, 58, 66
Mamakāra, 188
Maṇavācakam Kaṭantār, 42
Maṇavāḷa Māmuṇikaḷ, 209
Māṇikkavācakar, 6, 14, 38, 93, 105, 251
Maṇimēkalai, 118, 194, 196
Mantra-upadeśa, 158
Maraiñāṇa Campantar, 84, 85
Maṟam, 97
Marapiyal, 222
Māyā, 3, 4, 6, 12, 22, 24, 27, 36, 58, 63, 64, 66, 68, 69, 72, 75, 185
Meikaṇṭa cāttiram, 41, 42, 49, 51, 53
Mīmāmsa, 131, 195
Mōkṣa, 33, 263
Mukti, 2, 65
Mūlādhāra, 105,
Mūlamantra, 174, 203
Mūlaviṇai, 55
Mumukṣu, 170, 172
Murukavel. Athi. 41
Mutanilai, 221
Muttappaṇ. P, 307
Muttiniccayam, F.N. 37, 38

N

Nacciṇārkiṇiyar, 247
Naimittikam, 107
NA MA ŚI VA YA, 60
Ñāṇam, 5, 10, 11, 31, 114
Ñāṇāmṛtam 63, 64, 75
Ñāṇaniṭṭai uṭaiyōr, 35
Nāstika, 193, 194, 195, 198
Nātamuṇikaḷ, 210
Ñātiru, 11
Navapadārtha, 259
Nāyaka-nāyakibhāva, 162
Neñcuviṭutūtu, 13, 79
Neṭuṅkaḷineṭil, 187
Nididhyā sana, 254
Nīlakēci, 118, 279
Nirghaṇṭa, 195
Nirguṇa, 17, 18, 187
Nirvāṇa dīkṣā, 75, 113
Niṣkala sakala, 21
Niyama, 202
Niyāyika, 198
Nyāya, 194, 195, 196, 197, 200

O

Omnipresent, 110
Oṉṟu, 122

P

Pācam, 16, 102, 110
Pacava Purāṇa Catakam, 186
Pacu, 16, 41, 45, 49, 51, 61, 110
Pacuñāṉam, 6, 7
Pacu-pati, 17
Pal-puruṣa, 122
Pañcākṣara, 158, 159, 160, 178
Pañcākṣara mantra, 41, 33
Pañcarātra, 133, 134
Pañcīkaraṇa, 223
Paramasivam, K. 141
Paramporuḷ, 82, 83
Parāpara, 21
Paripāṭal, 117, 118, 123, 125, 131, 132, 137, 138, 139, 205
Pariśeṣa, 198
Pāśa, 28, 63, 65, 82, 161
Pasu, 42, 43, 63, 82, 161, 185,
Patamuttis, 5
Pati, 16, 17, 19, 28, 63, 82, 110, 161
Paṭimai, 143
Paṭṭiṉattār, 248
Pēriṉpam, 248
Perumal, A.N. 269
Piracāta akaval, 204
Piraḻayākalar, 58
Pirāratta kaṉmam, 3, 9
Pōṟṟippahṟoṭai, 13, 53, 59, 79, 88
Prakriti, 5, 18, 127, 185, 208, 212
Pramāṇa, 197
Pramāta, 197
Prameya, 197
Pramiti, 197
Prāṇa, 8
Prāṇalingi, 182
Prāṇāyāma, 202
Prāraptam, 98
Prasāda, 182
Prasādi, 182
Pratijnā, 197
Pravritti, 3
Puṇṇiyam, 97
Puruṣa, 5, 127, 185, 207 212
Puruṣārtha, 167, 173
Pūrva Mīmāmsa, 194, 195
Rahasya-Traya, 173

R

Rajas, 17, 169, 212
Ramakrishna, 227, 236, 237, 240, 243
Rāmānuja, 31, 207, 210
Rāmānuja, 31, 207, 210
Ranganathan, R. 227
Rudra, 17, 18, 21
Rudrākṣi, 181
Rūpa, 21
Rūpārūpa, 21
Rupi, 20

S

Sadāśiva, 185
Sadaśivam, M. 177
Sādhana, 30, 201
Sadyojāda, 22
Sadyojyoti, 34
Saguṇa Brahman, 17, 18
Saha mārga, 157
Saiva Siddhāntā, 1, 4, 8, 18, 75, 98, 136, 195
Śakala, 21, 28, 65, 82
Śakti, 21, 23, 24, 28, 169, 269
Śaktinipāta, 101, 254
Sālokya, 31, 38
Samaya dīkṣā, 253
Sāmīpya, 31, 38
Sāmkhya 120, 121, 195, 200, 211, 214
Śaṅkara, 31, 35, 207, 208, 268
Sarīra-Sarīri bhāva, 171
Sārupa mukti, 114
Sārupya, 31, 38
Sat, 1, 28, 30, 99
Sat-asat, 52, 99
Sat cit, 37

Sat Kārya, 169
Satkāryavāda, 4, 201, 221
Satputra mārga, 156
Ṣaṭsthala, 182, 189
Sattva, 17, 169, 212
Sāyujyam, 38
Siddhānta Aṣṭakam, 79
Singaravelan, C. 151
Singaravelu, C. N. 91
Sivabhoga, 28, 30, 88
Śivācāra, 179
Śiva darśana, 30, 162
Śivāgamās, 31, 32, 38, 107
Śivam, 20, 21
Sivānubhāva, 184
Śivaprakāsa Swami, 199
Śiva yoga, 30, 88, 162
Soul, 48, 101, 108
Śrāvaka, 142
Subbu Reddiar, N. 167
Subramaniyan, K. 211
Svabhāva, 198
Svarūpa, 20, 21, 137

T

Tācamārkkam, 5
Tamas, 17, 18, 169, 212
Tanhā, 1
Tanmātras, 185
Tapas, 143, 202
Tarkka, 197, 198, 208
Tatpuruṣa, 22, 137
Tattva, 167
Tattuvappirakācar, 198
Tattuvarūpa, 30, 162
Tāyumāṇavar, 6, 31, 109
Thirugnanasambandham, 27
Three Jnāṇās, 161
Tirumañcana, 112
Tirumantiram, 41, 105, 174, 203
Tirumūlar, 38,
Tirumurukārṟuppaṭai, 133, 142
Tiruñāṇa campantar, 84, 86, 93, 98
Tirunāvukkaracar, 93, 94
Tirunūṟṟantāti, 257
Tiruvācakam, 93
Tiruvaruṭpayaṇ, 2, 13, 52,79,88
Toṇṭu, 124
Tri-guṇas, 18
Tiriyam, 8

U

Umāpati Civācāriyār, 13, 36, 52, 75, 79, 81, 88, 198
Uṇmai, 82, 84, 198
Uttara Mimāmsa, 194, 196, 206
Uyarntōṇ, 147

V

Vācaspati miśra, 200
Vākai, 217
Vaiśeṣika, 193, 194, 195, 196, 200, 201
Vaiṣnavism, 167
Vākīca Muṇivar, 64, 65, 68, 75
Vāmana, 135, 170
Vaṭakalai, 175
Vātsyāyana, 197
Vatulāgama, 37
Vedānta, 8
Vetam, 84, 119
Vibhava, 134, 135, 170, 171
Vibhūti, 181, 201
Vidyā, 185
Vijñāna, 8
Viṇai, 58, 59, 62
Viñāṇakalar, 58
Vīraśaivism, 177, 184, 199
Vīrya, 169, 170
Viṣeṭa, 113
Viśiṣtādvaitam, 16, 167
Viśvarūpa, 19
Vītu, 2, 11
Vijayalakshmy, R. 277
Vyāpi, 2
Vyūha, 134, 170

Y

Yoga, 5, 6, 31, 113, 129,157,201, 249, 251

தமிழ்

அகங்காரம், 48
அருணைவடிவேல் முதலியார் சி. 283, 231
அருவுரு, 21
ஆன்மா, 46, 47
இருவினையொப்பு, 55
உடனாதல், 97
உலகாயதம், 233
உறக்க நிலை, 55
ஐந்தவத்தை, 55
சாமீபம், 56
சாரூபம், 56
தரிசனங்கள், 283
திருமூலர், 320, 221, 322, 323
தூலமாயை 18
நனவுநிலை, 55
நியாயம், 284
பஞ்சகிருத்தியம், 284
பஞ்சேந்திரியம், 325
பதமுத்திகள், 56
பாசம், 321
பரமுத்தி, 56
புத்தி, 48
பேரூறக்கநிலை, 55
மலபரிபாகம், 55
மானம், 48
மாயை, 283
மீமாஞ்சை, 284
முத்தப்பன். பழ, 307
மெய்கண்டார் 16
வரதராசன். ப.
வீராசாமி, தா. வே.

நிறுவன வெளியீடுகள்

1.	எண்பதில் தமிழ்	45	00
2.	பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள்	8	00
3.	தமிழர் ஆடைகள்	16	00
4.	தமிழர் கண்ட மனம்	9	00
5.	தமிழர் நாட்டுப்புறக் கலைகள்	10	00
6.	தமிழர் நாட்டு விளையாட்டுகள்	14	00
7.	தமிழர் உணவு	12	00
8.	தமிழர் தோற்கருவிகள்	10	00
9.	தமிழும் தமிழரும்	5	00
10.	Language & Grammar (Heritage of the Tamils)	22	00
11.	Cultural Heritage of the Tamils	20	00
12.	Literary Heritage of the Tamils	50	00
13.	தொல்காப்பியம்—சிறப்புப்பாயிரம்	10	00
14.	தொல்காப்பியம்-உரைவளம்-நூன்மரபு	9	00
15.	தொல்காப்பியம்-உரைவளம்-மொழிமரபு	9	00
16.	தொல்காப்பியம்-உரைவளம்-பிறப்பியல்	8	00
17.	தொல்காப்பியம்-உரைவளம்-புணரியல்	10	00
18.	தொல்காப்பியம்-உரைவளம்-மரபியல்	10	00
19.	தொல்காப்பியம்-உரைவளம்-தொகைமரபு	8	00
20.	தொல்காப்பியம்-உரைவளம்-கிளவியாக்கம்	20	00
21.	தொல்காப்பியம்-உரைவளம்-உருபியல்	8	00
22.	தமிழ் இலக்கியக் கொள்கை-தொகுதி-3	8	00
23.	தமிழ் இலக்கியக் கொள்கை-தொகுதி-5	12	00
24.	தமிழ் இலக்கியக் கொள்கை-தொகுதி-6	10	00
25.	தமிழ் இலக்கியக் கொள்கை-தொகுதி-7	15	00
26.	கூவநூல்	7	00
27.	மனைநூல்	15	00
28.	பிரபந்தத்திரட்டு	10	00
29.	தத்துவனப்புராணம்	15	00
30.	திருக்குருகூர் திருவேங்கடநாதன் பிள்ளைத்தமிழ்	7	50
31.	சின்ன மகிபன் குளுவ நாடகம்	5	00
32.	பணவிடுதூது	6	00
33.	கருவூரார் பலதிரட்டு	12	00
34.	சுவடியியல் பயிற்சி-கையேடு	6	00
35.	கும்மிப் பாடல்கள்	16	00
36.	பிரபந்த தீபிகை	12	00
37.	கண் மருத்துவம்	50	00
38.	தமிழில் வடுகதைகள்	12	00
39.	அடியார்க்கு நல்லார் உரைத்திறன்	12	00
40.	உலகத்தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?	6	00
41.	The Tamil Writers Directory	10	00
42.	Tamil Research through Journals	7	00
43.	Dr. MU. VA.	0	00
44.	Dissertations on Tamilology	10	00
45.	Tirumurugan	5	00
46.	Epigraphical Evidence for Tamil Studies	10	00
47.	A Study of Perunkatai	12	00
48.	Tamil Drama	20	00
49.	Papers on Tamil Studies	15	00

இயக்குநர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
டி.டி.டி.ஐ. தரமணி, சென்னை—600 113.

Wrapper Printed at PONMANI ART PRINTERS, MADRAS-5.